

கல்கி
KALKI 28.6.98 ரூ. 4.50
புயலுக்கு
முன்னே அமைதி?

எல்லா முதலீட்டு வடிவங்களையும் மிஞ்சும் திறன் கொண்ட நீண்டகால வளர்ச்சிக்கு.



சென்செக்ஸ் உள்ளடக்கிய முதல் 30 எல்லா ஸ்டாக்குகளையும் நீங்கள் வாங்கலாம்.

அல்லது

இதில் முதலீடு செய்யலாம்

யூடிஐ மாஸ்டர் இன்டெக்ஸ் பண்ட்

அறிமுகமாகிறது யூடிஐ மாஸ்டர் இன்டெக்ஸ் பண்ட் பிஎஸ்இ-30 சென்ஸிடிவ் இன்டெக்ஸ் (சென்செக்ஸ்)யை குறிவைக்கும் ஒரு எதிர்மறை நிர்வகிப்பு இன்டெக்ஸ் பண்ட்

பிஎஸ்இ சென்செக்ஸின் 30 பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம், இன்டெக்ஸ்களில் இப்பங்குகளுக்கு உள்ள மதிப்பைபொறுத்து சரியான விகிதத்தில் முதலீடு செய்து, யூடிஐ மாஸ்டர் இன்டெக்ஸ் பண்ட் முதலீட்டாளர்களுக்கு குறைவான ரிஸ்க்கில் மார்க்கெட் லாபம் வரும் வாய்ப்பை வழங்குகிறது அதுவும் மிகக் குறைவான ரூ.5,000/- முதலீடு செய்வதன் மூலம்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

தொடக்க திட்ட காலம் ஜூன் 1, 1998 முதல் ஜூன் 30, 1998 வரை

முக்கிய அம்சங்கள்: பிஎஸ்இ 30 சென்சிடிவ் இன்டெக்ஸ் (சென்செக்ஸ்) யின் பகுப்பிரிதியான ஒரு நிறந்த முடிவுடைய எதிர்மறை இன்டெக்ஸ் பண்ட் • திரட்டப்படும் பணம், பிஎஸ்இ 30 சென்செக்ஸ் அடங்கிய நிறுவனங்களின் இன்டெக்ஸ் பங்குகளில் குறைந்த பட்ச தவறில் இன்டெக்ஸை பின்பற்றும் வகையில் பிஎஸ்இ 30 சென்செக்ஸின் அதே விகித அளவில் முதலீடு செய்யப்படும். (குறைந்த பட்ச தவறு என்பது இன்டெக்ஸ் பண்ட் மற்றும் சென்செக்ஸுக்கு இடையேயான வித்தியாசம்) • தொடக்க திட்ட காலமான 30 நாட்களில் அதாவது 1, ஜூன் 1998 முதல் 30, ஜூன் 1998 வரை யூனிட்டுகள் ரூ.10/-யில் விற்கப்படும். • தொடக்க திட்ட காலம் முடிந்த 3 மாதங்களுக்கு பின்னர் விற்பனை மற்றும் மறுகொள்முதலுக்கென விலையானது நிகர அடிப்படையிலான என் ஏ வி அடிப்படையில் எவ்வித விற்பனை லோடும் இல்லாமல் இருக்கும். மறுகொள்முதல் விலையானது நிகர என் ஏ வியின் 3% த்திற்கு அதிகப்படாத தள்ளுபடியில் இருக்கும். • திட்டத்தின் என் ஏ வியானது நிகர அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். • குறைந்தபட்ச முதலீடு ரூ 5,000/-. அதிகபட்சத்திற்கு வரம்பு இல்லை • வருமானவரி சட்டம் 1961-யின் 48 & 112யின் கீழ் வரிச்சலுகை. • மற்றும் 54 EA/54 EB யின் கீழ் முதலீடுகளுக்கு வரி விலக்கு.

சாதக பாதகங்கள்: மியூச்சுவல் பண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் எல்லா முதலீடுகளும் சந்தையின் சாதக பாதகத்திற்கு உட்பட்டவையே. பங்கு சந்தையை பாதிக்கும் காரணிகளைப் பொறுத்து பண்டின் என் ஏ வி ஏறவும் இறங்கவும் செய்யலாம் • திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் என்பதற்கு எவ்வித நிச்சயமும் உத்தரவாதமும் இல்லை • முன்னர் செயல்பாடுகள் எதிர்கால பலன்களுக்கான உத்தரவாதம் இல்லை • மாஸ்டர் இன்டெக்ஸ் பண்ட் என்பது திட்டத்தின் பெயரே. இதற்கும் பண்டின் தன்மை அதன் எதிர்கால பலன்கள் மற்றும் வாய்ப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. • சென்செக்ஸின் அடக்கமானது பிஎஸ்இ-யின் நோக்கத்தை பொறுத்து மாற்றத்திற்கு உட்பட்டது • இன்டெக்ஸின் செயல்பாடானது பண்டின் செயல்பாட்டுடன் நேரடி தொடர்புடையது • தவறு கணக்கீடும் பண்டின் செயல்பாட்டில் தாக்கத்தை உண்டாக்கலாம். • முதலீடு செய்யும் முன்னர் தயவு செய்து ஆஃபர் டாகுமென்டை படிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, **சென்னை** 600 001. போன் : 517101.

கிளை அலுவலகங்கள் : • **கோயம்புத்தூர்** போன் : 214973 • **சென்னை** போன் : 517101, 517190 • **மதுரை** போன் : 38186 • **திருச்சி** போன் : 750060

050/98 C TAM B

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை

ஏழை மாணவர்களுக்கு உதவி: ரூ. 90,000/-

சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதை விட, இந்தக் கல்வி ஆண்டுக்கு (98 - 99) ரூ. 10,000/- அதிகரித்து, மொத்தம் ரூ. 90,000/- உதவித் தொகை வழங்கப் படவிருக்கிறது. இது பின்வருமாறு விநியோகமாகும்:

- ஒருவருக்கு ரூ. 1500 வீதம் ஆறு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாண வருக்கு : ரூ. 9000
- ஒருவருக்கு ரூ. 1500 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் இரு மாண வருக்கு : ரூ. 3000
- ஒருவருக்கு ரூ. 1000 வீதம் 30 கல்லூரி மாணவருக்கு : ரூ. 30,000
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 44 மேல்நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவருக்கு : ரூ. 33,000
- ஒருவருக்கு ரூ. 600 வீதம் 25 உயர்நிலைப் பள்ளி மாணவருக்கு : ரூ. 15,000



இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாண வர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகையைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும்.

★ தபால் மூலம் மட்டுமே அனுப்பலாம்.

★ அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

★ படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைப் பின் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்.

★ மேற்கூறியவற்றை உறுதிப்படுத்த கல்வி நிலயத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.

★ சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 1998

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர், கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,

நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com *ஈ மெயில் :* kalki@md2.vsnl.net.in

பேசினால் தீருமா

தமிழ்நாட்டில் குழந்தைகள் பராமரிப்பு - சேவைக்காக TN Forces என்றொரு கூட்டமைப்பு இருக்கிறது. லயோலா கல்லூரியின் சமூகப் பணித்துறையை அமைப்பாளராகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பில் எழுபத்தைந்து நிறுவனங்கள் உறுப்பினர்களாக இருக்கின்றன.

உழைக்கும் அடித்தட்டு மகளிரின் குழந்தைகளின் நலன் மேல் பிரத்தியேக கவனம் செலுத்தும் இவ்வமைப்பு, சமீபத்தில் ஒரு பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சத்துணவுக் கூடம், அங்கன்வாடி, பால்வாடிகளில் பணிபுரியும் பெண்கள் இங்கு பேச வந்திருந்தார்கள். எத்தனை விதமான பிரச்னைகள் அவர்களுக்கு!



• மேடையில்...

அகில இந்தியப் பெண்கள் கழகத் தலைவர் மோகினி கிரி பேசிய போது, "உஜ்ஜயினிக் குப்பத்தில் 10 - 12 வயதுப் பெண் குழந்தைகள் சாலையில் நின்று கொண்டிருந்தார்கள். ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்கப் போனபோது கிடைத்த பதில்: '(விபசாரத்தில் ஈடுபட்டிருக்கும்) எங்கள் தாயாருக்கு கிராக்கி பிடிக்க நின்று கொண்டிருக்கிறோம்!' என்றார்கள். நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டார்.

"குழந்தைகளை கவனிக்க நேரமில்லாமல் விட்டுவிட்டு வேலைக்குப் போய்விடுகிறோம். அவர்களுக்கான பால்வாடி ஏதும் அருகே இல்லை. கொஞ்ச நாள் முன்பு இங்கே குடியிருப்புப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. நாலு குழந்தைகள் கவனிப்பாரற்று எரிந்து போயின. ஓட்டமாக ஓடியதில் வேறு இரண்டு குழந்தைகள் பேருந்தில் அடிபட்டு இறந்து விட்டன..."

- மரத்தடியையே இருப்பிடமாகக் கொண்ட சரஸ்வதி என்ற பெண் சொன்னது இது. இவர் அன்னை சத்யா நகரில் வீட்டு வேலை செய்து வாழ்க்கை நடத்துபவர்.

பேப்பர் பொறுக்கும் அண்ணா நகர் நாகரத்தினம் பேசும்போது, "காலை ஆறு மணிக்குக் கிளம்பிப் போய் மதியம் ஒரு மணிக்கு வருவோம். பேப்பர் விற்றுப் பணம் கிடைத்திருந்தால்தான் அன்றைய உணவு. இப்படி நாங்கள் அலையும் போது எங்கள் சிறு குழந்தைகளை எங்கு, யார் பொறுப்பில் விட்டுச் செல்வது? பால்வாடி, பால்வாடி என்கிறார்கள். எங்கே இயங்குகிறது அது? சற்று வளர்ந்த குழந்தைகள்தான் சிறிய குழந்தைகளைப் பார்த்துக் கொள்கின்றனர். எங்கள் வார்டு கவுன்ஸிலரைப் போய்ப் பார்த்து நியாயம் கேட்டோம். எங்களை அடிக்க குண்டர்கள் வந்து விட்டார்கள்! ஒருமுறை முதல்வர் கலைஞர் காரைக் கூட வழிமறித்து மனு தந்தோம். இதுவரை ஒரு பயனும் இல்லை."

காஞ்சிபுரம், சேலம் பகுதியில் விசைத்தறியில் வேலை பார்க்கும் பெண்கள் பேசியது நெஞ்சை உருக்கும் விதமாக இருந்தது.

"பன்னிரண்டு மணி நேர ஷிப்ட் என்ற அடிப்படையில் பெண்களும் குழந்தைகளும் இங்கே கூலிக்கு நெசவு வேலை பார்க்கிறார்கள். பஞ்சுத் தும்பை (தூசு) சுவாசித்து, சுவாசித்து பல குழந்தைகள் காசநோயாளிகளாகி விட்டார்கள். தகப்பன் குடித்து, கடனாளியானால் மனைவியையும் குழந்தைகளையும் கொத்தடிமைகளாக்கி விடுகிறார்கள். கொத்தடிமைகளாகி உழைக்கிற பெண்களுக்கு, முதலில் தம் கற்பைக் காத்துக் கொள்வதே தலையாய கவலையாக இருக்கிறது" என்றார் குமாரபாளையம் தேன்மொழி.

கட்டடத் தொழிலாளர்கள், விவசாயக் கூலி வேலை பார்ப்பவர்களின் பிரச்னை வேறு. காலை ஆறு மணிக்குச் சென்றால் தான் அவர்களால் வேலை 'பிடிக்க' முடியும். பால்வாடி திறப்பதோ பத்து மணிக்கு மேல். மூன்று மணியானால் மூடி விடுவார்கள். எனவே இவர்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்ல வழியின்றி, சேற்றிலும் கண்ணாம்பிலுமாக விளையாட விட்டுப் போய்விடுகிறார்கள்.

"நாங்கள் தட்டிலே சோறு போட்டு விட்டுப் போவோம். ஒரு பக்கம் நாய் சாப்பிடும். ஒரு பக்கம் குழந்தை சாப்பிடும்" என்றார் தஞ்சையைச் சேர்ந்த பத்மா.



• வந்திருந்த பெண்கள்

பிரச்னை?

அரசு மருத்துவமனைகளின் அவல நிலையைச் சிலர் காட்டமாக எடுத்துக் காட்டினார்கள். "மருத்துவ முகாம்கள் நடத்தி, தடுப்பூசி போடுகிறார்கள். ஆனால் எங்குமே டிஸ்போஸபிள் ஸிரெஞ் கிடையாது! எயிட்ஸ் பயம் இருப்பதால் சிலர் சண்டைக்கு வருவார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? சட்டியில் இருந்தால் தானே?" என்று கேட்டார் தாய் சேய் நல – சுகாதாரப் பணியாளர் கோமதி.

அரசாங்கத்தின் திட்டங்கள் அடித்தட்டு மக்களைச் சென்று சேர்வது இல்லை. உதாரணமாக ஏழைப் பெண்கள் திருமணத்துக்கு ரூ. 10,000 அரசு உதவித் தொகை உண்டு. இது எத்தனை பேருக்குக் கிடைக்கிறது? அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பல பெண்களிடம் நாம் விசாரித்தோம். யாருக்கும் இப்படியொரு திட்டம் இருப்பதே தெரியவில்லை! ஸ்ரீதர் என்கிற ஓர் ஓட்டுனர் மட்டும் தமது சகோதரியின் திருமணத்துக்கு இந்த உதவித் தொகையைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்.

எப்படி?

ஸ்ரீதர் 'கட்சி'க்காரர்.

ஏழைப் பெண்களின் பிரசவத்துக்காக அரசு வழங்கும் 500 ரூபாயை இதுவரை தாங்கள் யாருமே பெறவில்லை என்று வந்திருந்த அத்தனை பெண்களும் கூறினார்கள்.

பொது விசாரணைக்கு, அரசுத் தரப்பிலிருந்து வந்திருந்த அதிகாரிகள் விஜயகுமாரும், ராமச்சந்திரனும் பேசியதில் 'இயலாமை'தான் பளிச்சென்று தெரிந்தது.

ஒரே ஓர் ஆறுதல். நம் பெண்கள் தைரியமாகப் பேசுவதற்கேனும் முன்வந்திருக்கிறார்கள், இப்போது!

— அகிலா கிருஷ்ணன்

"இப்ப நடிச்சிக்கிட்டிருக்கிற மூணு படங்கள்லயும் ரொம்ப மாறுபட்ட கேரக்டர்ஸ். 'கல்யாண கலாட்டா'வுல மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பொண்ணோட கேரக்டர். 'வீரம் விளைஞ்ச மண்' படத்துல இருபதிலிருந்து அறுபது வயசுக்கு இடைப்பட்ட கேரக்டர். சுந்தர் சி. டைரக்ட் பண்ற படத்துல சத்யராஜோட பிரெண்டா நடிக்கிறேன் - குருட்டுப் பொண்ணாக! கிளாமரா, ஜாலியா நடிக்கிறதெல்லாம் போயே போச்சு" என்று பெரிதாய்ச் சிரித்தார் குஷ்பு. 'கல்யாண கலாட்டா'வில் மட்டும் ஒரே ரகளையான நடிப்பாம். முழு நீள காமெடியில் கலக்கியிருப்பதாய்ச் சொன்னார். சமீபத்தில் குஷ்பூ விழுந்து விழுந்து பார்த்த படம் 'டைட்டானிக்'. ஐந்து தடவை பார்த்தாராம்.

சுடச்சுட படத்தை எடுத்துக் கொடுக்கிறவர் என்று பெயரெடுத்த கேயார், இப்போது போணியாகாத படங்களையே அவசர கதியில் சுருட்டிக் கொடுத்து விடுகிறார் என்ற அவப்பெயருக்கு ஆளாகியிருக்கிறார். நீண்ட நாள் பெட்டியில் கிடந்த பின் வெளிவந்தது 'கவலைப்படாதே சகோதரா'. வந்ததும் தெரியவில்லை. போனதும் தெரியவில்லை. 'காதல் ரோஜாவே', 'கும்ப கோணம் கோபாலு' - இரு படங்களும் முடிந்து பல வருடங்களாகியும் ரிலீஸாகாமல் இருக்கின்றன. விஜய்காந்தின் 'தர்மா' படத்தையும் படு ஸ்பீடில் முடித்தார். படம்தான் வெளி வரக் காணோம். இந்தியில் சன்னி தியோல் நடித்த 'ஜிட்டி' படத்தின் ஜெராக்ஸ் காப்பி தான் 'தர்மா'. இது ஒரிஜினல் கதாசிரியருக்கு எப்படித் தெரிந்ததோ, அவர் கோர்ட்டுக்குப் போக - கேயாரும் இப்போது



• குஷ்பு



• சங்கவி

கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

சின்னத்திரை நாயகியாய் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் வினோதினிக்கு இப்போது பத்திரிகைகாரர்கள் மேல் மகாகோபம். கல்யாணம் பண்ணிக் கொண்டு செட்டிலாகப் போகிறார் என்று தொடர்ந்து செய்திகள் வர, வினோதினி நொந்து போனார். “என்ன சார் இது. இப்படி செய்தி வந்தா என்னை யாராவது படத்துக்கு ‘புக்’ பண்ண வருவாங்களா? இருக்கிற பட வாய்ப்பையும் கெடுக்கற மாதிரி நியூஸ் போட்டா யாராலதான் பொறுத்துக்க முடியும்? ஏதோ இப்பத்தான் ஒரு மாதிரி செட்டில் ஆயிட்டிருக்கேன். அது பொறுக்கல, இந்த பத்திரிகைக்காரங்களுக்கு. கல்யாணம் பண்ணிக்கிற வயசெல்லாம் இன்னும் எனக்கு வரலை சார்” என்று பரிதவித்தார் வினோதினி.



• சின்னதுரை : ரோஜா, சித்தாரா

(நிஜமாவா)


பெங்களூரில் போய் செட்டிலாகிவிட்ட சித்தாரா தமிழ்ப் பட வாய்ப்புகள் என்றால் பலமாக மறுத்து, தலையாட்டிக் கொண்டிருந்தார். கன்னடப் படங்களில் வாய்ப்புகள் குறையவே அக்னி வெயில் என்றும் பாராமல் சென்னைப் பக்கம் வந்து எட்டிப் பார்த்தார். வந்தவருக்கு ‘சின்ன துரை’யில் சரத்குமாரோடு நடிக்கும் வாய்ப்பு. உடனே, பொள்ளாச்சிக்கு ரயிலேறி விட்டார். சித்தாரா இங்கிருந்தபோது சாமியாராகி விட்டார், காணாமல் போய் விட்டார் என்றெல்லாம் ஏகப்பட்ட செய்திகள். இப்போது நிலைமை எப்படி? தான் உண்டு, தன் தொழில் உண்டு. விவகாரங்களுக்கெல்லாம் பிரியாவிடை கொடுத்து விட்டார். எந்தக் குழப்பமுமில்லாமல் தெளிவாய் இருக்கிறார். சித்தாராவைப் பற்றி ‘சின்னதுரை’ யூனிட் தந்த தகவல்கள் இவை.

சீறுகிறார் சங்கவி!

‘**நி**லாவே வா’ படத்தின் படப்பிடிப்பில் இருந்தார் சங்கவி. முகத்தில் கொஞ்சம் கூட மலர்ச்சி இல்லை. முகம் முழுக்க கோபம்தான். கோபத்தைத் தணிக்கலாம் என்று பேச்சுக் கொடுத்தால் இன்னும் கொஞ்சம் கோபம் தலைக்கேறியது. தமிழ் சினிமாவை உண்டு இல்லை என்று ஒரு வழி பண்ணி விட்டார். “இவ்வளவு சீக்கிரத்துல இங்கேயிருந்து என்னை இப்படி தூக்கி கடாசிடுவாங்கன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை. எங்கிட்ட பழகினவங்கள்லாம் இனிக்க இனிக்கப் பேசினாங்க. இப்ப என்னைப் பார்த்தா முகத்தைத் திருப்பிக்கிறாங்க. நன்றி கெட்ட ஜென்மங்க. தெலுங்கு பீல்ட் எவ்வளவோ பரவாயில்லை. ஆனா, இனி என்னை யாரும் ஏமாத்த முடியாது. தமிழ் சினிமாவுல நிறைய கத்துக்கிட்டேன்” – தனக்குத் தெரிந்த தமிழில் பொரிந்து தள்ளிய சங்கவிக்கு ‘நிலாவே வா’ படத்தில் தொட்டுக் கொள்ள ஊறுகாய் மாதிரியான கிளாமர் கேரக்டர். ஒருவேளை அதனால் வந்த கோபம்தானோ? ●

— மஹேந்த்

"செஸ் ஆடினால் எடை குறையும்!"



"சசிகிரணின் விளையாட்டைத் தொடர்ந்து நான் கவனித்து வருகிறேன். எதிர்காலத்தில் மிகச் சிறப்பானதொரு இடத்தை அவர் பெறுவார் என்பதில் சந்தேகமில்லை."

இன்டர்நேஷனல் செஸ் மாஸ்டர் சசிகிரணைப் பற்றி கிராண்ட் மாஸ்டர் விஸ்வனாதன் ஆனந்த் சொன்னது இது.

இன்று இந்திய செஸ் விளையாட்டில் சசிகிரண் என்ற பெயர் தவிர்க்க முடியாதது. எந்த ஊரில் போட்டிகள் நடந்தாலும் அங்கு சென்று தன் முத்திரையைப் பதிக்கிறார் சசிகிரண்.

இந்திய செஸ் வீரர்களிடையே உள்ள ரேட்டிங் (Rating) படி சசிகிரண் பெற்றுள்ள புள்ளி 2470. ஆனந்த், பருவா, திப்ஸேக்கு அடுத்தபடியாக இருக்கிறார் சசி. தேசிய 'ஏ' போட்டியில் கலந்து கொண்டு ஆறாவது இடத்தைப் பெற்றார். இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவில் நடக்கும் போட்டிகளிலும் கலந்து கொண்டு சக்கைப் போடு போடுகிறார் சசி!

நாம் சந்திக்கும் போது ஸ்பெயின் நாட்டில் நடக்கவிருக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள தயாராகிக் கொண்டிருந்தார். நேரம் கிடைக்கும்போது தமது பி.ஸி.யில் ப்ரோக்ராம் செய்யப்பட்டுள்ள லட்சக் கணக்கான செஸ் விளையாட்டுக்களைப் போட்டுப் பார்க்கிறார். இது தவிர பிரபல ஆட்டக்காரர்களின் விளையாட்டுக்கள், தாம் கலந்து கொண்ட போட்டிகள், அதில் செய்த தவறுகள் என்று அலசி ஆராய்கிறார்.

"இன்றைய சூழ்நிலையில் செஸ்ஸும், கம்ப்யூட்டரும் இணைந்து செயல்படுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று" என்கிறார் சசி.


சசியின் செஸ் ஆர்வம் 'விளையாட்டாய்'த்தான் துவங்கியது. அப்பா கிருஷ்ணன் ரிஸர்வ் வங்கி ஊழியர். செஸ் வீரர். ஏராளமான செஸ் புத்தகங்களை படித்துக் கொண்டிருப்பார். ஆறு வயது சசிக்கு அதில் ஒரு ஈடுபாடு தோன்றியது. அப்பாவுடன் துவங்கியது விளையாட்டு. தோல்விகளால் அவன் துவண்டு-விடவில்லை. பெங்களூரில் எட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் கலந்து கொண்ட போட்டிதான் முதலாவது.

அதன் பிறகு எத்தனையோ போட்டிகள், எத்தனையோ வெற்றிகள்; தோல்விகள். நங்கநல்லூர் மாடர்ன் பள்ளிக்கு சசிகிரணால் பெருமை. 24 மணி நேரமும் கோக் விளம்பரம் போல செஸ்ஸையே சாப்பிட்டு, குடித்து வாழும் சசியை 'எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது பள்ளிக்கு வந்தால் போதும்' என்று சொல்லி விட்டார்கள்!

அப்பா – அம்மாவுக்கு பையனின் +2 படிப்பு தடுமாறுகிறதே என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும், 'செஸ்'ஸில் அவனது சாதனைகள் இன்னும் ஊக்கமளிக்க வைக்கின்றன.

"துவக்கத்தில் என்னிடம் தோற்ற சசி, பல வருடங்களுக்கு முன்பிருந்தே என்னை வெற்றிகொள்ளத் துவங்கி விட்டான். இப்போதெல்லாம் எங்கோ போய் விட்டான்! அவனுக்கு நான் கோச்சாகவும், தந்தையாகவும் இருப்பது பல விதங்களில் வசதியாக இருக்கிறது" – பெருமையுடன் சொல்கிறார் கிருஷ்ணன்.

தம் சொந்தச் செலவில், கனடாவில்



இந்த வார இளைஞர் — சசிகிரண்

நடந்த போட்டிக்குப் பையனை அனுப்பி வைத்தவர் கிருஷ்ணன். ஒரே பையனான சசிக்குத் தம் சேமிப்பு முழுவதையும் செலவழித்திருக்கிறார்!

"என்னோட லட்சியமே கிராண்ட் மாஸ்டராக வருவதுதான்" என்கிறார் சசி. உலகம் முழுக்க கிட்டத்தட்ட 500 கிராண்ட் மாஸ்டர்கள் இருக்கிறார்களாம். செஸ் வீரர்களுக்கெல்லாம் அதுதான் இலக்கு. பள்ளியில் சக மாணவர்களுக்கு சசி ஒரு இன்ஸ்பிரேஷன். அவனைத் தொடர்ந்து பல மாஸ்டர்கள் அங்கு உருவாக இருக்கிறார்கள்.

"செஸ் விளையாட்டில் மூளைக்குத்தான் வேலை என்று பலர் நினைப்பார்கள். அது தவறு. மூளை செய்யும் எக்ஸ்ட்ரா வேலையால் உடல் எடையில் பாதிப்பு வரும். ஒவ்வொரு போட்டி முடிந்ததும், ஒன்றிரண்டு கிலோ எடை குறைந்து போகும்" என்கிறார் சசி. போட்டிகளுக்குக் கிளம்பும்போது சசியின் 'கிட்'டோடு விபூதி டப்பாவும் பிள்ளையார் படமும் இல்லாமல் இருக்காது.

"விபூதி இட்டுக் கொண்டு தொப்பி போட்டுக் கொண்டு விளையாடுவது என்பது என் பழக்கம். இதை ஒரு சென்டிமென்ட் என்று 'மற்றவர்கள்' சொல்கிறார்கள்" என்று டிப்ளமேடிக்காகத் தன் சென்டிமென்டைப் பற்றிச் சொல்கிறார்.

ஸ்பெயினில் நடக்க இருக்கும் போட்டிகளுக்குப் பையனை அனுப்ப யாராவது ஸ்பான்ஸர் கிடைப்பார்களா என்று தேடி அலைந்து, சோர்ந்து போன சமயத்தில்தான் கோடை மழையாய் அந்தச் செய்தி வந்தது. 'டி-ஸ்கொயர் சாஃப்ட்வேர்' நிறுவனம் ஸ்பான்ஸர் செய்ய முன்வந்தது. அந்த நிறுவனத்துக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை" – நெகிழ்கிறார் கிருஷ்ணன்.

சசிகிரண் போல் எத்தனையோ இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் சாதனையாளர்களாகத் தடம் பதிக்கக் கூடியவர்கள்-பயணத்துக்கும் பயிற்சிக்கும் சொந்தத்தில் செலவு செய்ய வசதியில்லாமல் இருக்கக்கூடும்... டி-ஸ்கொயர், மெட்ராஸ் சிமென்ட்ஸ், எம்.ஆர்.எஃப் போன்ற தனியார் நிறுவனங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தனி நபர்களுக்கு உதவி வருகின்றன. நன்கொடைகள் அளித்து ஒரு வைப்பு நிதி உருவாக்கி அதிலிருந்து பெறக்கூடிய வட்டியை தகுதியுள்ள இளைஞர்களுக்கு உதவித் தொகையாக அளிக்கலாமே!

— ஸ்ரீநிவாசன்

மேற்கு மாம்பலத்தில் உள்ள தமது வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்து கொண்டு, ஜெ.யின் தினப்படித் தொந்தரவுகள் உட்பட பல்வேறு விஷயங்களைப் பற்றி கல்கிக்கு பேட்டி அளித்தார் பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய துணைத் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி...



"அரசை தர்மசங்கடப்படுத்துவது ஜெ.வின் உரிமை!"

— ஜனா. கிருஷ்ணமூர்த்தி

"இந்தியா அணுகுண்டு சோதனை நடத்திய பிறகு, பிரதமர் வாஜ்பேயின் இமேஜ் வளர்ந்திருக்கிறது. ஆனாலும், தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் செயற்கையாய் ஒரு நெருக்கடி மாயை ஏற்படுத்தி, பா.ஜ.க. அரசு அணுகுண்டு சோதனை நடத்தியுள்ளது. உண்மையில் பாதுகாப்பு விஷயத்தில் எந்த நெருக்கடியும் நிலவவில்லை என்ற கருத்துக்கு உங்கள் பதில் என்ன?"

"அன்னியப் படையெடுப்புகளின்போது, நம் தேசத்து ராஜாக்கள் தோல்வியடைந்ததற்கு முக்கியக் காரணம் நம் மன்னர்களின் படையில் நவீன ஆயுதங்கள் இல்லாதது தான் என்பது சரித்திரம் சொல்லும் உண்மை. நாம் சுதந்தரம் அடைந்த பின்னரும்கூட, பாகிஸ்தான் மூன்றுமுறை இந்தியா மீது படையெடுத்துள்ளது. சீனா ஒரு தடவை படையெடுத்துள்ளது. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, 'பாகிஸ்தான் நம்முடன் தொடர்ந்து நிழல் யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணு ஆயுத சோதனை நடத்த, முழுமையாக உதவியது சீனாதான் என்பதும் தெரியவருகிறது. ஆக, தேசப் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என்று சொல்லவே முடியாது. இந்தியா தானாக யுத்தத்தில் ஈடுபடவோ, அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவோ முன் வராது என்று பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார். அணு ஆயுத சோதனை மூலம் நமது ராணுவத்தினரின் மனோபலம் (மொரேல்) பன்மடங்கு பெருகியுள்ளது என்பது உண்மை.

"இன்னொரு விஷயம். 74ம் வருடம், இந்திராகாந்தி, பொக்ரானில் அணு குண்டு சோதனை நடத்தியபோது வாஜ்பேயி, குறுகிய நோக்கத்துடன் விமர்சிக்காமல், மனம் திறந்து பாராட்டினார். அது போன்ற பரந்த மனப்பான்மை ஒரு சிலருக்கு இல்லை என்பதால் தான் இந்த விமர்சனம்."

"முந்நாள் பிரதமர்களான தேவ கௌடா, குஜ்ரால் இவர்கள் எல்லாம், 'அணு ஆயுதப் பரிசோதனை சம்பந்தமான ஃபைல் எங்களிடம்தான் இருந்தது; நாங்கள் நினைத்திருந்தாலும் இதை நடத்திக் காட்டியிருக்க முடியும்' என்று கூறுகிறார்களே?"

"நடத்தியிருக்க வேண்டியதுதானே! ஏன் நடத்தவில்லை? அவர்களுக்கு இவ்வளவு பெரிய சாதனையை மிக ரகசியமாய்த் திட்டமிட்டு, செயல்படுத்தும் 'Political will' இல்லை."

"அணு ஆயுதப் பரிசோதனையை வைத்துக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் விதமாய் இடைத் தேர்தல் நடத்தும் எண்ணம் பா.ஜ.க.வுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறதே!"

"அணு ஆயுதப் பரிசோதனைக்குப் பின்

கிடைத்த ஏகோபித்த மக்கள் ஆதரவு மிக இயற்கையானது. அரசியல் ஆதாயம் கருதி அது செய்யப்படவில்லை என்றாலும்கூட, இதனால் பா.ஜ.க.வுக்கு அனுகூலம் நிகழுமானால், அதை நாங்களே ஏன் தடுக்க வேண்டும்?"

"இவ்வளவு காலம் அயோத்தி விஷயத்தில் கோர்ட் தீர்ப்பை மதிப்போம் என்று கூறிவந்த பி.ஜே.பி., இப்போது கோர்ட் தீர்ப்பு சாதகமாக இல்லாது போனால், சட்டத் திருத்தம் கொண்டு வந்து, தீர்ப்பை செல்லுபடியாகாமல் செய்து விடுவோம் என்கிறதே, ஏன் இந்த



இடீர் முரண்பாடு?"

"ராமர் கோவில் கட்டுவோம் என்கிற பி.ஜே.பி.யின் கொள்கைக்கு இடையூறாக கோர்ட் தீர்ப்பு வருமானால், பாராளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, கோர்ட் தீர்ப்பை செல்லாததாக்கி, கோவில் கட்ட வழி இருக்கிறது. ஷாபானு விஷயத்தில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஷாபானுவுக்கு சாதகமாய் இருந்ததால், பாராளுமன்ற சட்டத் திருத்தம் மூலம், அதை செல்லாததாக்கினார் ராஜீவ்காந்தி. அதுபோல ராமர் கோவில் விஷயத்திலும் செய்யலாம் என்பதே பி.ஜே.பி.யின் கருத்து."

"ராஜீவுக்குப் பாராளுமன்றத்தில் முழு மெஜாரிட்டி இருந்தது. அவரால் செய்ய முடிந்தது. ஆனால் நீங்கள் மெஜாரிடிக்கே திணறும் நிலைதானே?"

"மெஜாரிடிக்குத் திணறல் இல்லை. இப்போது எங்களால் சட்டத் திருத்தம் செய்வது சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய வழி உள்ளது என்பதைத்தான் பி.ஜே.பி சுட்டிக்காட்டி இருக்கிறது."

"அ.தி.மு.க.வுடன் கூட்டணி பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியவர்களுள் முக்கியமானவர் நீங்கள். அந்த சமயத்தில், தேர்தலில் வென்று, ஆட்சிக்கு வந்தாலும், ஜெயலலிதாவால் பிரச்னை வரக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லையா?"

"தேர்தல் கூட்டணி பற்றிப் பேசியபோது, திறந்த மனத்துடன் நாங்கள் பேசினோம். உண்மையைச் சொல்கிறேன். அந்தப் பேச்சு வார்த்தைகளின்போது, அ.தி.மு.க. தரப்பிலிருந்து எந்தவிதமான நிபந்தனைகளும் போடப்படவில்லை. எனவே, எந்தவிதமான பிரச்னைகள் பற்றிய கேள்வியும் எழவில்லை!"

"தேர்தலில், அமோக வெற்றி பெற்ற பின், ஜெ. பிரச்னைகள் தருவார் என்று எதிர்பார்த்தீர்களா?"

"பா.ஜ.க.வும், கூட்டணிக் கட்சிகளும் அதிகபட்ச இடங்களைப் பிடிக்கிற சூழ்நிலையில், அதனால் பிரச்னை வருமோ என்று நாங்கள் ஏன் நினைக்க வேண்டும்? தென்னிந்தியாவில் மட்டும் பா.ஜ.க.வின் பலம் ஆறிலிருந்து இருபத்தி இரண்டாக உயர்ந்துள்ள சூழ்நிலையில் அந்தக் கேள்வியே எழவில்லை."

"ஆதரவுக் கடிதம் கொடுப்பதிலிருந்து ஆரம்பித்து அடுக்கடுக்காய் ஜெ.விடமிருந்து கட்டளைகள் வந்தனவே. அப்போதாவது உங்களுக்கு எரிச்சல் வந்திருக்குமே!"

"கூட்டணி ஆட்சி என்று இருந்தால் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது இல்லாத குழப்பமா? அப்போது மத்திய அரசின் செயலகங்கள் எப்படி முடிவெடுக்கத் திணறின என்பதை டெல்லி பத்திரிகையாளர்களைக் கேட்டால் தெரியும். அவர்களுக்கு ஒருவிதமான

"ஏதாவது ஒரு கட்சி, ஆதரவை வாபஸ் பெறுவதனால், பா.ஜ.க. ஆட்சி கவிழ்ந்து, தேர்தல் வருமானால், அந்தக் கட்சியை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்."



"எழுதி எழுதித் தள்ளறேன்னு சொல் நீங்களே, ஒரு மாசத்துக்கு எத்தனை கதை எழுதுவீங்க?"

"பத்து கிலோ!"

— சீர்காழி வி. ரேவதி

பிரச்னைகள் என்றால், எங்கள் கூட்டணிக்கு வேறு விதமான பிரச்னைகள். நாளை இன்னொரு கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் அதற்கும் பிரச்னைகள் வராமல் போகாது!"

"அப்புறம் இதற்கு என்னதான் தீர்வு?"

"எந்தவிதமான பிரச்னைகள் வந்தாலும், எல்லாவற்றையும் திறமையுடன் சமாளித்து, நிலையான ஆட்சியளிக்கும் வலுவான பிரதமர் வாஜ்பேயி என்பது மட்டும் உறுதி."

"ஜெயலலிதாவை சமாதானப்படுத்துவதே ஜஸ்வந்சிங்கிற்கு ஒரு பணி என்பது போல இருக்கிறதே!"

"அப்படியெல்லாமில்லை. தேசிய செயல் திட்டம் உருவாக்கிய கூட்டம் வரையே ஜஸ்வந்த் ஜெவை சந்தித்தார். அதன்பின் அவர் சென்னை வரவில்லை என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்."

"தினமும் அ.தி.மு.க. எம். பிக்கள் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்கிறார்கள். ஆளும் கூட்டணியைச் சேர்ந்தவர்களே வெளிநடப்பு செய்வது சரியில்லையே!"

"பாராளுமன்றத்தில் அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்வது உண்மைதான். ஆனால் அந்த வெளிநடப்பு ஆளும் கூட்டணிக்கு - பா.ஜ.கவுக்கு எதிராக அல்ல; தமிழக ஆளும் கட்சிக்கு எதிராகத்தான் என்பதைத்தான் அ.தி.மு.க.வே தெளிவுபடுத்தி விட்டதே! அப்புறம் நாங்கள் ஏன் அது பற்றித் தவறாய் எடுத்துக் கொள்ள வேண்டும்?"

"தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று அ.தி.மு.க.வினர் தினமும் சொல்கிறார்கள். பா.ஜ.க.வைச் சேர்ந்த அமைச்சர் ரங்கராஜன்கூட அதை வலியுறுத்துகிறாரே?"

"ஒரு ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கோரும் உரிமை எந்த அரசியல் கட்சிக்கும் உண்டு. பீகார் மாநில பி.ஜே.பி. கூட ராப்ரி தேவி அரசைக் கலைக்க வேண்டும் என்று வற்புறுத்தினாலும் வற்புறுத்தட்டுமே! அது அவர்கள் உரிமை! ஒரு மாநில அரசை அரசியல் சாசனத்தின் 356வது பிரிவைப் பயன்படுத்திக் கலைக்கலாமா? வேண்டாமா? என்று முடிவெடுக்கும் அதிகாரம் உள்துறை அமைச்சர், பிரதமர் ஆகியோர் கையில்தான் இருக்கிறது."

"கூட்டணியில் முக்கியத் தலைவரான ஜெயலலிதாவின் அதிரடி அறிக்கைகளால் மத்திய அரசுக்கு தர்மசங்கடம்தானே?"

"ஆமாம்! அவர் அதுபோலச் செய்யாமல் இருக்கலாம்! ஆனால் அப்படிச் செய்வது அவருடைய உரிமை! செய்கிறார்! அதை நாங்கள் எப்படித் தடுக்க முடியும்?"

"சரி! தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை எப்படி இருக்கிறது? நீங்கள் சொல்லுங்கள்."

"நான் டெல்லியில் இருப்பவன். தமிழ்நாட்டு நிலைமை குறித்து, டெல்லி பேப்பர்கள் மூலம்தான் தெரிந்து கொள்ளுகிறேன். நேரடியாய் நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல், பத்திரிகைகளில் வெளியாகிற செய்திகளின் அடிப்படையில் விமர்சிப்பதும், கருத்து சொல்வதும் சரியில்லை."

"தமிழகத்தில் ஆட்சிக் கலைப்பு இல்லை என்று ஜஸ்வந்த்சிங் திட்டவட்டமாய் அறிவித்திருக்கிறார். ஜெயலலிதா டெல்லி வருகையில் இதைப் பிரதமரோ, உள்துறை அமைச்சரோ, அவரிடம் நேரடியாய்த் தெரிவித்து, அதனால் அதிருப்தி அடைந்து அ.தி.மு.க. தன் ஆதரவை வாபஸ் பெற்றால், உங்கள் ஆட்சி கவிழ்ந்து விடுமல்லவா?"

"ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். ஏதாவது ஒரு கட்சி, ஆதரவை வாபஸ் பெறுவதனால், பா.ஜ.க. ஆட்சி கவிழ்ந்து, தேர்தல் வருமானால், அந்தக் கட்சியை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள். இந்த ஆட்சி கவிழ்ந்து போகுமானால், மாற்று ஆட்சி ஏற்பட வாய்ப்பே கிடையாது. எந்த அரசியல் கட்சியுமே இன்றைக்கு, மறுபடி ஒரு தேர்தல் வருவதை விரும்பவில்லை. எனவே, பா.ஜ.க. ஆட்சி ஐந்தாண்டுகள் தொடரும். அதில் சந்தேகமே வேண்டாம்!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

பில்ராத்
மருத்துவமனை

கத்தியின்றி...
ரத்தமின்றி...
வயிறு
சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும்
ஓர் முழுமையான
தீர்வு

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- கர்ப்பப்பை நோய்
- பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
- குடல் இறக்கம்(Hernia)
- ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை



முதன்முதலில்
அல்ட்ராசானிக் முறையுடன்
லேப்ராஸ் கோப்பி
சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

சிறப்பு நிபுணர்:
டாக்டர் வெ. ஜெகநாதன்
M.S., M.A.M.S., FRSH (LON) MACG (USA)
FAGE, FAMS-Gastro. (Vienna), FICS-Gastro
வயிறு மற்றும் குடல் சம்பந்தமான
நோய் சிகிச்சை நிபுணர்

அறுவை இல்லா
மூல வியாதி
சிகிச்சை

BILLROTH HOSPITAL
(24 மணி நேர சேவை)

43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600030.
போன் : 6440020/6441777.

குறையொன்றுமில்லை

அர்ஜுனனுக்கு பகவான் உண்மையை உணர்த்தியதைச் சொன்னேன்.

நமது இந்த சரீரமே ஒரு ரதம். இந்த்ரியங்கள் எல்லாம் குதிரைகள்; மனமானது கடிவாளம்; புத்தியானது சாரதி. நமது புத்தியிலே பிரவேசித்து பரமாத்மா செயல்படுத்துகிறான். அர்ஜுனனுக்கு அருகிலேயே இருந்து வழிகாட்டினான், உண்மையை உணரச் செய்தான். அதே போல் நம் அருகிலேயே இருந்து நம்மையும் ரக்ஷிக்கிறான்.

கவனித்துப் பார்த்தோமானால், விஷ்ணு என்கிறவன் எங்கேயோ இல்லை... சமீபத்திலேயே தான் இருந்து ரக்ஷிக்கிறான். அதனால் தான் திரௌபதி வஸ்த்ராபகரணம் நடக்கிறபோது "ஹே கிருஷ்ணா! துவாரகா வாஸி! யாதவ நந்தனா!" என்று அவள் அழைத்தாள்.

"நீ வைகுண்டத்தில் இருக்கிறபோது இந்த அக்கிரமம் நடந்தால் கூட நான் ஒப்புக் கொள்வேன். பூலோகத்தில், துவாரகையில் இருக்கிறபோது இந்த மாதிரி தப்பு நடக்கிறதே! இது பாவ்யமா? நீ இவ்வளவு அருகாமையில் இருக்கிறபோது தப்பு நடக்கலாமா...?" என்று கேட்கிறாள்!

பரமாத்மா எங்கேயோ இல்லை; பக்கத்திலேயே இருக்கிறான். அவள் வேண்டிக் கொண்டதும் அவளுக்குப் புடைவை சுரந்தது... புடைவை சுரந்தவுடனே அவள் ரக்ஷிக்கப்பட்டாள்.

ஒவ்வொரு அவதாரத்திலேயும் ஒரு குறை பகவானுக்கு. ராமாவதாரத்திலே ஒரு குறையாம்....

என்ன குறை?

மைத்துனன் பொரியிட்ட சம்பாவனை என ஒன்று கல்யாணங்களில் பண்ணுவதுண்டு. லாஜஹோமத்தின் போது மணைவியின் சகோதரன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு பொரியை எடுத்துக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதற்காக மைத்துனனை கௌரவிப்பதுதான் பொரியிட்ட சம்பாவனை.

ராமாவதாரத்திலே ஒரு கஷ்டமாம் பகவானுக்கு. சீதையோடு கூடப் பிறந்தவர்கள் ஒருத்தரும் இல்லை! அது கிருஷ்ணாவதாரத்திலே தீர்ந்து போய் விட்டது! ஏகப்பட்ட மைத்துனர்கள் அந்த அவதாரத்திலே!

ஆனால் கிருஷ்ணாவதாரத்தில் வேறு ஒரு குறை! அது என்ன? அன்றைய தினம் திரௌபதி அழைத்த பொழுது, நாம் போய் உடனே அவளை ரக்ஷிக்கவில்லையே. அந்தக் குறை, கடன் அடைக்க முடியாமல் வட்டி ஏறிப் போன மாதிரி கலங்கடிக்கிறதாம் அவனை!

'நான் கடன் பட்டு விட்டேனே, போய் ரக்ஷிக்கவில்லையே...' என்கிறான்.

"நீ ரக்ஷிக்கவில்லையா? பின் யார் ரக்ஷித்தார்கள்? எப்படிப் புடைவை சுரந்தது?"

"நான் ரக்ஷிக்கவில்லை; என் நாமா தான் ரக்ஷித்தது" – கோவிந்த நாமா அவளை ரக்ஷித்தது என்கிறான்.

அதனால்தான் குறையொன்றுமில்லாத கோவிந்தா என்று ஆண்டாள் அவனைப் பாடினாள். அவனுக்கே குறையை நீக்கிய திருநாமம் நமக்கு நீக்காதா....?

ஆகையினாலே, திரௌபதி மூலம் அவன் உணர்த்துகிறான். அருகிலேயே இருந்து ரக்ஷிப்பேன் என்று உணர்த்துகிறான். ஆச்ருதவத்ஸலன் அவன்.

அமரத்வம், ஆச்ருத வத்ஸலத்வம் என்ற இரு குணங்களைப் பார்த்தோம். இரண்டாவது வரிசையிலே வருகிற அடுத்த இரண்டு குணங்கள் உபாயத்வம், உபேயத்வம்.

உபாயமாய் பரமாத்மா இருக்கிறான். உபாயம் என்றால்...? பகவானை அடைவதற்கு உபாயமாய் பகவானே இருக்கிறான்.

உலகத்திலே நாம் பார்க்கிறபோது உபாயம் என்பது ஒரு விஷயமாக இருக்கும். உபேயம் வேறு ஒரு விஷயமாய் இருக்கும். அதாவது அடைய வேண்டிய பொருளும் அதை அடைவிக்கும் கருவியும் வெவ்வேறாக இருக்கும்.

உதாரணமாக, உபன்யாசம் நடக்கிற இந்த மண்டபத்தையே எடுத்துக் கொள்ளுங்கள்... இந்த மண்டபத்தை நாம் வந்து அடைவதற்கு சாதனங்கள்

பலப் பல இருக்கின்றன. ஏதாவது ஒரு சாதனம் மூலமாகத்தான் இங்கே வருகிறோம். சதுஸ்சக்ர சகடம்! அதுதான் நாலு சக்கர வாகனம்! கார் ஆகவும் இருக்கலாம் பஸ்ஸா கவும் இருக்கலாம். த்விசக்கர சகடம் – இந்தக் காலத்து பாஷையிலே ஸ்கூட்டர்! இப்படி, நம்மை இந்த இடத்திலேயே கொண்டு சேர்க்கிறவையெல்லாம் சாதனங்கள். இங்கே வந்து அடைந்த பிற்பாடு, இந்த இடத்திலே வேறான விஷயத்தை அனுபவிக்கிறோம். பகவத் விஷயத்தை அனுபவிக்கிறோம். சாதனம் வேறு, வஸ்து வேறாகத் தெரிகிறது நமக்கு.

ஆனால், பகவத் விஷயத்திலே எடுத்துக் கொண்டோமானால், அடைவிப்பவனும் அவனே, அடையப்படுபவனும் அவனே. –

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

64



உபாயம், உபேயம்! சாதனமும் பயனும் அவனே. அவனை அடைவிக்கிற வழி அவனே.

அவனுக்கு நய: என்று ஒரு திருநாமம். 'நயதி' என்றால் அழைத்துப் போதல். நம்மை அழைத்துக் கொண்டு போகிறான் அவன்...

வராஹ சரம ஸ்லோகம் ரொம்ப பிரசித்த மான ஸ்லோகம். சரமம் என்றால் கடைசி கடைசியில் பகவான் பேசின ஸ்லோகம். இதை வராக அவதாரத்திலே பகவான் பேசி யிருக்கிறான். மத்ஸ்யாவதாரத்திலோ கூர்மா வதாரத்திலோ அவன் பேசவில்லை. ஆனால் வராஹ அவதாரத்தில் ஸ்பஷ்டமாக பூமா தேவியோடு பேசினான் அவன்.

பூமாதா பகவானைப் பார்த்துக் கேட் டாள். பூமியை உத்தாரணம் பண்ணிக் கொண்டு வருகிறபோது அவன் அடிபணிந்து பகவானைக் கேட்டாள்:

''என்னைத் தூக்கி வெளியே விட்டு காப் பாற்றினீர்களே சுவாமி... என் மீது சராசரங் கள் எல்லாம் இருக்கின்றனவே... இவர்க ளெல்லாம் பிரார்த்தித்தால் நீங்கள் வருவீர் களா?'' என்று கேட்டாள்!

''சுவாமி! தங்களுடைய தர்ம பத்னி அடி யாள். அப்படியிருக்கும்படியான அடியாள் ஓலமிட்டபோது ஓடோடி வந்து காப்பாற்றி னீர்கள்... என்மீது ஜீவகோடிகள் இருக்கின் றார்களே, இவர்களெல்லாம் ஓலமிட்டு அழைத்தால் நீங்கள் வருவீர்களா? என்ன பண்ணினால் நீங்கள் வருவீர்கள்...?''

அப்போது ஆதிவராஹ மூர்த்தியான அந்தப் பரமாத்மா சொன்னான்... பூமாதேவி யிடம் அவன் அந்த ஆதி வராஹ கல்ப காலத்திலே சொன்ன வார்த்தை ரொம்ப அழகான வார்த்தை - அதுதான் சரம ஸ்லோகம் - அவன் சொன்னான்:

'மனசெல்லாம் நல்ல முறையிலே இருக் கிறபோது - மனஸ் அலைபாயக் கூடாது - உடம்பிலே பலம், புஷ்டி, தேஜஸ் இதெல் லாம் இருக்கிற போதே, நாடித் துடிப்பெல் லாம் நல்ல முறையிலே இருக்கிற போதே, புத்தி சலிக்காமல் இருக்கிற போதே, நரம்பு கள் முறுக்கேறி மிடுக்குடன் இருக்கிறபோதே எவன் என்னுடைய திருநாமத்தை உரக்கச் சொல்கிறானோ அவன் என்னால் உடனே ரக்ஷிக்கப்படுவான்...''

சின்ன வயதிலேயே சொல்ல வேண்டும் என்பது முக்கியம். சின்ன வயதில் குழந்தை கள் பகவன் நாமாவைச் சொல்ல ஆரம்பித் தால், 'இப்போது பிடித்தே ஏன் பகவன் நாமா?' என்று பெரியவர்கள் தடையாக

அருள்வாக்கு

வராஹமிஹிரர் ''பிருஹத் ஸம் ஹிதை'' என்று ஒரு கிரந்தம் எழுதி யிருக்கிறார். அதில் இல்லாத விஞ் ஞானக் கண்டுபிடிப்பு இல்லை.

வெறும் ஆகாசத்தில் இந்தக் கிரஹங்களெல்லாம் இருக்கின்றனவே; விழாமல் எப்படி நிற்கின்றன? இதற்குக் காரணத்தை நியூடன் என்பவர்தாம் கண்டு பிடித்தார் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். மிகப் பழைய காலத் தில் உண்டான சூரிய சித்தாந்தத்தின் ஆரம்பத்தில் இருக்கிற சுலோகமே, பூமி விழாமல் இருப்பதற்கு ஆகர்ஷணசக்தி காரணம் என்று சொல்லுகிறது. நம் பகவத்பாதாளின் உபநிஷத் பாஷ்யத் திலும் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வஸ்துவை நாம் மேலே வீசி எறிந்

இருக்கக் கூடாது.

பிரஹலாதன் வாக்கிலே ஆயிரம் நாமம் வந்தது. அந்த த்ருவனுடைய வாக்கிலே எத் தனையோ நாமங்கள். சிறுமி ஆண்டாளின் திருவாக்கில் நாமங்கள்...


ஆகையினாலே சின்ன வயதிலேயே அவன் திருநாமத்தை நன்கு சொல்ல வேண் டும்.

அது மட்டுமல்ல... அவன் திருவடியிலே புஷ்பங்களை இட்டு அர்ச்சிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல.... இளமையிலேயே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும்.

இதை யார் இளமையிலேயே பண்ணி விடுகிறார்களோ, அவர்களுக்கு அந்திமக் காலம் வரும்போது கவலையேயிராது.

இத்தனை நாளாக ஆங்காங்கே ஓடி அலைந்த ஒருவர்... சலனமற்று ஓரிடத்தில் விழுந்து கிடக்கிறது. எந்த இடத்துக்கும் அந்த அந்திமக் காலத்திலே அவரால் போக முடிய வில்லை. மருத்துவரெல்லாம் கையைப் பிடித் துப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்கள். 'அந்த மாதிரி சமயத்திலே நான் விட மாட்டேன்' என்கிறான் பகவான். ''என் பெயரைச் சொன்னவன், என் திருவடியிலே



தால் அது மறுபடியும் கீழே வந்து விழுகிறது. அப்படி விழுவது அதனுடைய ஸ்வபாவகுணம் அல்ல. அது பூமியில் விழுவதற்குக் காரணம் பூமியின் ஆகர்ஷண சக்தியே. ஆகர்ஷண சக்தியென்றால் இழுக்கும் சக்தி என்பது அர்த்தம். பிராணன் மேலே போகும்; அபானன் அதைக் கீழே இழுக்கிறது. ஆகவே, கீழே இழுக்கிற சக்திக்கு அபானசக்தி என்று பெயர். ஸ்ரீ ஆசாரியாரவர்கள் பிருதிவிக்கு அபானசக்தி, அதாவது ஆகர்ஷண சக்தி இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ப்ரச்நோப நிஷத்தில் (3.8) "ப்ருதிவியின் தேவதையே மநுஷ்ய சரீரத்தில் அபானனை இயக்குகிறது" என்று வருகிறது. அதன் பாஷ்யத்தில் ஆசார்யாள், 'மேலே போட்ட பொருளைப் பூமி ஆகர்ஷிக்கிற மாதிரி, மேலே போகிற பிராணனை அபானம் கீழே இழுப்பதைப் பற்றிச் சொல்கிறார். இதனால் உபநிஷத்திலேயே Law of Gravitation பேசப்படுவதாக ஆகிறது. இவைகளைப் போன்ற பல அருமையான விஷயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கின்றன. நமக்கு இவை தெரியாததனால் தேசாந்தரத்தில் உள்ளவர்கள் நமக்கு எவ்வளவோ காலம் பிற்பட்டு எழுதியவைகளுக்கு, அளவில்லாத கௌரவத்தைக் கொடுக்கிறோம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

புஷ்பத்தை இட்டு அர்ச்சித்தவன், என் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ணியவன்... அவனை நான் அழைத்துக் கொண்டு போய்விடுவேன். அந்திமக் காலத்திலே நானே வந்து அழைத்துப் போய்விடுவேன்" என்கிறான்.

அந்திம காலமென்பது எப்படி அமையுமோ சொல்ல முடியாது. பலவிதமான துர்ஸ்திதி, அவஸ்தை ஏற்படலாம், எதுவுமே நாம் சொன்ன பேச்சைக் கேட்காது. அப்போது போய் பகவான் நாமாவைச் சொல்ல வேண்டுமென்றால் முடியுமா? அதனால்தான் பரமாத்மா சொல்கிறான் – நல்ல பலமிருக்கிறபோது, நமக்கென்று கொடுத்திருக்கிற கர்ண களேபரங்களெல்லாம் வேலை செய்கிறபோது, இதரர்கள் சகாயம் தேவைப்படாதபோது, இப்படியொரு நிலையிலேயே அவனை நினைத்துவிட வேண்டும்.

இதரர் சஹாயம் இல்லாமல் கடைசிவரை இருப்பதென்பதே ரொம்ப பாக்கியம்.

ஒருத்தர் சொல்கிறார் – அவருக்குத் தகப்பனார் இருந்தார், தாயார் இருந்தார். கஷ்டமே கொடுக்காமல், யாருக்கும் வேலை வைக்காமல் கடைசி வரை வேலை செய்து கொண்டே அந்தத் தாயார் தகப்பனாருக்குப் பிராண வியோகம் ஆகிவிட்டது. அதை அந்தப் பிள்ளையானவர் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுச் சொல்லலாமா என்று கேட்டால் சொல்லக்கூடாது...

சாஸ்திரம் என்னவோ, அனாயாசமாக கஷ்டப்படாமல், மரணம் வரவேண்டும் என்கிறது... ஆனால் பிள்ளையாகப்பட்டவன், பெற்றோருக்கு அப்படி நேரும்போது சந்தோஷப்படக்கூடாது!

'அப்பா, ஒரு மாசமாவது அவருக்கு சிசுருஷை பண்ணுகிற வாய்ப்பை எனக்குத் தரவில்லையே...' என்று மகன் வருத்தப்பட வேண்டும்!

தந்தைக்கு அந்திமக் காலத்திலே ஒருத்தன் சிசுருஷை பண்ணினால், அந்த மாத்ரு ஹ்ருதயமும் பித்ரு ஹ்ருதயமும் அவனை வாழ்த்துமாம். அவன் வழித்தோன்றல்களையெல்லாம் ஆசீர்வாதம் பண்ணுமாம். அத்தகையவன் சீரும் சிறப்புமாக இருப்பான். தாய் தந்தையருக்கு சிசுருஷை பண்ணாத வாழ்வு ஒரு வாழ்வா... என்று மனு ஸ்ம்ருதி பேசுகிறது!

(தொடரும்)



அடுத்த இதழில்...

ஹேமா ராஜ் எழுதும்

குதிரைசக்தி


– திக், திக்
மினி தொடர்
ஆரம்பம்!

மெனோ பாஸ்:

இயற்கை அளிக்கும் ரிடையர்மெண்ட்!

ஆம்பளைங்களும்
புரிஞ்சிக்க வேண்டிய
பொம்பளைங்க சமாசாரம்
பற்றிய உபயோகமான

இலவச இணைப்பு





1998 ஜூன் 28
வெகுதான்ய ஆனி 14
மலர் : 56
இதழ் : 48

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜெயலலிதாவின் மிரட்டல்!

மத்திய அரசிடம் 'டிஸ்மிஸ்' கோரிக்கையை வற்புறுத்தி இதுவரை பலன் கிடைக்காததால் ஜெயலலிதா ஏமாற்றமடைந்திருக்கிறார்.


நாடாளுமன்றத்தில் வெளிநடப்பு, அமைச்சர்கள் மூலமாகப் போலி பிரசாரம், மத்திய ஆய்வுக் குழு அனுப்ப நிர்ப்பந்தம் என்று படிப்படியாக முயன்று பார்த்து, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்ற மிரட்டலை முன் வைத்திருக்கிறார்.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்கும் (LTTE) அதன் பிரிவினைவாதப் போக்குக்கும் ஆதரவு அளிப்பதன் மூலம் மத்திய அரசுக்கு ஒரு நெருக்கடி உண்டாக்கலாம் என்ற எண்ணத்துடன் செயல்படுகிறார் ஜெ.

ஜூன் 19 அன்று ஜெயலலிதாவைக் காண நேரம் ஒதுக்கிய பிரதமர், திடீர் அலுவல் காரண மாக தேதியை ஜூன் 16க்கு மாற்ற, குறுகிய அவகாசத்தில் புறப்பட்டுப் போக இயலவில்லை என்று கூறிவிட்டார், ஜெ! ஜூன் 27க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது பிரதமர் - ஜெ சந்திப்பு!

பிரதமரின் சௌகரியத்துக்காகக் கூட தமது நேரத்தை ஜெயலலிதாவால் மாற்றிக் கொள்ள இயலவில்லை என்பது, அ.தி.மு.க. தலைவியினுடைய மனோபாவத்துக்குச் சான்று.

இந்த மனோபாவமும் அரசியல் முதிர்ச்சியின்மையும் அ.தி.மு.க. தலைவியிடம் இருப்பதை உணர்ந்தும் பி.ஜே.பி. அக்கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டது முதல் தவறு. அந்தத் தவறு மேலும் பல தவறுகளுக்கு வழிவகுத்துக் கொண்டே போயிருக்கிறது. இறுதியில், பி.ஜே.பி.



ஆட்சிக்கே இழுக்கைத் தேடித் தரக்கூடிய ஒரு நடவடிக்கைக்குப் பிரதமர் சம்மதிப்பாரேயானால், கட்சியின் கௌரவமும் ஆட்சியின் மரியாதையும் தவிடுபொடியாகிப் போகும்.


ஜூன் 27 வரை சந்திப்பை ஒத்தி வைத்திருக்கும் ஜெயலலிதா, தி.மு.க. ஆட்சியைக் கலைத்தே ஆக வேண்டும் என மத்திய அரசைத் தாம் 'நட்புடன் எச்சரிப்பதாகக்' கூறுகிறார்! நட்பு எல்லைகளைக் கடந்தால் இன்னும் எப்படியெல்லாம் மிரட்டுவார் என்பதை யோசிக்க வேண்டும்! ஆனால், டிஸ்மிஸ் கோரிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் துணிய வேண்டும். 'பிளாக் மெயில் அரசியல் என்னிடம் செல்லுபடியாகாது; 356ஐப் பிரயோகிக்க முகாந்திரமே இல்லை; அதை எக்காரணம் கொண்டும் செய்ய முடியாது; இதற்காக ஈழப் பிரச்னையையெல்லாம் இழுத்து மிரட்டப் பார்க்காதீர்கள்' என ஜெயலலிதாவிடம் திட்டவட்டமாகக் கூறும் உறுதி பிரதமருக்கு ஏற்பட வேண்டும்.

இவ்வாறு உடைத்துப் பேசுவதால், அ.தி.மு.க. ஆதரவை இழப்போம்; ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று பிரதமர் பயப்படத் தேவையில்லை. அனைத்துக் கட்சிகளுமே அ.தி.மு.க.வின் தேச விரோதப் போக்கை கவனித்துத்தான் வருகின்றன. சமீப காலமாக பா.ம.கவுடன் சேர்ந்து, புலிகள் விஷயத்தில் அ.தி.மு.க. எடுத்துள்ள நிலை அப்பட்டமான தேச விரோதம். மத்திய அரசுக் கூட்டணியிலிருந்து ஒரு தேச விரோதக் கட்சியை உதிர்த்து விட எந்தத் தரப்பிலும் ஆட்சேபம் எழ முடியாது. இன்று எதிர்க்கட்சிகளாகச் செயல்படுபவை, நாட்டு நலன் கருதி, நாளை கூட்டணிக் கட்சிகளாக மாறவும் கூடும்.

பதவி பறிபோனாலும் பரவாயில்லை. பிளாக்மெயிலுக்குப் பணியமாட்டேன் என்பதில் பிரதமர் உறுதியாக இருக்க வேண்டும்.

பரிதாபத்துக்குரிய பிரதமர்!

"அயோத்தி விஷயத்தில் பி.ஜே.பி. அரசை நம்புவதற்கில்லை" என்று இந்திய மக்களை எச்சரித்திருக்கிறார் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் பிரதிநிதி குர்ஷித். அவரது



எச்சரிக்கையில் கட்சிக் கண்ணோட்டத்தைக் கடந்த, நூறு சதவிகித நியாயம் இருக்கிறது.

ஆட்சிக்கு வந்ததுமே, ராமர் கோயிலைச் செயல்திட்டத்திலிருந்து அகற்றிவிட்டதாகக் கூறியது பி.ஜே.பி. ஆனால் தேசிய செயல்திட்டத்திலிருந்து அகற்றப்பட்ட அந்த நெருஞ்சி முள், கட்சி செயல் திட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்றுத்தான் வந்தது. விஷ்வ ஹிந்து பரிஷத் முயற்சியில் ராமர் கோயில் பணிகள் நடைபெற்று வருவது கண்டறியப்பட்டு செய்தி வெளியாயிற்று.

இச் செய்தி, ஆட்சியாளர்களிடையே அதிர்ச்சியையோ ஆட்சேபனையையோ தோற்றுவிக்கவேயில்லை என்னும்போது, அந்த ரகசிய செயல்திட்டம் அரசின் ஆசி பெற்றது என்றுதான் கொள்ள வேண்டும்.

பி.ஜே.பி. கட்சித் தலைமை தீவிரமாகவும் ஆட்சித் தலைமை மிதமாகவும் ராமர் கோயில் பணிகளை ஆதரித்து வந்துள்ளன.

இவ்விஷயத்தில் 'உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி நடப்போம்' எனப் பிரதமர் கூறியுள்ளார். ஆனால், கட்சித் துணைத் தலைவர் கே.எல். ஷர்மாவோ, 'தீர்ப்பு எங்கள் நிலைக்கு எதிரானதாக இருந்தாலும், ஷா பானு வழக்கில் ராஜீவ் காந்தி செய்ததுபோல், நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வகை செய்தே தீருவோம்' என்கிறார்.

இது நடைமுறை சாத்தியமா என்பது ஆராய்ச்சிக்குரியது என்றாலும் பி.ஜே.பியின் தீவிரவாத, மதவாதப் போக்கு இதன் மூலம் சந்தேகத்துக்கிடமின்றி பிரகடனமாகியிருக்கிறது. பிரதமரின் – மத்திய அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கைக்கு எதிராக அவருடைய கட்சிக்காரர்களே பேசுவது கேவலம்.

'அயோத்தியில் ராமர் கோயில் அமைப்பதுதான் ராம ராஜ்ஜியம்' என்பது போன்ற முதிர்ச்சியற்ற கொள்கைகளின் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதை கற்பனை செய்வது கூடக் கடினம்.

பிரதமர், உடனடியாக இந்த விபரீதத்துக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும். கூட்டணிக் கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால்கூட ஓரளவு புரிந்து கொள்ளலாம்; ஆனால் தமது கட்சிக்காரர்களே தலைக்கொன்றாகப் பேசுவதைப் பிரதமரால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் அதைவிடப் பரிதாபம் வேறென்ன இருக்க முடியும்?



• பட்டுக்குடி: தூர் எடுப்பதற்கு முன்பு

தூர் எடுக்கும் பணிகள்: உண்மை நிலவரம் என்ன?

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது காவிரி டெல்டா பகுதிகளிலுள்ள ஆறுகள், வடிகால்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் மிகவும் மும்முரமாகத் தூர் வாரும் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் விவசாயிகள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் முதல்வர் கலைஞரின் சொந்த ஊரான திருக்குவளையில்தான் அதிகக் கவனம் செலுத்தித் தூர் வாரப்பட்டிருப்பதாகவும் சில செய்திகள். உண்மை நிலை என்ன? காவிரி டெல்டா பகுதிகளில் சுமார் 300 கி.மீ. தூரத்திற்குச் சுற்றிப் பார்த்து, பலரிடமும் விசாரித்துப் பார்த்தோம்....



• ராமநாதன்: தஞ்சை கலெக்டர்

"எனக்கு வெவரம் தெரிஞ்சு இப்படித் தூர் எடுக்கும் வேலையெல்லாம் நடந்ததில்லீங்க. இப்பத்தாங்க தூர் வாரியிருக்காங்க. நல்ல விஷயங்க!" என்றார் நாற்பத்தாறு வயதான ஏ.பி. நாகராஜன் என்கிற விவசாயி.

இவருக்குத் தூரியாற்றுப் பாசனத்தில் அரை ஏக்கர் நிலம் மட்டுமே இருக்கிறது. வீரமாங்குடி என்னும் இராமத்தைச் சேர்ந்தவர்.

"இந்த அரசாங்கத்தைப் புகழ்ந்து சொல்றீங்களே! நீங்க என்ன தி.மு.கவா?"

"இல்லீங்க. நான் அ.தி.மு.க. மெம்பருங்க. கார்டு ஹோல்டர்."

"அப்படியுமா தி.மு.க. அரசாங்கத்தைப் புகழ்றீங்க?"

"நல்ல காரியம் பண்ணியிருக்காங்களே! இந்தத் தூரியாறு இதுக்கு முந்தி எப்படி மேடாக் கிடந்தது! இப்பப் பாருங்க. பளிச்சினு தொடைச்சு விட்ட மாதிரி தூர்வாரியிருக்காங்கன்னு..."



பட்டுக்குடி : தூர் எடுத்த பின்பு...

"போன வருஷ வெள்ளத்தின் போது நாவல் பூண்டி, அமரபாகம், பருத்திக்கோட்டை, மூவாநல்லூர், காளாஞ்சிமேடு, ராஜாககுடிக்காடு (இவையெல்லாம் மன்னார்குடி, நீடாமங்கலம் ஒன்றியங்களைச் சேர்ந்தவை) மாதிரியான எல்லா கிராமங்களும் வெள்ளத்தில மிதந்துதுங்க. காரணம் காட்டுவாரி வடிகால் தூர் எடுக்காம மேடாக் கிடந்ததால, வெள்ளம் வடிய ரொம்ப நாளாச்சு. இப்ப தூர் எடுத்துட்டாங்க. இந்த வருஷ வெள்ளம் எங்களைப் பாதிக்காதுன்னு நெனைக்கிறோம். ஏன்னா... வெள்ளம் பளிச்சினு வடிஞ்சிடுமே!" என்றார் மன்னார்குடியைச் சேர்ந்த கவுன்சிலர் ஒருவர்.

இதுபோன்ற பதில்களைத்தான் நாம் சுற்றிப் பார்த்த கும்பகோணம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி என்று ஏகப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும் விவசாயக் கூலிகளும் பொதுமக்



• தூரியாறு : தூர் எடுக்கும் முன்பு



• தூரியாறு : தூர் எடுத்த பின்பு

களும் நம்மிடம் சொன்னார்கள்.

இவை ஒருபுறம் இருக்க, திருக்குவளைப் பகுதிகளில் அப்படியென்ன விசேஷமாகச் செய்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள, திருக்குவளைக்கே சென்றோம்.

எல்லா கிராமங்களும் எப்படி சரியான சாக்கடை வசதிகள் கூட இல்லாமல் இருக்குமோ அப்படியேதான் திருக்குவளையும் இருக்கிறது. முதல்வர் பிறந்த வீடு உள்ள தெருவும் கூட ஒரு சராசரி இந்தியக் கிராமத்தின் தெருவைப் போலத்தான் மேடுபள்ளமாக இருக்கிறது. வீட்டை மட்டும்தான் பழமை மாறாமல் புதுப்பித்து நூலகமாக்கியிருக்கிறார்கள்!

சரி, தூர்வாரும் பணி?


திருக்குவளையை ஒட்டியுள்ளது எட்டுக்குடி என்கிற கிராமம். இதன் நான்கு புறமும் ஆறுகளும் வாய்க்கால்களும் சூழ்ந்திருக்கின்றன. சென்ற ஆண்டு மழை - வெள்ளத்தின் போது, சுற்றியுள்ள ஆறுகளில் அபரிமிதமாக வெள்ளம் ஓடியதால் கிராமமே வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டு விட்டது. மற்ற கிராமங்களோடு அந்தக் கிராம மக்கள் தொடர்பு கொள்ளவே ரொம்ப நாளாகி விட்டது.

"போன வருஷம் வெள்ளத்தைப் பார்வையிட எட்டுக்குடி கிராமத்துக்குச் செல்ல உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆசைப்பட்டாருங்க. முடியலை. அப்படியொரு வெள்ளக் காடாகக் கிடந்தது இந்தப் பகுதி. அதனால தான் இந்த ஆண்டு முதல்ல வடிகால்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தூர் எடுத்துக் கிட்டிருக்கோம். இந்த வருஷம் எத்தனை வெள்ளம் வந்தாலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள எந்தக் கிராமமும் 'மழை வெள்ளத்தால் துண்டிப்பு'ன்னு செய்தி வர முடியாத அளவுக்கு வேலை செஞ்சுக்கிட்டிருக்கோம். எட்டுக்குடியில் மட்டுமில்லே, இதுமாதிரியுள்ள எல்லா கிராமத்துலேயும்தான் செஞ்சுகிட்டிருக்கோம்!" என்றார்கள் இப்போது தூர்வாரும் பணியில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் பொறியாளர்கள்.

"முதல்வரோட கிராமப் பகுதிகளுக்குன்னு நீங்க ஸ்பெஷலா எதுவும் செய்யலையா? நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"இதோ பாருங்க மேப்பை. இது எட்டுக்குடி. இப்போ நாம பார்த்துக்கிட்டிருக்கிறது தெற்குக் காட்டாறு. அந்தப் பக்கம்... வாங்க ளேன் நாலா பக்கம் இருக்கற ஆறுகளையும் நேர்லயே போய்ப் பார்ப்போம்..." என்று எல்லாவற்றையும் நேரடியாகவே அழைத்துச் சென்று காட்டினார்கள். எல்லா இடங்களிலும் நடக்கும் பணிகளைப் போலத்தான் அங்கும் நடந்தனவே தவிர, ஸ்பெஷலாக எதுவும் நடக்கவில்லை!

பல்வேறு இடங்களிலும் நடக்கும் தூர் வாரும் பணிகளைப் பார்த்துவிட்டு, நாம் மீண்டும் தஞ்சைக்குத் திரும்பியபோது இரவு ஒன்பது மணி. அந்த நேரத்திலும் நம் வேண்டுகொளுக்கிணங்கி, நமக்காகக் காத்திருந்த தஞ்சை கலெக்டரைச் சந்தித்தோம்.




• பால்: மேற்பார்வைப் பொறியாளர்

"வாங்க. பல இடங்களையும் சுத்திப் பார்த்தீங்களா! என்ன சந்தேகமா இருந்தாலும் கேளுங்க!" என்றார் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் டி.என். ராமநாதன்.

"வழக்கமா மேட்டூர் அணையிலேர்ந்து ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விடுவாங்க. இந்த வருஷம் 20-ந் தேதிக்குத் தள்ளிப் போட்டிருக்கீங்க. இதனால விவசாயிகளுக்குப் பாதிப்பு இருக்காதா?"



• ஏ.தி. நாகராஜன்: விவசாயி



"இது மாதிரியெல்லாம் ஒரு கேள்வி வந்துடக் கூடாதுன்னுதான் 17.12.97-ம் தேதியன்னைக்கு ஒரு மீட்டிங் போட்டோம். அதுல உள்ளாட்சித் துறை அமைச்சர் கோ.சி. மணி அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மேன்கள் மற்றும் விவசாய சங்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாருமாச் சேர்ந்து பேசினாங்க. அதுல தண்ணி திறந்து விடறதுல ஒரு வாரம் லேட்டானாலும் பரவாயில்லே. முதல்ல தூர் எடுக்கணும். அப்பத்தான் வெள்ளப் பாதிப்பு குறையும். பாசனமும் சிறப்பா இருக்கும்னு எல்லாரும் ஒட்டு மொத்தமா ஒரு முடிவெடுத் தாங்க. அதன்

படிதான் இப்ப வேலை நடந்துக்கிட்டிருக்கு. இது அரசாங்கம் மட்டும் தனியா எடுத்த முடிவு இல்லே."

"தூர் எடுக்கும் பணிகளை இன்னும் கொஞ்சம் முன்னாடியே ஆரம்பிச்சிருந்தா நல்லா இருந்திருக்குமே!"

"உண்மைதான். ஆனா இடைல எலெக்ஷனெல்லாம் வந்ததால செய்ய முடியாம போச்சு. எலெக்ஷன் போது இந்த வேலைகளை ஆரம்பிக்க முடியாதே!"

"இப்போ தூர் எடுக்கறதால ஆறுகள் ஆழமாயிடுது. கால்வாய்கள் மேடாத்தான் இருக்கு. இதனால ஆற்றிலிருந்து கால்வாயில் தண்ணீர் பாயறதுல சிக்கல் இருக்கும்னு சிலர் சொல்றாங்களே?" என்று மேற்பார்வைப் பொறியாளர் இ.எ. பாலிடம் கேட்டோம்.

"மேலோட்டமாப் பார்த்தா இந்தக் கேள்வில நியாயம் இருக்கறதாத்தான் தெரியும். ஆனா உண்மை அப்படியில்லே. காவிரி டெல்டா பகுதிங்கிறது தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கியது. இதிலுள்ள மொத்த ஆறுகள், வடிகால்களின் நீளம் 35,000 கி.மீ. கால்வாய்களின் நீளம் 14,700 கி.மீ. இது அத்தனையையும்

• கலைஞர் பிறந்த வீடும் வீதியும்



ஒரே சமயத்துல தூர் எடுக்கணும்னா 154 கோடி ரூபாய் செலவாகும். அது சாத்தியமே இல்லை. அதனாலதான் இந்த ஆண்டு இருபது கோடி ரூபாய்ச் செலவில் ஆறுகள், வடிகால்கள் ஆகியவற்றில் 1830 கி.மீ. தூரத்திற்கும் 73 கண்மாய்களிலும் தூர் எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதோடு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாவும் 1500 கி.மீ. தூரத்துக்குக் கால்வாய்களில் தூர் எடுக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனா, இந்த ஆண்டு வெள்ளத்தால பாதிப்பு இருக்கக் கூடாதுங்கிற அளவுல முன்னுரிமை கொடுத்துப் பணிகளைச் செய்யறோம்.

"இதைப் புரிஞ்சுக்கணும். இதைப் புரிஞ்சுக்கிட்டா, இந்தக் கால்வாய்ல செய்யலையே, அந்தக் கால்வாய்ல செய்யலையேங்கற குறையே இருக்காது. ஜனங்க என்ன நினைக்கறாங்கன்னா எல்லா வேலைகளையும் ஒரே சமயத்துல செய்யணும்னு நெனைக்கறாங்க. அது முடியுமா? ஒவ்வொரு வருஷமும் படிப்படியாத்தானே செய்ய முடியும்!"

"தூர் வாருகிற எடங்கள்ல வாருகிற மண்ணையெல்லாம் எடுத்து, ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் அப்படியப்படியே கொட்டியிருக்கீங்க. மழை பெஞ்சா, அது சரிஞ்சு மறுபடியும் ஒரு பத்து பர்சண்ட் அளவுக்காவது ஆத்துக்குள்ளயே விழுந்துடாதா?"

"தூர் எடுக்கிற மண்ணை அந்தந்த ஆற்றின் கரைகள்லதான் கொட்ட முடியும். அதனால கரை உயரும். இன்னும் வேலை முடியாத இடங்கள்லதான் நீங்க சொல்ற மாதிரி கொஞ்சம் மண் சரிஞ்சு விழற சான்ஸ் இருக்கு. இந்த மாசம் பூரா வேலை செய்வாங்க. அதுக்குள்ள கரைகள்ல எடுத்துப் போட்ட மண்ணைச் சரியாம இருக்கறபடி செஞ்சிடுவாங்க."

"பொதுவாவே கோடிக்கணக்கான ரூபாய் அளவுல நடக்கற வேலைகள்ல கமிஷன் அது இதுன்னு இருக்கற சான்ஸ் இருக்கே. இதுல எப்படி?"

"நிச்சயமா கிடையாது!" என்று ஒருமித்த குரலில் கூறினார்கள் கலெக்டரும், மேற்பார்வைப் பொறியாளரும்.

"இந்த வருஷம் ஆரம்பிச்ச வேலைகள் மொத்தம் 613 பணிகளா பிரிக்கப்பட்டு டெண்டர் விட்டோம். டெண்டர் வேலையெல்லாம் ஒழுங்கா நடக்குதா? பெரிய ஆளுங்க சிறிய ஆளுங்களை டெண்டர் அப்ளை பண்ண முடியாம தடுக்கறாங்களான்னு இரவு பகலாக் கண்காணிக்கச் சொல்லி உள்ளாட்சித் துறை அமைச்சர் போன்ல கேட்டுக்கிட்டே இருந்தாரு. ஒவ்வொரு பணிக்கும் குறைந்த பட்சம் இருபது பேராவது டெண்டர் கேட்டிருந்தாங்க. அந்த அளவுக்கு முறையாக நடந்தது!" என்றார் கலெக்டர்.

நாம் பார்த்தவரை உண்மையைச் சொல்ல வேண்டுமானால், வெறுமனே தாண்டிப் போகிற அளவுக்குத் தூர் மண்டிக் கிடந்த ஆறுகளையும் வடிகால்களையும் இப்போது நீந்திப் போகிற அளவுக்குத் தூர் வாரிச் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பணி ஒவ்வோர் ஆண்டும் தொடரும் என்பது பாராட்டுக்குரிய விஷயம்.

– இளங்கோவன்

படங்கள் : **ஸ்ரீஹரி**

புயலுக்கு முன்னே

ரஜினி சினிமாவுக்கு முழுக்கு. ரஜினியின் அடுத்த படத்தை கே.எஸ். ரவிகுமார் இயக்குகிறார். ரஜினி இனி அரசியல் பக்கம் ஒதுங்க மாட்டார்; அறிக்கைகள் ஏதும் வராது. விரைவில் தீவிர அரசியலுக்கு வருகிறார்; தனிக்கட்சி தொடங்குவார். கலைஞரை இனி ஆதரிக்க மாட்டார். இடைத் தேர்தல் வந்து, த.மா.கா.- தி.மு.க. கூட்டணி பிரிந்தால், மூப்பனாருக்காகப் பிரசாரம் செய்வார்.

மேற்கண்ட பேராவில் ஏதாவது புரிகிறதா? கடந்த சில மாதங்களாக ரஜினி பற்றி, பத்திரிகைகளில் வந்த செய்தித் தலைப்புகளைத் தொகுத்துத் தந்திருக்கிறோம்; வேறொன்றுமில்லை.

இத்தனை விதமான செய்திகளும் வெறும் யூகங்களின் அடிப்படையில் வெளியானவை. எது குறித்தும் ரஜினி தரப்பிலிருந்து பதிலோ, மறுப்போ வருவதில்லை என்பதனால் ஒரு சிறுகதை, நாவலுக்குரிய சுவாரஸ்யத்துடன் ரஜினி பற்றிய 'செய்தி'கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

உண்மையில் ரஜினி என்னதான் செய்து கொண்டிருக்கிறார்? அல்லது செய்யப் போகிறார்? இத்தனை அழுத்தமான மௌனத்தின் பின்னணி என்ன? மௌனம் எப்போது கலையும்?

விவரம் அறியக் கிளம்பினோம்.

நலிந்த கலைஞர்கள் சிலரது வீட்டுத் திருமணங்களுக்கான (ரஜினியே நடத்தி வைக்கப் போகிறார்) ஏற்பாடுகளில் மிகவும் பிஸியாக இருந்த சத்யநாராயணனை முதலில் அணுகினோம்.

எடுத்த எடுப்பில், "ரஜினி சினிமாவுக்கு முழுக்குப் போடுகிறார் என்று வந்த செய்தி முழுப் பொய். அவரது அடுத்தப் படத்துக்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன" என்று தெரிவித்தார்.

அந்தப் படத்தின் இயக்குநர் கே.எஸ். ரவிகுமார் என்று முடிவாகி விட்டதாக வந்த செய்தியும் உண்மை அல்ல. சேரன், அகத்தியன், ரவிகுமார் மூவரிடமும் ரஜினி கதை கேட்டிருக்கிறார். யார் இயக்குவது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. டைட்டில், 'கிரி' என்பதாக இருக்கும் என்பதே தற்போதைய உண்மை நிலை.

"தமது ரசிகர்கள் வருந்தும்படியான ஒரு காரியத்தை (சினிமாவுக்கு முழுக்கு) ஒரு போதும் அவர் செய்ய மாட்டார். அதுபற்றி அவர் சிந்தித்தது கூட இல்லை. தீபாவளி சமயம் படத்துக்கு பூஜை போட்டு, பொங்கலுக்குக் (1999) கொண்டு வந்து விடுவார். அதுதான் திட்டம்!" என்றார் ரசிகர் மன்ற முக்கியப் பொறுப்பாளர் ஒருவர்.

அடுத்தது, ரஜினி பற்றிய அரசியல் யூகங்கள்.

"எனக்கு அரசியல் தெரியாது என்று சொல்கிறார்கள். ஆனால் அரசியல்வாதிகளைத் தெரியும். யார் யாரை அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதும் தெரியும். நான் இப்படிப் பேசுவதன் காரணம் இப்போது புரியாமல் இருக்கலாம். நேரம் வரும் போது புரியும்!"

பாரதிராஜாவின் 'தாஜ்மஹால்' படத் தொடக்க விழாவில் ரஜினி பேசியதன் சாரம் இது. இதை வைத்துக் கொண்டுதான் பற்பல யூகங்கள் கிளம்பி இருக்கின்றன.

உண்மை வேறு. ரஜினிக்குத் தமிழக அரசியல் மேல் உள்ள கவனமும் ஆர்வமும் அவர் இமயமலைக்குப் போகும் போதும் குறையாதது என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

ஆனால், கடந்த பாராளுமன்றத் தேர்தல் சமயம், கோவை வெடிகுண்டு சம்பவத்துக்குப் பிறகும், தான் சன் டீ.வி.யில் அப்படிப் பேசியிருக்க வேண்டாம் என்று இன்று வரை ஃபீல் பண்ணுகிறார் ரஜினி. ரசிகர்களிடையே சலசலப்பு ஏற்படுத்தி விட்ட சம்பவம் அது!

"நடந்தது நடந்து விட்டது. யாருக்காகவும் நான் என் ரசிகர்களை இழக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார் தலைவர். அதன் பிறகு அவர் அதிகம் ஊரிலேயே இல்லாததற்கும் அதுதான் காரணம். எந்த அரசியல் பிரமுகரையும் அவர் இப்போது சந்திக்க விரும்பவில்லை. முதல்வரின் பவள விழாவுக்குக் கூட நேரில் வராமல் சத்யநாராயணா மூலம் வாழ்த்து அனுப்பியதற்கு இதுதான் காரணம்!" என்றார் ஒரு மன்றப் பிரமுகர்.

உறவினரான ஒய்.ஜி. மகேந்திரன் மகள் திருமணத்துக்காக மட்டும் இரண்டு நாட்கள் சென்னை வந்து விட்டு, உடனே பெங்

களூருக்குப் பறந்து விட்டார் ரஜினி.

ஆனால், எத்தனை நாட்களுக்கு இப்படி இருக்க முடியும்?

"வேறு வழியில்லை. அவருக்கு விவகாரங்கள் பிடிக்காது. சீப்பான அரசியல்வாதிகளின் அர்த்தமற்ற அறிக்கைகள் அவரைக் கோபப் படுத்துகிறது. ஜெயலலிதா அவரைக் கருப்புப் பணம் வைத்திருப்பவர் என்று சொல்லி விட்டார். தலைவர் எத்தனை வருத்தப்பட்டார் தெரியுமா? எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்று தீர்மானமாக நம்புபவர் அவர். அவர் தமிழக அரசியலுக்கு ஒருவேளை வரலாம். வராமலும் போகலாம். ஆனால் யாரும் சவாரி செய்ய இனி பல்லக்காகக் கட்டாயம் இருக்க மாட்டார்!" எனத் தீர்மானமாகச் சொன்னார், ரஜினிக்கு



அமைதி?

மிக நெருக்கமான ஒரு திரையுலகப் பிரமுகர்.

ஒட்டுமொத்தமாக ரஜினிக்கு மிக நெருங்கியவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த செய்தி இதுதான் :

ரஜினி இப்போது மிகக் கூர்மையாக அரசியல் நிகழ்வுகளை கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரது அமைதி, ஒதுங்கிப் போக நினைப்பதன் விளைவல்ல. பதுங்கி இருக்கும் புலியின் நிலையில் இருந்து, சமயம் பார்க்கிறார். ஒருவேளை தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு, இடைத்தேர்தல் வந்தால் கூட கலைஞருக்கோ, மூப்பனாருக்கோ, நேரடியாக ஆதரவு தெரிவித்து, பிரசாரமெல்லாம் செய்வதில்லை என்கிற முடிவில் இருக்கிறார். காரணம், அவரது நிஜமான நோக்கங்கள் ஒவ்வொன்றும் ஜெ. போன்ற எதிர்க்கட்சிக்காரர்களால் திரித்துப் பேசி, பிரசாரம் செய்யப்பட்டு, ரசிகர்கள் மனத்தில் விஷ விதை ஊன்றப்படும் என்று அவருக்கு மிக வேண்டிய அரசியல் நோக்கர் ஒருவர் எச்சரித்திருக்கிறாராம்.

"தி.மு.க. முந்தைய தேர்தல் அளவுக்கு முழு மெஜாரிடி பெறும் சூழலில் இப்போது இல்லை. த.மா.கா. தனித்தோ, காங்கிரஸுடன் இணைந்தோ இயங்கினால் கூட ஆட்சியைப் பிடிக்கவெல்லாம் முடியாது. ஜெவை ஒருபோதும் வர விடாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை இவர்களே பார்த்துக் கொள்வார்கள். ஆக, தி.மு.க.வும் இல்லை; த.மா.காவும் இல்லை; ஜெவும் வர சாத்தியமில்லை என்கிற நிலை வரும் போது மக்களின் பார்வை இயல்பாக ரஜினியின் பக்கம் திரும்பும். அப்போது அவரது மௌனம் கலையும்!" என்றார் ஒரு ரசிகர் மன்ற முக்கியஸ்தர். ●

— ப்ரியன்

அட்டை வண்ணப்படம், படம் :
'தேர்ட் ஐ' பிரகாஷ்

காது 'வளர்க்கலாம்' வாரீகளா?



• சுப்ரமணியன்

முன்பெல்லாம் பாட்டி என்றாலே நீண்ட காதும், அதில் தொங்கும் தண்டட்டி என்ற ஆபரணமும்தான் நம் நினைவிற்கு வரும். ஆனால் இன்று தண்டட்டியைப் பார்ப்பதே அபூர்வமாகிப் போய் விட்டது.

''அந்தக் காலத்தில் வயசுப் பொண்ணுங்க எல்லாம் ஆம்பளைங்களைப் பார்த்ததும் ஸ்டைலாய் காதை ஆட்டிக் கிட்டுதான் போவோம். இப்பதான் அது கேவலமாய் போச்சு'' என்று வருத்தப்படுகிறார் எழுபது வயது ராக்கம்மா.

உண்மைதான்...! பல பாட்டிகள் அசிங்கத்துக்கு பயந்து, வளர்ந்த காதை வெட்டி எறிந்து விட்டு (ஆபரேஷன் மூலம்!) கம்மல் மாட்டிக் கொள்கிறார்கள் என்கின்றன மருத்துவமனை வட்டாரங்கள்.

''அப்பவெல்லாம் இளைஞர்கள் காதைப் பார்த்துதான் சைட் அடிப்பாங்க'' என்று தம் இளம் வயது நினைவில் மூழ்கும் எழுபத்து நான்கு வயது சுப்ரமணியன், ''ஏழை, பணக்காரன் மற்றும் ஜாதி, மத வித்தியாசமில்லாமல் எல்லோருமே காது வளர்ப்பதுதான் வழக்கம். இப்பதான் அந்த வழக்கமே இல்லாமல் போயிடுச்சு'' என்கிறார்.

இப்போது இந்த பேஷன் அழிந்து போய் விட்டது. தென் மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தாரிடையே மட்டும் இன்றும் காது வளர்த்த 27 வயது இளம் பெண்களை கிராமங்களில் பார்க்கலாம். ''ஆனால் எங்கள் இனத்திலும் இப்போது பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு காது வளர்க்க ஏற்பாடு செய்வதில்லை'' என்கிறார் அந்த இனத்தைச் சேர்ந்த கே. மாரி.

அதென்ன 'ஏற்பாடு'?

''சிறு வயதிலேயே நமக்கு விவரம் தெரியும் முன்பே காதை பிறை வடிவத்தில் ஓட்டை போட்டு, குச்சி செருகி விடுவார்கள். அப்புறம் நாளாக, நாளாக பெரிய, பெரிய குச்சிகள்... சின்னச் சின்ன சக்கைகள்... சற்று பெரிய கட்டைகள் என்று செருகிச் செருகி... காது ஓட்டையைப் பெரிதாக்கி விடுவார்கள். அப்புறம் அந்தக் காதில் நன்கு எடையுள்ள 'சவுடி' எனப்படும் வெள்ளி ஆபரணங்களைத் தொங்க விட்டு நீளமாய் வளர விடுவார்கள்'' என்று காது வளர்ப்புக் கலையை விவரிக்கிறார் ஆறுமுகம் என்ற 'பாட்டி.'

ஆக, உலக ஃபேஷன்களை அறியுமளவிற்கு அந்தப் பெண்கள் வளர்ந்து நிற்கும்போது, கூடவே காதும் வளர்ந்து நிற்கும் (தொங்கும்?) அப்புறம் பிடிக்காமல்

''அந்தக் காலத்தில் வயசுப் பொண்ணுங்க எல்லாம் ஆம்பளைங்களைப் பார்த்ததும் ஸ்டைலாய் காதை ஆட்டிக்கிட்டுதான் போவோம். இப்பதான் அது கேவலமாய்ப் போச்சு''

போய் 'நறுக்' செய்து தூக்கி எறிந்தவர்கள் (சமீப காலத்தில்) ஏராளம்.

தண்டட்டி விற்பனை செய்யும் கடைகளையே நகைக்கடைத் தெருவில் தேடித்தான் பிடிக்க வேண்டியிருக்கிறது.

''முன்பு மாதிரி வியாபாரம் இல்லை. கேட்டு வருபவர்களிடம் 'இல்லை' என்று கூறக் கூடாதே என்று ஒரு சில கடைகளில் மட்டும் ஒன்றிரண்டு ஸ்டாக் வைத்துள்ளோம்'' என்றார் ஒரு நகைக்கடை உரிமையாளர். அருணாசலம் படத்தில் வடிவுக்கரசிக்கு தண்டட்டி அணிவிக்க, 'ரெடிமேடாக'க் கிடைக்காததால் மதுரையில் ஆர்டர் கொடுத்துதான் செய்தார்களாம்.

மறைந்து போகும் எத்தனையோ பழைய ஃபேஷன்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அடுத்த ரவுண்ட் வருவதுண்டு. ஒருவேளை காது வளர்ப்பு ஃபேஷனும் அப்படி வந்தால்...?

கம்ப்யூட்டர் படிக்கும் கல்லூரி மாணவி ஸ்ரீசுதாவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டோம்.

''அப்படியே வந்தாலும் இந்த வயதில் காது வளர்ப்பு இனிமேல் சாத்தியமில்லை. எனக்குத் திருமணமாகி மகள் பிறந்தால் அவளுக்குக் காது வளர்த்து 'மாடர்ன் கேர்ள்' ஆக்குவேன்''



• ராக்கம்மாள்

என்றார் சுதா.

ஃபோட்டோவுக்கு மட்டும் ஸ்ட்ரிக்ட்டாக 'நோ' சொன்ன சுதா, அதற்குச் சொன்ன காரணம்:

''கம்ப்யூட்டர்ல கொடுத்து என் படத்துக்கே தண்டட்டி மாட்டினாலும் மாட்டிடுவீங்க.''

— கிரண் நியூஸ்



• ஆறுமுகம் அம்மாள்

அ(கு)டை மழை

'ஜூன் 9, மும்பைக்கு மழை வரும்' என்ற MRF டயர்மேனின் ஆருடம் பலிக்க வேண்டுமே என்று மும்பைக்காரர்கள் ஆவலாய்க் காத்துக் கொண்டிருப்பதற்கு, தண்ணீர் கஷ்டம் மட்டும் காரணமில்லை! இந்த வருடம் மார்க்கெட்டில் குவிந்திருக்கும் புது மாடல் குடைகளும்தான்! மழைத் துளி பட்டால் மணம் கமழும், டிசைன் மாறும் குடைகள், நீண்ட அக்ரிலிக் ட்யூப்களில் 'லைட்'டைப் போட்டுக் கொண்டு, டார்ச்-கம்-குடையாகப் பயன்படக்கூடிய மாடல்கள், 100 ரு எக்ஸ்ட்ரா செலவில் நம் பெயரையோ அல்லது கம்பெனி பெயரையோ, ஆசையாயிருந்தால் மடோனாவையோ மாதுரியையோ அச்சடித்துக் கொள்ளும் வசதி தரும் குடைகள்... இப்படி எத்தனை ரகம்? குடைகளை உபயோகிக்கவென்றே அடை மழையை வரவேற்கலாம் போலிருக்கிறதே!



'மலை'ப்பாய் இருக்கிறதே!

சுரேந்திர சவான், எவரெஸ்ட் சிகரத்தை எட்டியிருக்கும் முதல் மும்பைக்காரர் என்று அரசு அவரை கௌரவிப்பது உத்தமமான செய்கைதான்! ஆனால், இதற்கென ரங்-பவனில், 40-45 லட்சம் செலவில், பாலிவுட்டில் 'செட்' அமைப்பவர்களை நியமித்து, ஒரு இமயமலையை 'செட்டப்' செய்திருப்பதும், அந்த மலை உச்சியில், விழாத் தலைவர் தாக்கரேவுக்கென்று ஆசனம் அமைத்ததும்... தேவையா என்று சாதாரணர்களுக்கே தோன்றும்போது, முன்னாள் முனிசிபல் கமிஷனர் கைர்நாரால் சும்மா இருக்க முடியுமா? அலிகள் தலைமையில் ஒரு 'மோர்ச்சா' ஏற்பாடு செய்து விட்டார். ''எதிர்ப்பைத் தெரிவிக்க அலிகள் எதற்கு?'' என்றால், ''வறுமையால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கும்போது, ஆடம்பரச் செலவுகள் செய்யும் அரசியல் அலிகளை விட இவர்கள் என்ன குறைந்து விட்டார்கள்?'' என்கிறார் காட்டமாக! சரியான போராளிதான்!



• கைர்நார்

'வலி'யால் 'பலி'

மனச்சுமை அழுத்தும் போது உயிரை மாய்த்துக் கொள்ளும் கோழைத்தனம் புதிதல்லதான் -

வழக்கம் போல் பரீட்சை முடிவுகள் வந்த கையோடு சில வாழ்க்கைகளும் முடிந்தன. ஏழாவதில் இரண்டாம் முறை ஃபெயிலான பெண் ஒருத்தியும், +2 வில் மறுபடியும் தோற்ற பெண் ஒருத்தியும் உயிரை மாய்த்துக் கொண்டனர். முதலாமவள் 'கண்'தானம் செய்திருக்கிறாள். இரண்டாமவள் 'அப்பா, அம்மா, என்னை மன்னித்து விடுங்கள்' என எழுதி வைத்திருக்கிறாள்!

- பயங்கரமான பரிதாபம்!

ஆனால் இவையாவுந் 'தற்'கொலைகள்! 'செரிப்ரல் பால்ஸி' நோய்க்கு, KEM ஆஸ்பத்திரியில் ஆறாவது மாடியில், ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டிருந்த தன் ஒரே பிள்ளைக்கு, கால்கள் முற்றிலும் குணமாகி நடப்பதென்பது எளிதில் நடக்காது என்பதைத் தெரிந்து கொண்டபின், வேதனை,

துக்கம், எரிச்சல் எல்லாம் கலந்த மனநிலையில், ராஜேஷ் சௌத்ரி என்ற 28 வயது 'வெயிட்டர்', தன் குழந்தையை 12-வது மாடிக்கு எடுத்துச் சென்று வீசியெறிந்து கொன்றே விட்டார்! தன் கஷ்டத்தைப் போக்க, பிரிதொரு உயிரைப் போக்குவதென்பது – பரிதாபமான பயங்கரம்!

அருணோதயம்

அருணா என்ற 25 வயது மும்பை நர்ஸ், தன்னுடன் பணிபுரிந்த ஒரு டாக்டரைக் காதலித்து திருமணமும் நிச்சயமாகி விட்ட தருவாயில், அங்கேயே ஸ்வீப்பராக வேலை பார்த்த சோஹன்லால், நாய்ச் சங்கிலியால் அவளைப் பிணைத்து, பலாத்கரித்து விட்டான். ஏழு வருட ஜெயில் வாசத்துக்குப் பின் இன்று அவன் சுதந்திரப் பறவை! டாக்டரும் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டார். ஆனால் அருணா? கடந்த 25 வருடங்களாக அதே மருத்துவமனையில் ஒரு ஸெமி கோமா நிலையில் படுத்த படுக்கையாக இருக்கிறாள். கண்கள் பார்த்து, காதுகள் கேட்டாலும், மூளை எதையும் பதிவுசெய்து கொள்வதில்லை; யாராவது தொட்டால், அதுவும் ஆண்களாக இருந்தால், பீதியில் அலறுகிறாள். இவரது 50-வது பிறந்த நாளை அண்மையில் கேக் வெட்டி, அவள் வாழ்க்கையைப் பற்றிய புத்தக வெளியீட்டுடன் கொண்டாடினார் பிங்கி இரானி என்ற பத்திரிகையாளர். 'அருணாவின் கதை' என்ற இவரது முதல் நாவலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, கல்லையும் கரைந்துருக்கியிருக்கிறது. ஒரு செவிலியின் அஸ்தமனத்தில் ஒரு கதாநாயகி உதயமாகியிருப்பது... பாவம்... அந்த அருணாவுக்கு எங்கே தெரியப் போகிறது?

சமஸ்கிருதத்தில் ராக்-ஷோ!

வேத(னை) மொழி

சமஸ்க்ருதத்தில் ராக் - ஷோ பார்த்திருக்கிறீர்களா? வெயில் கூட குறைந்து விட்டதே! ஏனிந்தக் கிறுக்குத்தனமான கேள்வி என்று சந்தேகிக்க வேண்டாம்; உண்மையிலேயே, ஜுஹூவில் பிரசித்தி பெற்ற 'ராஸ்பெரி ரைனோஸெராஸ்' டிஸ்கோ கிளப்பில், 'வைகுந்த் பாய்ஸ்' என்ற டென்மார்க் குழு, சமஸ்கிருதத்தில் ராக் அண்ட் ரோல் ரகப் பாடல்களை இசைத்தனர். பாடியது என்னவோ "ஹரே ராமா ஹரே கிருஷ்ணா", "ஜெய ராதா மாதவ", "ராதா ரமண ஹரி" போன்ற 'இஸ்கான்' வம்சத்துப் பாடல்கள்தான். மெட்டுகள் தான் 'இம்போர்ட்டெட்'! பிரதான பாடகர் ஜயான், பெயரைக் கூட 'ஜெய் நரஸிம்ஹ'னாக்கி விட்டார். மேற்கத்திய நாடுகளில் பல வெற்றி கரமான ரவுண்ட்ஸ்களை முடித்துக் கொண்டு இந்தியா வந்திருப்பவர்கள், "நிகழ்ச்சிக்கு வருபவர்கள் குடித்து விட்டு ஆடினாலும் பரவாயில்லை; உதட்டிலாவது மந்த்ர ஜபமிருக்கட்டுமே! MTV கலாசாரத்துக்கிடையே ஆன்மீகம் உயிர் பெற வேண்டுமென்றால் இது ஒன்றுதான் வழி" என்கிறார்கள். ஹூம்! ஏற்கெனவே நவராத்திரியின் போது, ஜெகதம்பிகையைச் சுற்றி டிஸ்கோ ஆடும் கலாசாரம் மும்பைக்குப் பழகி விட்டது. இனி ஹோமம் வளர்த்து, "கணானாம்த்வா..." சொல்லிக் கொண்டு ராக் டான்ஸ் ஆடும் நிலையும் வந்து விடும் போலிருக்கிறது!

பாடுவோர் பாடினால்...

இப்போதெல்லாம் அழகிப் போட்டிகளில் யார் அழகிகளைக் கவனிக்கிறார்கள்? ஃபெமினா 'Elite Model Look' போட்டியில் ஆடியன்ஸைக் கலக்கியவர் யார் தெரியுமா? நிகழ்ச்சி துவக்கத்தில், பண்டிட் சிவகுமார் சர்மாவுடன் இணைந்து இசை மழை பொழிந்த அவரது குமாரன் ராகுல் தான்! ராக சஞ்சாரங்களில் அமிழ்ந்து, தலையை இப்படியும் அப்படியும் அவர் ஆட்டிய போது... ஒரே 'ஹா...ஹூ'... ஹௌ ஸ்வீட்' மயம்! கவர் பார்க்க வந்தவர்கள் கூட, பர்ப்பிள், நீலம், யெல்லோ, பிரவுன் என்று விதவிதமான கலர்களில் தலைமுடியை வைத்துக் கொண்டிருந்தவர்களைத்தான் ஆர்வத்துடன் பார்த்தார்கள்! வெற்றி பெற்றவர் யாரோ கரோலினாம்.

— ஜெயஸ்ரீ ராஜ்



மும்பை மசாலா :

சுமி சூப்பர்மார்க்கெட்

தமிழ்நாட்டுல, வாரம் தவறாம வெள்ளிக் கிழமை விடிஞ்சா, ஏதாவது ஒரு படம் ரிலீஸா யிடுது. வருஷத்துக்கு சுமார் 200 படங்கள் கேரண்டி. ஆனா, சினிமா வளர்ந்த அளவுக்கு சினிமா பத்தின புத்தகங்கள் வளரலை. (நான் சினிமா பத்திரிகைகளைச் சொல்லலை)

சினிமாவை, டெக்னிகலாகவும் கலை Angleலேயும் விளக்கக் கூடிய புஸ்தகங்கள் இங் கிலீஷ்ல நிறைய உண்டு. தமிழ்ல ரொம்பக் கொஞ்சம்! ஒரு நல்ல படம் வந்ததுன்னா, அத னோட ஸ்கிரிப்டை அப்படியே புக்கா பப்ளிஷ் பண்ணற ஐடியாவை ஹாலிவுட் பட நிறு வனம் ஒண்ணே ஆரம்பிச்சி வெச்சதா படிச் சிருக்கேன்.

தமிழ்ல அந்த மாதிரி திரைக்கதை ஒண்ணு நூல் வடிவம் பெற்றது, பத்து இருபது வருஷங் களுக்கு முன்னாலதான். ஜெயகாந்தனோட சில நேரங்களில் சில மனிதர்கள்- பீம்சிங் டைரக்ட் பண்ண படம்.

அந்தப் புது முயற்சிக்கு அப்ப வரவேற்பு எப்படி இருந்ததுன்னு தெரியலை. ஆனா, அதுக்கப்புறம் அந்த மாதிரி புக்ஸ் வந்ததா தெரி யலை.

ஃபிலிம் சொஸைடிகாரங்க, சில சீரியஸ் சினிமா விமர்சகர்கள்- ரசிகர்கள் முயற்சியால ஜப்பானிய டைரக்டர் அகிரா குரசேவாவோட 'ரஷோமான்'ங்கற படத்தோட ஸ்கிரிப்ட் (உலகப் புகழ்பெற்ற படம்) கொஞ்ச நாள் முன் னால தமிழ்ல புஸ்தகமா வெளி வந்தது. புக்ஃபேர்ல பத்திருபது பேர் வாங்கியிருப்பாங் கன்னு நினைக்கிறேன். அதுவும் அஸிஸ் டெண்ட் டைரக்டரா சேரணும்னு ஆசை இருக்கறவங்களா இருக்கும்.

அதுக்கப்புறமும் சினிமா இலக்கியம் முடங்கித்தான் இருந்தது. ரீஸன்ட்டா 'போதி பதிப்பகம்'னு (43 ஏ. இரண்டாவது மாடி, வெள்ளாளர் தெரு. கோடம்பாக்கம்) புதுசா ஒரு பப்ளிஷிங் நிறுவனம் வரிஞ்சிகட்டிட்டு வரிசையா திரைக்கதை புஸ்தகங்களா போட்டுத் தள்றாங்க. பூமணியோட கருவேலம் பூக்கள், (படம் இன்னும் வரலை.) அகத் தியனோட காதல் கோட்டை, சேரனோட பாரதி கண்ணம்மா- இப்படி கமர்ஷியலா சக்ஸஸாகி, தரமாகவும் இருக்கற படங்களோட ஸ்கிரிப்டை வாங்கி அழகா பப்ளிஷ் பண்ணிட்டு வராங்க.

பார்த்த படத்தோட ஸ்கிரிப்டைப் படிச்சி என்ன பிரயோஜனம்னு தோணலாம். ஒரு நல்ல சினிமாவோட ஒவ்வொரு செண்டி மீட்டரை எடுக்கறதுக்கு முன்னாடியும் டைரக்டர்ங்கறவர் எத்தனை யோசிக்க வேண்டி இருக்கு, மண்டை யைப் பிச்சுக்க வேண்டி இருக்குன்னு, படிச்சா புரியும். ஐந்நூறு காப்பி லைப்ரரி ஆர்டர்,



ஐந்நூறு காப்பி ஸேல்ஸ் இருந்தாக் கூடப் போதும்- இந்த மாதிரி சீரியஸான பப்ளிஷர்ஸ் பிழைச்சுக்குவாங்க; அடுத்த புஸ் தகத்துக்கு இன்னும் சீரியஸா ஒர்க் பண்ணு வாங்க.

"அது எங்கங்க! சமைத்துப் பார், நாடி ஜோசியம் போட்டா பிச்சிக்கும். இதெல்லாம் காம்ப்ளிமென்ட்டா குடுத்தே காலியாயிடும்"- ஒரு சீரியஸ் புஸ்தக பப்ளிஷர் சொன்னது இது.

சானலுக்கு ஒரு சாமியார்!

நியூஸுக்கு ஒரு சானல், ம்யூசிக்குக்கு ஒரு



சானல், சினிமாக்கு ஒரு சானல்னு சாடிலைட் டீவிக்கள்ல திறுசுக்கு ஒண்ணா இருக்கறாப்பல சாமி யார்'ஸ் சானல்னு புதுசா யாரா வது ஒண்ணு ஆரம்பிக்கலாம். அத்தனை பேர் பெருகிட் டாங்க. (இதுக்கு விளம்பரத் துக்கு அலையக் கூட வேணாம். அந்தந்த சாமி யாருங்களே ஸ்பான்ஸர்ஸ் கூட்டிட்டு வந்துடு வாங்க)

ஒரு சானலைத் திறந்தா ஒருத்தர் 'நான்தான் மகா விஷ்ணு'ன்னு தலை யிலடிச்சி சத்தியம் பண்ணி, ஸ்டாம்ப் பேப்பர்ல எழுதி, கையெழுத்துப் போட்டுத்தர ரெடியா இருக்கார். இன்னொருத்தர் என்ன டான்னா உலக வாழ்க்கைக்கு எக்ஸ்பயரிடேட் குடுத்து அப்பப்ப எக்ஸ்டண்ட் பண்ணிட்டிருக் கார். இன்னொரு தெலுங்கு பார்ட்டி ஜிகினா சித்து வேலை காட்டி என்டர்டெயின் பண்ணு றார்.

என்ன விஷயம்னா, எல்லாருக்குமே ஸ்டாண்டர்டா, குறையாத ஒரு ஹவுஸ் ஃபுல் ஆடியன்ஸ் இருக்காங்க. போற்றிப்பாட ஒரு கவிஞர் கோஷ்டி இருக்குது. ஸ்பான்ஸர் பண்ண நாலஞ்சு நிறுவனங்கள் கிடைச்சுடுது.

இவங்களையெல்லாம் ஃபாலோ பண்ணுங்க; பண்ணாதீங்கன்னு சொன்னா யாரும் கேட்டு நடப்பாங்களா தெரியலை. அவங்க வங்க நம்பிக்கையைப் பொறுத்த விஷயம் அது. ஆனா, ப்யூர் என்டர்டெயின்மென்ட் ஆங்கிள்ல பார்த்தா, இவங்க ப்ரோக்ராமெல்லாம் கவுண்டமணி, செந்தில் காமெடி டிராக்கை விட படு சுவாரஸ்யம்!

லஸ் கார்னர் பிளாட்பாரக் கடைல பழைய கணையாழி இஷ்யு ஒண்ணு பார்த்தேன். சுஜாதா அதுல ஒரு வெண்பா எழுதி இருக்கார்.

விண் நெடுகப் பரவி, பாரிஸ்
வனிதையர்போல்
கண்ணடிக்கும் தாரகையையெல்லாம் -
எண்ணி வைத்த
முட்டாள் ஒருவர் இருக்கார்; அவர் நமக்கு
எட்டாத கடவுளப் பா!

சங்ககால, தங்க காலத்துக்காரங்கதான் வெண்பா, என்பா உன் பாவெல்லாம் எழுதணுமா என்ன? இப்படி லேசான ஹ்யூமரை சுருக்கமா வெளிப்படுத்த வெண்பா ஸ்டைல் ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு பட்டுது. சின்னதா நானும் ஒண்ணு ட்ரை பண்ணிப் பார்த்தேன். (இலக்கணமெல்லாம் பார்க்காதீங்க!)

மசாலா தோசையென்றும் மாம்பழத்து
ஜூஸென்றும்
குஷாலா யிருக்குமென்று குல்பியும்
- மஜாவா
சாட்டர்டே சாய்ங்காலம் சக்கைபோடு
போட்டதனால்
'வாட்டரா'கப் போச்சே பணம்!
(வாசகர்களும் ட்ரை பண்ணலாம்)

ஜோக்: **வழங்குபவர்: திருவண்ணாத புரம் தி.க. பாலசுப்ரமணியன்.**

சமையல்ல ஆரம்பிச்சி, சகல விஷயத்திலும் பெண்டாட்டிக்கு வேலையே வைக்காத ஒரு உன்னதமான கணவனுக்கும் அவன் ஒய்ஃபுக்கும் ஒரு நாள் டைாய்.

மனைவி சொன்னா: "உங்களைக் கட்டிக் கிட்டு என்னத்தைக் கண்டேன்? பேசாம ஒரு முழம் கயித்துல தொங்கலாம். இல்லை, விஷத்தைக் குடிக்கலாம். இல்லை, கிணத்திலோ, குளத்திலோ விழுந்து சாகலாம்!"


அதுக்கு அந்த ஆளோட ரிப்ளை:

"எதுக்குக் கஷ்டம்? ஒரு நாள் நீ சமையல் பண்ணிடு."

— சுபி

வாஜ்பேயிக்கு எத்தனை மார்க்?

ஜூன் 26 – வாஜ்பேயி அரசு பதவியேற்று நூறு நாள் ஆகிறது. சோதனை, வேதனை, சாதனை என்று கலந்து அடித்தாலும், கூட்டணிக் கட்சிகளின் மெகா மிரட்டல்களைச் சமாளித்து எப்படியோ வெற்றிகரமாக 100-வது நாளை நெருங்கி விட்டார் வாஜ்பேயி. அவரது ஆட்சிக்கு எத்தனை மார்க் (நூற்றுக்கு) தருவீர்கள் என்று சிலரிடம் கேட்டோம் :


• தங்கர்பச்சான்


• ராஜாராம்


• வலம்புரிஜான்


• பாரதிபாஸ்கர்


• சிவசங்கரி


• நிர்மலா சுரேஷ்

ராஜாராம் : எழுபது மார்க் தருவேன். அரசின் செயல்பாட்டை, அதன் நிதி நிலை அறிக்கை மூலம்தான் தெரிந்து கொள்ள முடியும். என்னளவில் சின்ஹாவினுடைய பட்ஜெட் திருப்தியே தருகிறது. ஆனால் மக்கள் இன்னும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை வாஜ்பேயி புரிந்து கொள்ள வேண்டும்.

சிவசங்கரி : வாஜ்பேயும் அத்வானியும் திறமைசாலிகள் மட்டுமல்ல; நேர்மையாளர்களும் கூட! நல்ல ஆட்சி தர வேண்டும் என்பதில் உண்மையான அக்கறை உள்ளவர்கள். ஆனால் தம் திறமையை முழுமையாக வெளிக்காட்ட முடியாமல் கவனம் பல திசைகளில் சிதற விடுகிறார்கள். இன்னும் கொஞ்ச நாள் பார்ப்போம். இப்போது மார்க் தர முடியாது.

வலம்புரிஜான் : முப்பது மார்க்தான் தருவேன். அதுவும் அவர் ஓர் இலக்கியவாதி என்பதால். அணுகுண்டு வெடித்ததெல்லாம் மார்தட்டும் விஷயமல்ல! கூட்டணிக் கட்சிகளே எதிர்க்கட்சிகளாகச் செயல்படும் அவலத்திலிருந்து முதலில் அவர் தப்பிக்க வழி பார்க்கட்டும்.

தங்கர்பச்சான் (ஒளிப்பதிவாளர்) : 'ராமருக்குத் தேவை கோயில், பாபருக்குத் தேவை மசூதி, எங்களுக்குத் தேவை கழிப்பறைகள்' என்ற மனுஷ்யபுத்திரனின் கவிதையை 'கவிஞர் வாஜ்பேயி'க்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த நூறு நாட்களில் நூறு குளறுபடிகள். ஏழை மக்களின் நலனுக்கு முதலில் ஏதாவது செய்யட்டும். நான் முப்பது மார்க்தான் தருவேன். அதுவும் இந்தியாவை உலகமே கவனிக்கும்படி செய்த அந்த ஒரு செயலுக்காக மட்டும்.

பாரதிபாஸ்கர் (பட்டிமன்றப் பேச்சாளர்) : 25 மார்க். இது, செய்ததற்காக அல்ல. எதிர்காலத்தில் ஏதாவது செய்வார் என்று நம்பி அளிக்கப்படும் கருணை மார்க். வாஜ்பேயி என்ற தனி மனிதரை நம்பி, அவரால் நிலையான ஆட்சி தர முடியும் என்று நம்பித்தான் மக்கள் வோட்டளித்தார்கள். இதை மனத்தில் கொண்டு இனி அவர் செயல்பட வேண்டும்.

நிர்மலா சுரேஷ் : தேனிலவு காலத்திலேயே அக்கினிப் பிரவேசத்தைச் சந்திக்கிறார்! கூட்டணிக் கட்சிகளை முதலில் சரிகட்டட்டும். ஜனநாயகம் மீண்டும் வனவாசம் போகாமல் காத்தால்தான் அவர் வரலாற்றில் இடம்பெற முடியும். மார்க் எல்லாம் அப்புறம் போடலாம். ●

தொகுப்பு : **சிம்மம்**

படிக்க வாங்க!

ஏழைக் குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவர்களுக்கு உதவுவதற்காக வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறது 'கைங்கர்யா' என்ற அமைப்பு. இதன் இயக்குநர் காவேரி நடராஜனைச் சந்தித்துப் பேசினோம்.



• குழந்தைகளுக்குக் குழு விவாதம்

ஜாபர்கான்பேட்டையில் 22 ஹரிஜனக் குடியிருப்புகளையும் சைதாப்பேட்டையில் 33 குடியிருப்புகளையும் ஒருங்கிணைத்து, அப்பகுதி பள்ளிச் சிறுவர்கள் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுகிற காரணத்தை அறிந்து, தீர்வு தந்து வருவதாகச் சொன்னார். இந்தப் பகுதிகளில் ஏற்றுமதி தொழிற் சாலைகள் நிறைய இருப்பதால் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

"நோட்டுப் புத்தகம்; சீருடை வாங்க முடியாமல் குழந்தைகள் நின்னிடுறாங்க. சம்பாதிக்கிறோம் என்ற எண்ணம் குழந்தைகளுக்கு வந்துடுறதாலயும் ஸ்கூலுக்குப் போறதில்ல. இதைவிட ஒரு விஷயம், 'அப்பா குடிக்கிறாரு. அதனால ஸ்கூலுக்குப் போக வெக்கமா இருக்கு. அதனாலதான் போறதில்ல'ன்னு சொல்றாங்க" என்றார் காவேரி நடராஜன்.

பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்ட குழந்தைகளுக்காக ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர் இரண்டு இடத்திலும் இடைக்காலப் பள்ளிகளைக் 'கைங்கர்யா' உருவாக்கி இருக்கிறது.

படிக்க விருப்பமிருந்தும் ஏழ்மை காரணமாகவோ, பிற காரணங்களாலோ படிப்பைப் பாதியிலேயே கைவிட்ட மாணவர்களைத் திரட்டி, தேவையான உதவிகள் செய்கிறது. பெற்றோர்களிடம் கலந்து பேசி குழந்தைத் தொழிலாளர் நிலையிலிருந்து விடுவித்து, பள்ளிக்கு அனுப்புகிறது கைங்கர்யா. விட்ட வகுப்புகளைத் தனியாகப் படிக்க வைத்து மறு ஆண்டு கார்ப்பரேஷன் பள்ளியில் சேர்த்து விடுகிறது. மீண்டும் அவர்கள் பள்ளியிலிருந்து நிற்காமல் இருக்க கார்டியனாக இருந்தும் கண்காணிக்கிறது!

"குழந்தைகளின் கல்வியை முதன்மைப் படுத்தி மூணு வருஷமா செயல்படுறோம். இந்த வருஷத்திலிருந்து வேறொரு முறையையும் கைக்கொள்றோம். ஒவ்வொரு வருசமும் கார்ப்பரேஷன் ஸ்கூலில் படிக்கிற சில பிள்ளைங்க படிப்பைப் பாதியிலேயே நிறுத்திடுறாங்க. அப்படி நிறுத்தாம இருக்கிறதுக்கு முன் கூட்டியே பள்ளித் தலைமையாசிரியர் கிட்ட கலந்து பேசி பள்ளியிலேயே தொடர்ந்து படிக்கிறது சம்பந்தமா எங்கரேஜ் பண்றோம். குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு வரை படிச்சா என்னென்ன உதவிகள் எங்களால பண்ண முடியும்னு விளக்குறோம். என்னென்ன வேலை வாய்ப்பு இருக்குன்னு சார்ட்டில் எழுதி கண்காட்சி

மாதிரி செய்யறோம்" என்றார் கைங்கர்யாவில் பணிபுரியும் சரஸ்வதி.

"ஆசிரியர்களுக்கே சில விஷயங்களைப் புரியவைக்க வேண்டி இருக்கு. நடுத்தரக் குடும்பத்துக் குழந்தைகளை ட்ரீட் பண்றது மாதிரி இவங்களை ட்ரீட் பண்றது சரியில்ல. நோட் இல்லை. யூனிஃபார்ம் இல்லைன்னு அடிச்சா படிக்க வர மாட்டாங்கதான். இதை விளக்க வேண்டியிருக்கு. இப்போ கார்ப்பரேஷன் ஸ்கூல் நிர்வாகமே புது கவனம் செலுத்துது" என்கிறார் காவேரி நடராஜன்.



• 'கைங்கர்யா' குழந்தைகள்



• காவேரி நடராஜன்



• சரஸ்வதி

"பட்டறை, ஹோட்டல், எக்ஸ்போர்ட் கம்பெனிகளில் வேலை செய்யற குழந்தைகளின் சம்பளத்தைப் பறித்து, குடிக்கிற அப்பாக்களும் இருக்காங்க. தட்டுத் தடுமாறிப் படிக்கிற இந்தக் குழந்தைகள் பற்றிப் பெற்றோர்கள் அக்கறை கொள்வதும் இல்லை. கால் மார்க் குறைஞ்சா கூட, படிச்ச பெற்றோர்கள் ஏன் குறைச்சு போட்டீங்கன்னு கேக்குறாங்க. இந்தப் பசங்க நல்ல மார்க் எடுத்தாக் கூட பெற்றோர்கள் வாங்கிப் பார்க்குறதில்ல. சில பெற்றோர்கள்கிட்ட போய், "வேலைக்கு அனுப்பாதீங்க. படிக்க வையுங்க"ன்னு சொன்னா, 'அவன் தினம் ஐம்பது ரூபா சம்பாதிக் கிறான். அதத்தாங்க; அப்புறம் வேணும்ன்னா ஸ்கூலுக்குப் போகட்டும்'ன்னு சொன்னாங்க. இதுக்கெல்லாம் சங்கடப்படாம பெற்றோர்களைச் சந்திக்கிறோம். பெற்றோர்களுக்காகப் பள்ளியில் மீட்டிங் போட்டா வர மாட்டாங்க. அதனால நாங்க அவங்க ஏரியாவுக்கே போய் கூட்டம் போட்டு பசங்களைத் தத்து எடுக்குறோம்" என்றார் காவேரி.

எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு தவறிய குழந்தைகளுக்குத் தனிப் பயிற்சி அளித்து தேர்வு எழுத அனுப்புகின்றது கைங்கர்யா. அதிலும் பெண்களுக்குப் படிப்போடு நர்ஸ் பயிற்சியும் அளிக்கின்றனர்.

வேறு வேறு அமைப்புகள் தரும் உதவித் தொகைகளையும் பெண்களுக்குப் பெற்றுத் தருகின்றனர்.

எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை பார்க்கும் பெண்கள் பாலியல் ரீதியாகப் படும் அவதிகளுக்குச் சட்டரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சமாளிக்கப் பயிற்சியளிக்கின்றனர்.

"மேடம் எங்களுக்கு பயிற்சி தர்றதை விட்டுட்டு முதல்ல இந்த சூப்பர்வைசர்களுக்குக் கொடுங்க. உங்களுக்கு ஒரு புண்ணியம் ஆகட்டும்" என்று ஒரு எக்ஸ்போர்ட் நிறுவனப் பெண் சொன்னதையும் காவேரி சொன்னார்.

கைங்கர்யாவில் பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டும்தான் உதவி என்றில்லை. படிக்க ஆசை இருந்தும் தொடர முடியாமல் தவிக்கும் மாணவர்கள் யாராக இருந்தாலும் கைங்கர்யா உதவத் தயாராக இருக்கிறது என்கிறார்.

— யுகாந்தன்

படங்கள் : ஸ்ரீஹரி

குவாட்டர் ஜின், சிக்கன் ஃப்ரைட் ரைஸ், மற்றும் இரண்டு மாணிக்சந்த்



மன்னிக்கவும். எமர்ஜன்ஸி வார்டுக்குள் அந்நியர்கள் பிரவேசிப்பதற்கில்லை. ஆசாரம் கெட்டுவிடும். மகனே ஆனாலும் மரத்தடியில் படுப்பதுதான் உங்கள் விதி. உங்கள் தாயை நாங்கள் பார்த்துக் கொள்வோம். ஏதாவது அவசரமென்றால் மைக் மூலம் அழைப்

போம். அப் போது எழுந்து வந்தால் போதும். பேராய், துண்டை விரித்துத் தூங்குகிறீர்களா?

அழகான நர்ஸ்கள் இரக்கம் உள்ளவர்களாகவும் இருக்கக் கூடாதா என்ன? நான் அம்மாவைப் பார்த்தேன். வலியின் வேதனையும் களைப்பும் ஆபரேஷன் பற்றிய பயமுமாக ஸ்டெச்சரில் கிடந்தாள். ஒரு மூலையில் நான் முடங்கிக் கொள்வேன். கண் முன் இருந்தால் ஒரு தைரியம். வார்த்தைகளைத் தேடிக் கோத்து, பரிதாபமாக அம்மா கேட்டாள்.

சாத்தியமில்லை. அழகிய நர்ஸுக்கு வேலை போய்விடும். நான் படித்தவன் தானே? இதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன?

நான் தூங்கமாட்டேன். கூப்பிட்ட குரலுக்குக் கிருஷ்ணபரமாத்மா போல் ஓடி வருவேன் என்று அம்மாவிடம் உறுதி சொல்லிவிட்டு, மரத்தடிக்குப் போனேன்.

மாறுபட்ட அனுபவம். வேறுபட்ட சூழ்நிலை. ஆஸ்பத்திரி, அனஸ்தீஷியா வாசனை, நோயாளிகள், உறவினர்கள், ஆரஞ்சுப் பழம், ஸ்டெச்சர், ஆம்புலன்ஸ்.

உழைத்துக் களைத்த அம்மாவுக்குத் தண்டுவடத்தில் சனி. லும்பர் நாலுக்கும் ஐந்துக்கும் இடையே ஒரு டிஸ்க் நகர்ந்து போனதில் நாளை கழித்து ஆபரேஷன். காலை, வந்து சேர்ந்ததிலிருந்து அறை ஏதும் ஒதுக்கவில்லை. மைலோகிராம், மண்ணாங்கட்டி கிராம் என்று ஏழெட்டு டெஸ்டுகளில், கொண்டு வந்த அஞ்சாயிரமும் கரைந்து போனது.

வீட்டுக்கு போன் செய்து, விடிந்ததும் சொத்து முழுவதையும் செக்காக மாற்றிக் கொண்டு வரச் சொல்ல வேண்டும். ஆபீஸுக்கு லீவ் சொல்ல வேண்டும். நிறைய அலைய வேண்டி இருக்கும். முற்றிலும் எதிர்பாராமல் என் அன்றாட வாழ்க்கை முறை புரட்டிப் போடப்பட்டு விட்டது.

அலுப்பில் விழுந்து, கண்ணை மூடியதும் அழகிய நர்ஸின் முகம் முன் வந்தது.

சுயசோகங்களை எல்லாம் ஓரிரு க்ஷணங்கள் மறந்து அந்த முகத்தைத் தீவிர மாக நினைவுபடுத்தி, தரிசித்ததில் – மன்னிக்கவும் – அழகிய என்ற அற்பச் சொல்லில் குறிப் பிட்டு விடக் கூடிய ரூபம் இல்லை அது. மெழுகு அல்லது பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் மேலும் இரண்டு கரங்கள் செய்து அவளது தோள்களின் கீழே ஒட்டி விட்டால், கேள்வி கேட்காமல் மகாலட்சுமி என்று விழுந்து சேவித்து விடலாம். மடிப்புக் கலையாத, வெண்ணிற நர்ஸ் உடை அணிந்த மகாலட்சுமி. அவளை நம்பித்தான் இரவு அம்மாவை ஒப்படைத்திருக்கிறேன்...

ராமசாமி அட்டெண்டர் ஈஎம்ஆர் வரவும். சுப்பம்மாள் அட்டெண்டர் ஈஎம்ஆர் வரவும். சந்தானலட்சுமி அட்டெண்டர் ஈஎம்ஆர் வரவும்.


விடாமல் யார் யாரையோ அழைத்துக் கொண்டிருந்த மைக். என்னை எப்போது அழைத்ததோ, என்னமோ? அலைந்த அலுப்பில் கட்டையாக விழுந்தவன், அதிகாலை அலறிக் கொண்டு ஓர் ஆம்புலன்ஸ் வந்து நிற்கவும், பதறி எழுந்து, அம்மா இருந்த மாடிப் பக்கம் ஓடினேன்.

இத்தனை பதற்றம் உடம்புக்கு நல்லதல்ல. காலக்ரமத்தில் அல்சர், பிரெஷர் என்று ஏதும் வரலாம்.

எமர்ஜென்ஸி வார்டு வாசலில் நின்றிருந்த வயசான செக்யூரிடி அறிவுறுத்தினார்.

அசப்பில் என் தாத்தா போல் இருக்கிறீர்கள். இந்த உன்னதமான காலைப் போதில் சூடாக ஒரு சாய் அல்லது காப்பி அருந்தினால் மேலும் புத்துணர்ச்சியுடன் பணியைத் தொடரலாமே?

பத்து ரூபாயை உள்ளங்கையில் அழுத்தியதும் என் உடல் நலன் மேல் அவருக்குள்ள அக்கறையை வெளிப்படுத்திவிட்டுப் பெருந்



பா. ராகவன்

தன்மையுடன் என்னை உள்ளே செல்ல அனுமதித்தார்.

பெரிய டாக்டர் ரவுண்ட்ஸ் வருகிற நேரம். கண்டிப்பாக ஐந்து நிமிடத்தில் திரும்பிவிட வேண்டும்.

நீளமான அந்த காரிடாரை ஓடிக்கடந்ததில் ஒன்றரை நிமிஷம் பறந்து விட்டது. எமர்ஜென்ஸி வார்டு. அம்மா இருந்த அறை. அம்மா, நலமா?

பனிச்சென்ற புன்னகையில் தன் சௌக்கியத்தைச் சொன்னாள். நான் ராத்திரி தூங்கினேனா? முன்னதாக, ஏதாவது சாப்பிட்டேனா? அவளுக்கு, நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை தூக்கம் இல்லை. பிராணன் போகிற வலி. அவள் வணங்கும் மகாலட்சுமியே நர்ஸ் மாயாவின் ரூபத்தில் வந்து கவனித்துக் கொண்டாள். பாவம் அந்தப் பெண். ராத்திரியெல்லாம் அவளும் தூங்கவில்லை. ஓடி ஓடி வந்து ஆயின்மென்ட் தடவி, இதமாக உருவி விட்டது தொடங்கி, பெட் பான் வைப்பது வரை எத்தனை பரிவாக நடந்து கொண்டாள்? நர்ஸ் தொழிலே ஆயினும் கூலிக்கு மாரடிக்கிற பலரை அம்மா என்னைப் பிரசவித்த சமயத்தில் பார்த்திருக்கிறாள். இத்தனை கனிவும் பண்புமாக ஒருத்தியை இதுகாறும் கற்பனையிலும் கண்டதில்லை. பெற்ற பெண்ணுக்குக் கூட அத்தனை அனுசரணை கூடுமா என்பது சந்தேகம்.

ரொம்ப நல்லது. உன் சர்டிஃபிகேட்டை பெரிய டாக்டரிடம் சொன்னால், அவளுக்கு ஒரு இங்க்ரிமென்ட் கூடுதலாகக் கிடைக்கக் கூடும்.

ஐயா, டாக்டர் வருகிறார். நீங்கள் சன்னலைத் திறந்து அப்படியே கீழே குதிக்க முடியுமா?

ஒரு எவர்சில்வர் தம்ளர், மெத்தென்று இரண்டு டவல்கள், ஹமாம் சோப்பு, சாஷே தேங்காய் எண்ணெய், ஹேர்பேண்ட் கொஞ்சம். ஃப்ரண்ட் ஓப்பன் நைட்டி இரண்டு - இவை உடனே தேவை. மேற்கொண்டு உங்கள் அம்மா பொழுது போக்காகக் கொறிக்க பிஸ்கெட்டுகள்.

இவற்றை வாங்கிக் கொடுத்துவிட்டு, நீங்கள் வெளியே போகலாம். ப்ரீ-ஆபரேஷன் வார்டுக்கு இன்னும் ஐந்து நிமிடங்களில் கிளம்பி விடுவார்கள். விடிந்ததும் ஏழெட்டு ஆபரேஷன்கள் நடக்கவிருக்கின்றன. லிஸ்டில் உங்கள் அம்மாவின் பெயர் இரண்டாவதாக உள்ளது. காலை ஐந்தரைக்கு ஆபரேஷன்கள் ஆரம்பிக்கும். நீங்கள் ஆறரைக்கு வந்தால் போதும். தியேட்டருக்குப் போவதற்கு முன் கூப்பிட்டுக் காண்பிப்பார்கள். நாற்பது நிமிஷ ஆபரேஷன். முடிந்து, லேசாக நினைவு திரும்பியதும் மறுபடி ஸ்டெச்சரில் கொண்டு வந்து காண்பிப்பார்கள். பிறகு போஸ்ட் ஆபரேஷன் வார்டில் இரண்டு, மூன்று நாட்கள் இருக்க வேண்டி வரும். அங்கே நீங்கள் பார்க்க வரமுடியாது. தினசரி தேவையான மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொடுத்து விட்டு, ஆபீஸுக்குப் போகலாம். இப்போதைக்கு மரத்தடி அல்லது வீட்டுக்குப் போகலாம்.

மலர்ந்த முகம் மாறாத மகாலட்சுமி, மறுநாள் மாலை கூப்பிட்டுச் சொன்னாள்.

அன்றைக்கு நாலைந்து முறை எமர்ஜென்ஸி வார்டின் கருணை மிக்க செக்யூரிட்டியின் தயவால் நான் போய்ப் போய் அம்மாவைப் பார்த்துவிட்டு வந்தேன். வீட்டிலிருந்து கவலையையும் காப்பியையும் சுமந்து வந்த அப்பா, தம்பிகள், மனைவியையும் உள்ளே



சென்று பார்க்க ஏற்பாடு செய்ததை அவள் அறியாமல் இல்லை. மென்மையான எச்சரிக்கையில் அவள் கவலை எனக்குப் புரிந்தது.

விதிகளை மீறுவது பெரிய விஷயமில்லை. ஆனால் பெரிய டாக்டர் பார்த்துவிட்டால், கேள்விமுறை இல்லாமல் பேஷண்டை டிஸ்சாஸ்ஜ் பண்ணிவிடுவார். நஷ்டம் யாருக்கு? பிரசித்தி பெற்ற மருத்துவமனை. பேஷண்டின் சகல தேவைகளையும் கவனித்துக் கொள்ள, அவளைப் போன்ற நர்ஸ்கள் இரவு பகலாகக் காத்திருக்கிறார்கள். ஓர் அவசரமென்றால் என்னவும் செய்து நோயாளியைக் காக்கும் கடவுளராக ஏராள டாக்டர்கள். சின்ன விஷயம். நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் எப்படி?

நான் அவளிடம் வருந்தி மன்னிப்புக் கேட்டேன். ஒரு நர்ஸின் பணிச் சுமையும்

கஷ்டமும் நான் அறிவேன். இந்த மருத்துவ மனையின் கடுமையான சட்ட திட்டங்களையும். ஆனாலும் பாழும் மனம். மன்னித்து விடுங்கள். அம்மா பிழைத்து எழ வேண்டும்.

தோழமையான புன்னகையில் அவன் என்னை வசீகரித்தான். எத்தனை பேஷண்ட்கள்? எத்தனை விதமான உறவு மனிதர்கள்? ஒவ்வொருவராலும் ஒவ்வொருவிதமான பிரச்னைகள். எப்போதும் பூத்திருக்க இவளால் எப்படி முடிகிறது? விழியில் கனிவைத் தேக்கி, ஆளுக்கு அரை ஸ்பூன் அளந்து கொடுக்கிற லாகவம். மிஞ்சிப் போனால் இருபத்தைந்து வயது இருக்குமா? வாழ்வின் உல்லாசங்களைப் பெருந்தன்மையுடன் நிராகரித்துவிட்டு நோயாளிகளின் சேவைக்கு வருவதற்கு எத்தனை பக்குவம் வேண்டியிருக்கும்? சம்பளம் வாங்குகிறார்கள்தான். ஆனால், எத்தனை நாற்றங்களைச் சகித்துக் கொள்ள வேண்டி இருக்கும்? மருத்துவமனை அளிக்கிற சம்பளம் சில ஆயிரங்களும் இவள் புன்னகைக்கே சரியாக இருக்கும். சேவைக்குச் சம்பளம் ஏது?

''என்னங்க சார்! உங்க பத்திரிகையில பக்கம் 1, 2, 3, 4, 5...ன்னு வரிசையா போடாம, 5, 10, 15, 20, 25....ன்னு போடறீங்க?''

''நாங்கதான் போன இதழ்லே சொல்லி இருந்தோமே, அடுத்த இதழ் அதிக பக்கங்களுடன் வரும்னு!'

– மலர் சூர்யா

எமர்ஜென்ஸி வார்டில் அம்மாவுக்கு அடுத்த படுக்கையில் இருக்கிற யாரோ ஒருவனுக்கு, இரவு கொடுத்த உணவு ஒத்துக் கொள்ளாமல், நிற்காத வாந்தியும் பேதியுமாகப் பிரதேசத்தையே அலங்கோலமாக்கியிருக்கிறான். ஆஸ்பத்திரி ஆயாக்களே தயங்குகிற அலங்கோலம். துளி முகம் சுளிக்காமல், தனி ஒருத்தியாக அந்தப் பெண் செய்திருக்கிற வேலையைப் பார்த்து அழுகையே வந்து விட்டது என்று அம்மா சொன்னாள்.

நான் அடுத்ததரம் திருட்டு வழியில் வார்டுக்குப் போனபோது அந்த ஆளின் தலையை மடியில் ஏந்தி, படுத்தவாக்கில் ஜூஸோ என்னவோ அவன் அருந்தப் பண்ணிக் கொண்டிருந்ததைக் கண்டேன். காகக்குக் காட்டக் கூடிய கனிவா அது?

தேவதைகளால் ஆசீர்வதிக்கப்பட்டவள். அழகும் அடக்கமும், பின் சேர்வது எப்படி? இவளை மணக்கப் போகிறவன் முந்தைய ஜென்மங்களில் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்திருப்பான். அன்றியும் பற்பல நற்காரியங்களால் உன்னதமான வரங்கள் பெற்றிருக்கக் கூடும். ஒரு விஷயம். இத்தனை அழகையும் பண்பையும் கட்டி ஆளுகிற வித்தகனாக இருக்க வேண்டும்.

மூன்று முழு தினங்கள். அம்மாவைப் பார்த்து எழுபத்திரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. வெற்றிகரமான அறுவைச் சிகிச்சையில், நகர்ந்திருந்த டிஸ்கை நார்மல் நிலைக்குக் கொண்டு வந்து விட்டதாகக் கை குலுக்கிச் சொல்லிவிட்டு, பெரிய டாக்டர் போய்விட்டார்.

நடப்பதற்குக் கொஞ்சநாள் ஆகுமே தவிர வலி நின்று விட்டது. மற்றபடி நார்மல் என்று மாயா சொன்னாள்.

அது போதாதா? நன்றி சொல்லிவிட்டு, ஓடினேன்.

காரிடாருக்கு வெளியே மழை தூறிக் கொண்டிருந்த மாலையில் அம்மாவை தனி அறையில் கொண்டு வந்து படுக்க வைத்துப் போனார்கள்.

மலர்ந்த முகமும் களைத்த விழிகளுமாக, வந்து பார்த்த உறவினர்களுடன் ஒரு சில வார்த்தைகள் பேசிவிட்டு, அலுப்பில் அம்மா தூங்கி விட்டாள்.

இரவு எழுப்பி டிபன் கொடுத்து விட்டுப் பேச்சுக் கொடுத்தேன். மூன்று நாள் தனிமை அனுபவம் எப்படி இருந்தது?

அம்மாவின் முகம் வாடிவிட்டது. சில நிமிடங்கள் எங்கோ நிலைகுத்தியிருந்த பார்வையை மீட்டு, என்புறம் திருப்பினாள்.

"அந்தப் பொண்ணு ரொம்ப சமத்துன்னு நினைச்சேன்."

"யாரு?"

"நர்ஸ் மாயா."

"இல்லையா பின்னே?"

இல்லை என்று அம்மா சொன்னாள்.

போஸ்ட் ஆபரேஷன் வார்டு ட்யூட்டி நர்ஸ்களில் ஒருத்தி லீவ் போட்டு விட்டிருக்கிறாள். ஆகவே, எமர்ஜென்ஸி வார்டு நர்ஸ் அங்கே பணிக்கு வந்திருந்தாள்.

பேஷண்ட்கள் உறங்கத் தொடங்கிய இரவு பத்தரை மணி. அம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. வீட்டு ஞாபகம். போட்டது போட்டபடி அவள் வந்து விட்டாள். என் மனைவி கெட்டிக்காரிதான். ஆனால் சிறு

பெண். பனங்காயைத் தாங்குவாளா? அப்பா வேளைக்கு பிரெஷர் மாத்திரை சாப்பிடு கிறாரா போன்ற தின்னத்தகாத சின்னக் கவலைகள். ஆகவே, உறக்கம் வரவில்லை.

பேஷண்ட்கள் சாப்பிட்டு வைத்த பாத் திரங்களை எடுத்துப் போக டிராலி தள்ளி வந்த பையனை மாயா கூப்பிட்டாள்.

"ஞாபகம் இருக்கு இல்லை? நாளைக்கு ராத்திரி, பத்து மணிக்கு கரெக்டா ஹாஸ்ட லுக்கு வந்துடணும். வரும்போது என்ன கொண்டு வரணும்னு சொல்லி இருக்கேன்?"

"குவாட்டர் ஜின், சிக்கன் ஃப்ரைட் ரைஸ் ஹாஃப் பிளேட், ரெண்டு பாக்கெட் மாணிக்சந்த்."

"மறந்துட மாட்டியே?"

"சேச்சே!"

"ஞாபகம் வெச்சுக்கோ. என்னை மலை ஏத்திட்டுத்தான் நீ வீட்டுக்குப் போகணும்."

கண் சிமிட்டித் தலையாட்டி விட்டுத் திரும்பிப் போகிற வார்டு பாய்.

"ஜிம்முன்னா சாராயம் தானே?" என்று அம்மா கேட்டாள்.

"ஜிம் இல்லைம்மா. அது ஜின்."

"என்னவோ எழவு. நீ போடறியே, அதானே மாணிக்சந்துங்கறது?"

"ம்... அது மாதிரிதான்."

"ஆறவே இல்லை எனக்கு. எத்தனை லட்சணமா, பண்பா இருக்கற பொண்ணு! என்னை மலையேத்திட்டு நீ வீட்டுக்குப் போன்னு அந்த கட்டை மீசைக்காரனிடம் சொல்றா. தாங்கலை தெரியுமா? வேணாம்டி, கெட்டுப் போகாதேன்னு கூப்பிட்டுக் கதற லாம் போல இருந்தது. கஷ்டப்பட்டு அடக் கிண்டேன்."

எனக்கும் கதற வேண்டும் போலத்தான் இருந்தது. மிகவும் அதிர்ந்து இருந்தேன். பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் செய்து, நான் மானசீகமாக ஒட்டியிருந்த இரு கூடுதல் கரங்கள் அவளது தோள்களிலிருந்து நழுவிக் கொண்டிருந்தன.

ஷாம்பு போட்டு அலசிய கூந்தல் ஃபேன் காற்றில் அலைய, மெல்லிய நைட்டி யில் மாயா கட்டிலில் அமர்ந்திருக்கிறாள். மலையேற்ற வந்தவன் ஊற்றித் தந்த கண் ணாடிக் குவளை, அவள் கரத்தில் இருக் கிறது. அரை மயக்கத்தில் அவள் உதடுகள் அசைவதில் ஸ்பானிஷ் பாடல் ஒன்று மயங்கி வருகிறது. மெல்ல அருகே வந்து அவள் தோள் தொட்டுக் கட்டிலில் சாய்க்கிற கட்டை மீசைக்காரன். பிளேட்டில் அவள் மிச்சம் வைத்திருக்கிற இறைச்சி கலந்த சோற்றுப் பருக்கைகளின் மேல் மொய்த்து அமர்கிற ஈ...

ரோமம் சிலிர்த்து, உதறி விழித்துக் கொண்டேன். தோற்றம் எப்போதும் மாயை யாகத்தான் இருக்கிறது. மாயை எத்தனை அழகாகவும் இதம் தரக் கூடியதாகவும் இருக் கிறது? நிஜத்தின் முகத்திற்கு மட்டும் ஏன் இத்தனை குரூரம்?

அவளுடன் ஒரு சம்பந்தமும் இல்லாத என்னால் ஏன் இதைச் சகிக்க முடியாமல் இருக்கிறது? ஒரு குழந்தையின் பட்டு முகத் தையும் புன்னகையையும் அவள் வைத் திருந்து, அவ்வப்போது திறமையாகக் கையாள்வதனால்தான் என்று தோன்றியது.

நம்பவே முடியாமல், அவள் தானா, அவள்தானா என்று திரும்பத் திரும்ப ஏழெட்டு முறை அம்மாவிடம் கேட்டு விட் டேன். அவளேதான். சந்தேகமில்லை. அம்மா வுக்கு வெகு அருகில் நின்றபடிதான் அவள் பேசினாள். முழு சுய உணர்வும் நினைவும் கொண்டுதான் அம்மா அதை கவனித்தாள்.

நல்லது. A face behind the mask. அல்லது, mask behind the face. மனிதர் களைப் பற்றிய அழகான, சோப்புக் குமிழ் போன்ற வர்ணஜாலம் காட்டும் பிரத்தியேக பிம்பங்களை வரைந்து வைத்துக் கொள்வதே ஆபத்து தான்.

அம்மாவை டிஸ்சார்ஜ் பண்ணி விட் டார்கள். கைத்தாங்கலாக அழைத்து வந்து வண்டியில் ஏற்றிவிட்டு, சாமான்களை எடுத்துப் போக அறைக்கு வந்தேன். மாயா எதிரே வந்தாள். மாறாத மலர்ச்சியும் குறை யாத கனிவுமாக.

"கிளம்பியாச்சா? ஆல் தி பெஸ்ட்."

"நன்றி. இத்தனை நாள் என் அம்மாவை அன்பாக கவனித்துக் கொண்டதற்கும் நான் அளித்த பிற சில்லறைச் சள்ளைகளைச் சகித் துக் கொண்டதற்கும்..."

"அது பரவாயில்லை. எல்லோரும் செய் வதுதான்."

"உங்கள் நலத்துக்கும் இனிய கணவர் அமையவும் பிரார்த்தனை செய்வேன்."

"தாங்ஸ். ஆனால், கல்யாணம் பண்ணிக் கொள்கிற ஐடியாவெல்லாம் இல்லை. ரொம்பக் கஷ்டம்" என்றாள் மாயா.

கஷ்டம்தான் என்று நினைத்துக் கொண் டேன். ⬤



ஐம்பத்திரண்டாம்
அத்தியாயம்

கிழவன் கல்யாணம்



கல்கி கலெக்ஷன்

மாமல்லபுரத்துக் கடற்கரையில் சிறிய சிறிய கற்பாறைகள் பல உண்டு. சில சமயம் கடல் பொங்கி வந்து அப்பாறைகளின் மீது அலைகள் மோதிக் கொண்டிருக்கும். சில சமயம் கடல் பின்வாங்கிச் சென்று அப்பாறைகள் உலருவதற்கு அவகாசம் அளிக்கும். அவற்றில் ஒரு சிறிய பாறையையேனும் மாமல்லபுரத்து மகா சிற்பிகள் சும்மா விட்டு விடவில்லை. அந்தந்தப் பாறைக்குத் தகுந்தபடி பெரிதாகவும் சிறிதாகவும் காட்சிகளைக் கற்பனை செய்து அழியாச் சிற்ப உருவங்களை அமைத்து வைத்தார்கள்.

அவ்விதம் சிறிய பாறைகள் இரண்டு எதிரெதிராக அமைந்திருந்த இடத்தை ஆதித்த கரிகாலனும் மற்ற இருவரும் அணுகினார்கள். ரதத்திலிருந்து இறங்கிச் சென்றார்கள். இரண்டு பாறைகளையும் இரண்டு சிம்மாசனங்களாகக் கருதி, கரிகாலனும் மலையமானும் அமர்ந்தார்கள். பார்த்திபேந்திரன் அவர்களுக்குச் சற்று அப்பால் நின்றான். அடிக்கடி அலைகள் வந்து அவர்களுடைய முழுங்கால் வரையில் நனைத்துக் கொண்டிருந்தன. அலைகள் பாறைகளில் மோதியபோது எழுந்த

அமரர் கல்கி



திவலைகள் சில சமயம் அவர்கள் மீது முத்து மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் படகுகள் வரிசை வரிசையாகப் பல்வகைப் பண்டங்களைச் சுமந்து கொண்டு கடலைக் கிழித்துக் கொண்டு சென்றன. அப்பண்டங்களைப் படகிலிருந்து இறக்கிப் பாய் மரம் விரித்து நின்ற பெரிய மரக் கலங்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

"இரட்டை மண்டலப் படையெடுப்புக்காகச் சேகரித்து வைத்த பண்டங்களெல்லாம் இலங்கைக்குப் போக வேண்டியிருப்பதை நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது!'' என்றான் பார்த்திபேந்திரன்.

"பின்னே என்ன செய்கிறது? சோழ நாட்டின் பொறுக்கி எடுத்த வீரர் படைகள் இலங்கையில் இருக்கின்றன. அவர்கள் போர்க்களங்களில் வெற்றி மேல் வெற்றி அடைந்து வருகிறார்கள். ஆயிரம் வருஷமாக இலங்கை அரசர்கள் வீற்றிருந்து அரசு புரிந்த அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஜயக்கொடி நாட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் பட்டினி கிடந்து சாகும்படி விட்டுவிடுவதா?'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''அப்படி விட வேண்டும் என்று யார் சொன்னார்கள்? உணவுப் பண்டங்கள் அனுப்ப வேண்டியதுதான். ஆனால் சோழ நாட்டிலிருந்து நாகப்பட்டினத் துறைமுகத்தில் ஏறிப் போக வேண்டும். அல்லது பாண்டிய நாட்டிலிருந்து சேதுக்கரையில் ஏற்றி அனுப்ப வேண்டும். இந்த வரண்ட தொண்டை மண்டலத்திலிருந்து போக வேண்டிய அவசியம் என்ன? அதிலும் நாம் வடக்கே படையெடுத்துச் செல்வதற்கு இதனால் தடை ஏற்படுமே என்பதை எண்ணிச் சொன்னேன்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''அதை நினைத்தால் எனக்கும் உள்ளம் கொதிக்கத்தான் கொதிக்கிறது. அந்தப் பாவி பழுவேட்டரையர்களின் நோக்கம் என்னதான் என்று தெரியவில்லை. எத்தனை நாள் இதையெல்லாம் சகித்துக் கொண்டிருப்பது? தாத்தா! ஏன் இன்னும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது வாயைத் திறந்து சொல்லுங்கள்!'' என்றான் கரிகாலன்.

"குழந்தாய்! இந்தக் கடல் அலைகள் ஓயாமல் 'ஓ'வென்று சத்தமிடுகின்றன. கடல் அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு உன் தோழன் பார்த்திபேந்திரனும் கூச்சலிடுகிறான். இதற்கு நடுவில் நான் என்னமாய்ப் பேசுவது? எனக்கோ வயதாகித் தள்ளாமை வந்து விட்டது...!'' என்றார் மலையமான் மிலாடுடையார்.

"பார்த்திபேந்திரா! சற்று நேரம் நீ சும்மா இரு. தாத்தா அவருடைய கருத்தைச் சொல்லட்டும்!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''இதோ வாயை மூடிக் கொண்டு விட்டேன். பாவம்! தாத்தா தள்ளாத வயதில் மலைக்கோட்டையிலிருந்து கீழே இறங்கி இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்திருக்கிறார். அவர் முன்னால் நான் வாயைத் திறக்கலாமா? இந்தக் கடலுக்குத்தான் கொஞ்சமும் புத்தியில்லை! ஓயாமல்

இரைந்து கொண்டிருக்கிறது! இதை அடக்குவார் ஒருவரும் இல்லை. நம் மலை அரசரிடம் சமுத்திர ராஜனுக்குக் கொஞ்சமும் பயமில்லை போலிருக்கிறது!'' என்றான் பார்த்திபேந்திரன்.

"தம்பி! பார்த்திபேந்திரா! அப்படியும் ஒரு காலம் இருந்தது. திருக்கோவலூர் மலையமான் என்ற பெயரைக் கேட்டு இந்தக் காசினியில் உள்ள அரசர்களெல்லாம் நடுநடுங்குவார்கள். இரட்டை மண்டலத்துச் சளுக்கர்களும், வல்லத்து வாண கோவரையர்களும், வைதும்பராயர்களும், கங்கர்களும், கொங்கர்களும் மலையமான் பெயரைக் கேட்டதுமே இடி முழக்கம் கேட்ட சர்ப்பத்தைப் போல் பொந்தில் ஒளிந்து கொள்வார்கள். சமுத்திர ராஜனும் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகத்தான் இருப்பான். இந்த உடம்பு கொஞ்சம் தளர்ச்சி அடைந்ததும் இப்போது எல்லாரும் துள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயிரம் வருஷத்துப் பழங்குடியைச் சேர்ந்த என்னை நேற்றைக்கு மேற்கேயிருந்து வந்த பழுவேட்டரையர்கள் ஒழித்துவிடப் பார்க்கிறார்கள்! அது ஒரு நாளும் நடக்கப் போவதில்லை! கரிகாலா! பழுவேட்டரையர்களின் நோக்கம் இன்னதென்று தெரியவில்லை என்பதாகச் சற்று முன்னால் சொன்னாய் அல்லவா! அவர்களுடைய நோக்கம் இன்னதென்று நான் சொல்லுகிறேன், கேள்! உன்னையும் உன் சகோதரனையும் தனித் தனியே பலவீனப்படுத்துவதுதான் அவர்களுடைய நோக்கம். இலங்கையில் உன் தம்பி அருள் மொழி தோல்வி அடைய வேண்டும். அதனால் அவனுக்கு அவமானம் நேர வேண்டும். இங்கே உனக்கு உன் தம்பியின் பேரில் கோபம் ஏற்பட வேண்டும். நீங்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்; அதைப் பார்த்து இந்தக் கிழவன் வேதனைப்பட வேண்டும்! இதுதான் அவர்களுடைய அந்தரங்க நோக்கம்...'' என்று மிலாடுடையார் ஆத்திரத்துடன் சொல்லி வருகையில் கரிகாலன் குறுக்கிட்டான்.

"இந்த நோக்கத்தில் அவர்கள் ஒரு நாளும் வெற்றி அடையப் போவதில்லை, தாத்தா! என் தம்பியையும் என்னையும் யாராகிலும் பிரிக்க முடியாது. அருள்மொழிக்காக நான் உயிரையும் விடுவேன். எனக்கு ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது;-கப்பல் ஏறி நானும் இலங்கைக்குப் போகலாமா என்று. அங்கே அவன் என்ன கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானோ என்னமோ! நான் இங்கே சுகமாக உண்டு உடுத்து அரண்மனையில் தூங்கிக் கொண்டு காலங் கழிக்கிறேன். என் வாளும் வேலும் துருப்பிடித்துப் போகின்றன. ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. தாத்தா! சொல்லுங்கள்! இந்தப் பண்டங்கள் ஏற்றும் கப்பல்களில் ஒன்றில் ஏறி நானும் இலங்கைக்குப் போகட்டுமா?'' என்று கேட்டான் கரிகாலன்.

"அரசே! அருமையான யோசனை! பல நாளாக நான் நினைத்துக் கொண்டிருந்ததைத் தாங்களும் சொல்லுகிறீர்கள். புறப்படலாம், வாருங்கள்! இதற்குத் தாத்தாவை யோசனை கேட்பதில் பயனில்லை. இவரைக் கேட்டால் 'வேண்டாம் பொறு!' என்றுதான் புத்திமதி சொல்லுவார்! நாளைக்கே நாம் புறப்படலாம். தொண்டை மண்டலப் படையில் பாதியை அழைத்துக் கொண்டு போகலாம். இலங்கை யுத்தத்தை ஒரு வழியாக முடித்துக் கொண்டு நேரே நாகப்பட்டினத்தில் வந்து இறங்கலாம். இறங்கித் தஞ்சாவூருக்குச் சென்று அந்தப் பழுவேட்டரையர்களை ஒரு கை பார்த்து விடலாம்...!'' என்று பார்த்திபேந்திரன் பொறித்துக் கொட்டினான்.

"கரிகாலா! பார்த்தாயா? நான் முதலிலேயே என்ன சொன்னேன்? இவன் வாயை மூடிக் கொண்டிருந்தால் தான் நான் பேசுவேன் என்று சொல்லவில்லையா?''

"இதோ வாயை மூடிக் கொள்கிறேன், தாத்தா! நீங்கள் சொல்வதையெல்லாம் சொல்லி முடியுங்கள்!'' என்று பார்த்திபேந்திரன் வாயைக் கையினால் பொத்திக் கொண்டான்.

"கரிகாலா! நீ வீராதி வீரன். உன்னைப்

போன்ற பராக்கிரமசாலி இந்த வீரத் தமிழகத்திலே கூட அதிகம் பேர் பிறந்த தில்லை. என்னுடைய எண்பது பிராயத் துக்குள் நானும் எத்தனையோ பெரிய யுத்த களங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் எதிரிகளின் கூட்டத்தில் தன்னந் தனியே புகுந்து சென்று உன்னைப் போல் சண்டையிட்ட இன்னொரு வீரனைப் பார்த்ததில்லை. சேவூர்ப் பெரும்போர் நடந்தபோது உனக்குப் பிராயம் பதி னாறுகூட ஆகவில்லை. அந்த வயதில் பகைவர்களின் கூட்டத்தில் நீ புகுந்து சென்ற வேகத்தையும், இடசாரி வல சாரியாக உன் வாள் சுழன்ற வேகத்தை யும், பகைவர்களின் தலைகள் உருண்ட வேகத்தையும் போல் நான் என்றும் பார்த்ததில்லை. இன்னும் என் கண் முன்னால் அந்தக் காட்சி நின்று கொண் டிருக்கிறது. உன்னைப் போலவே உன் சிநேகிதன் பார்த்திபேந்திரனும் வீராதி வீரன்தான். ஆனால் நீங்கள் இரண்டு பேரும் பதற்றக்காரர்கள்; முன்கோபம் உள்ளவர்கள். அதனால் உங்களுக்கு யோசிக்கும் சக்தி குறைந்து விடுகிறது. எது செய்ய வேண்டுமோ அதற்கு நேர்மாறான காரியத்தைச் செய்யத் தோன்றிவிடு கிறது..."

"தாத்தா! இம்மாதிரி உபதேசம் தாங் கள் இதற்கு முன் எத்தனையோ தடவை செய்திருக்கிறீர்கள்..."

"செய்திருக்கிறேன்; ஆனால் ஒன்றும் பயன்படவில்லை என்கிறாயா? பேசாமல் என்னை ஊருக்குத் திரும்பிப் போகச் சொல்லுகிறாயா?"

"இல்லை, இல்லை! இப்போது நடக்க வேண்டிய காரியம் என்னவென்று சொல் லுங்கள்."

"உன் சகோதரன் அருள் மொழியை உடனே இவ்விடத்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். நீயும் உன் சகோத ரனும் பிரிந்திருக்கவே கூடாது..."

"தாத்தா! இது என்ன யோசனை? அருள்மொழி இங்கே வந்துவிட்டால் இலங்கை யுத்தம் என்ன ஆகிறது?"

"இலங்கை யுத்தம் இப்போது ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறது. அனுராத புரத்தைப் பிடித்தாகிவிட்டது. இனி அங்கே மழைக் காலம். இனி நாலு மாதத் திற்கு ஒன்றும் செய்ய முடியாது. பிடித்த இடத்தை விட்டுக் கொடாமல் பாது காத்து வர வேண்டியதுதான். இதை மற்ற தளபதிகள் செய்வார்கள். அருள்மொழி இச்சமயம் இங்கே இருக்க வேண்டியது மிகவும் அவசியம். கரிகாலா! உண்மையை மூடி மூடி வைப்பதில் பயன் என்ன? விஜயாலய சோழரின் குலத்துக்கும் அவர் அடிகோலிய சோழ சாம்ராஜ்யத்துக்கும் பேராபத்து வந்திருக்கிறது. நீயும் உன் னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் இப் போது ஒரே இடத்தில் தங்கிச் சர்வ ஜாக் கிரதையாக இருக்க வேண்டும். நம் முடைய பலத்தையெல்லாம் திரட்டி வைத்துக் கொள்ளவும் வேண்டும். எப் போது என்ன விதமான அபாயம் வரும் என்று சொல்ல முடியாது..."


"தாத்தா! இது என்ன இப்படி என் னைப் பயமுறுத்துகிறீர்கள்? என் கையில் வாள் இருக்கும் வரையில் எனக்கு என்ன பயம்? எப்படிப்பட்ட அபாயம் வந்தால் தான் என்ன? தன்னந்தனியாக நின்று சமாளிப்பேன். எத்தகைய அபாயத்துக்கும் நான் பயப்படுகிறவன் அல்ல..."

"பிள்ளாய்! நீ எப்படிப்பட்ட தைரிய சாலி என்று எனக்குச் சொல்ல வேண் டுமா? ஆயினும், திருவள்ளுவர் பெரு மான் சொல்லியிருப்பதையும் சில சமயம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்!"

என்று அந்த மகான் சொல்லியிருக் கிறார். போர்க்களத்தில் பகைவர்களுக்கு எதிரெதிரே நின்று போரிடும் போது அச் சம் கூடாது. அப்படிப் பயப்படுகிறவன் கோழை. அவ்விதம் பயப்படுகிற பிள்ளை என் வம்சத்தில் பிறந்தால் அவனை நானே இந்தக் கிழடாய்ப் போன வலு விழந்த கையினால் வெட்டிப் போட்டு விடுவேன். ஆனால் மறைவில் நடக்கிற சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் கண்ணுக் குத் தெரியாத அபாயங்களுக்கும் பயப்பட் டேயாக வேண்டும். பயப்பட்டு, அந்தந்த

நிலைமைக்குத் தகுந்த முன் ஜாக்கிரதையும் செய்து கொள்ள வேண்டும். அரச குலத்தில் பிறந்து சிம்மாசனத்துக்கு உரியவர்கள் இது விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. இருந்தால் நாட்டுக்கே நாசம் விளையும்.''



"தாத்தா! அப்படி என்ன இரகசிய அபாயங்களைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சற்று விளக்கமாகச் சொன்னால்தானே நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க முடியும்...?''

''சொல்லத்தான் வருகிறேன். சில நாளைக்கு முன்னால் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரி வேளையில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்குப் பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். இன்னும் தென்னவன் மழவராயர், குன்றத்தூர்க் கிழார், வணங்காமுடி முனையரையர், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார்-இவர்கள் எல்லாரும் வந்திருந்தார்களாம். என் காதுக்கு வந்தது இந்தப் பெயர்கள் தான். வேறு பலரும் வந்திருக்கலாம்...''

''வந்திருக்கட்டும்; அதனால் என்ன? எல்லாரும் நடுநிசி வரையில் கூத்தும் கேளிக்கையும் பார்த்துவிட்டு, வயிறு புடைக்கச் சாப்பிட்டு, அதற்குமேல் மிடா மிடாவாய்க் கள்ளைக் குடித்து விட்டுத் தூங்கப் போயிருப்பார்கள். அதைப் பற்றி நமக்கு என்ன? நீங்கள் சொன்ன தாடி மீசை நரைத்த கிழடுகள் எல்லாம் கூடிப் பேசி என்ன புரட்டி விடுவார்கள்?''

"கிழடுகளைப் பற்றி உனக்கு இவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருக்கும் பட்சத்தில் நான் என்ன சொல்லி என்ன பயன்? நானும் ஒரு கிழவன் தானே? அவர்கள் எல்லாரையும் விடத் தொண்டு கிழவன் நான்...!''

"தாத்தா! கோபம் வேண்டாம். அந்தக் கையினாலாகாத கிழங்களோடு தங்களை நான் சேர்த்து விடுவேனா? சரி, அப்புறம் என்ன நடந்தது, சொல்லுங்கள்!''

"கையினால் ஆகாக் கிழங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறாய்! அவர்களில் தலைமைப் பெரிய கிழவன் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கலியாணம் செய்து கொண்டான் என்பதை மறந்து விடாதே! இளம் பெண்ணை மணந்த கிழவனைப் போல் உலகில் அபாயகரமான

இளைஞன் யாரும் இல்லை என்பதையும் தெரிந்து கொள்!"

கிழவனின் கல்யாணத்தைப் பற்றிய பேச்சுத் தொடங்கியதும் ஆதித்த கரிகாலனுடைய முகத்தில் ஒரு விசித்திர மாறுதல் உண்டாகியது. அவனுடைய கண்கள் திடீரென்று சிவந்து இரத்த பலி கேட்கும் க்ஷுத்ர தேவதையைப் போல் விழித்தன. உதடுகள் துடிதுடித்தன. பற்கள் நறநறவென்று கடித்துக் கொண்டன.

இதையெல்லாம் மலையமான் கவனிக்கவில்லை; ஆனால் பார்த்திபேந்திரன் கவனித்துக் கொண்டான்.

"அந்தக் கலியாணப் பேச்சு இப்போது என்னத்துக்கு, ஐயா! சம்புவரையர் அரண்மனையில் அப்புறம் என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்" என்றான் பல்லவ வீரன்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். ஆனால் வயதாகிவிட்டது அல்லவா? புத்தி தடுமாறி வேறு எங்கேயோ போய் விடுகிறேன். கேள், கரிகாலா! பார்த்திபேந்திரா! நீயும் கேட்டுக் கொள்! அந்த நள்ளிரவுக் கூட்டம் கிழவர்களின் கூட்டம் மட்டும் அல்ல. சில வாலிபர்களும் அதில் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் சம்புவரையன் மகன் கந்தமாறன். இன்னொருவன்...." என்று தயங்கினதைப் பார்த்து, "யார், தாத்தா? இன்னொருவன் யார்?" என்று கரிகாலன் தூண்டிக் கேட்டான்.

"உன்னுடைய பெரிய பாட்டனார் கண்டராதித்தருடைய திருக்குமாரன், - உன்னுடைய சித்தப்பன்-மதுராந்தகத் தேவன்தான்!"

இதைக் கேட்டதும் ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் கலகலவென்று சிரித்தார்கள்.

"இது என்ன சிரிப்பு! இந்தச் சிரிப்புக்குப் பொருள் என்ன? மறுபடியும் என்னைப் பரிகசிக்கிறீர்களா?" என்று மிலாடுடையார் கேட்டார்.

"இல்லை, தாத்தா! இல்லை! மதுராந்தகனைத் தாங்கள் 'வாலிபன்' என்கிறீர்களே? அதற்காகத்தான் சிரிக்கிறோம். அவன் கிழங்களிலேயெல்லாம் தொண்டுக் கிழடு அல்லவா? பழுத்த சிவஞானக் கிழடு அல்லவா?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"கிழவனுக்குச் சில சமயம் யௌவனம் திரும்பும் என்று நீ கேள்விப்பட்டது இல்லையா? அதுபோல் மதுராந்தகனுக்கும் இளமை திரும்பியிருக்கிறது. சில நாள் முன்பு வரையில் 'துறவியாகப் போகிறேன்; சிவ கைங்கரியம் செய்யப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவன், ஒன்று, இரண்டு, மூன்று என்று கலியாணம் செய்து கொண்டு போகிறான் அல்லவா..."

"செய்து கொள்ளட்டும்; இன்னும் பல கலியாணம் செய்து கொள்ளட்டும். அதனால் என்ன?"

"தம்பி! மதுராந்தகனின் கலியாணங்கள் சாதாரண கலியாணங்கள் அல்ல. இராஜரீகக் கலியாணங்கள். பழுவேட்டரையர்களின் அந்தரங்க சூழ்ச்சியைச் சேர்ந்த கலியாணங்கள்...!"

"தாத்தா! இன்னும் எதற்காக மர்மமாகவே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? விட்டுச் சொல்லுங்கள்! பழுவேட்டரையர்கள் என்னதான் விரும்புகிறார்கள்? ஊர் ஊராய்ச் சென்று அவர்கள் கூட்டம் போடுவதின் நோக்கம் என்ன? மதுராந்தகத் தேவனை வைத்துக் கொண்டு என்ன செய்யப் பார்க்கிறார்கள்?" என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"வேறு ஒன்றும் இல்லை; உனக்கும் உன் தம்பிக்கும் இராஜ்ய உரிமை இல்லையென்று செய்துவிட்டு, மதுராந்தகனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்ற எண்ணியிருக்கிறார்கள். அதற்கு உன் தந்தையின் சம்மதத்தைப் பெறுவதற்காகவே அவரைத் தஞ்சைக் கோட்டையில் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள்!" என்றார் மிலாடுடையார்.



ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம்

மலையமான் ஆவேசம்

அறிவைப் போலவே ஆற்றலும் ஆற்றலைப் போல அநுபவமும் பெற்று முதிர்ச்சி அடைந்திருந்த திருக்கோவலூர் மலையமான் அரசர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, ஆதித்த கரிகாலன் மூர்ச்சையடைந்து விழுந்து விடவில்லைதான்! ஆயினும் சிறிது நேரம்

செயல் இழந்து ஸ்தம்பித்து நின்று விட்டான். பார்த்திபேந்திரனும் வாயடைத்துப் போய் மௌனமாகி நின்றான். கடலும் ஓசை அடங்கி விட்டதாகத் தோன்றியது. தூரத்தில் படகிலிருந்து பண்டங்களை இறக்கி மரக்கலங்களில் ஏற்றுவோரின் 'ஏலேலோ' சத்தங்கூட அச்சமயம் அடங்கி நின்று போயிருந்தது.

வியப்புக்கு இடங்கொடுத்து விட்டதற்காக வெட்கப்பட்ட ஆதித்த கரிகாலன், சட்டென்று பாட்டனார் முகத்தை நிமிர்ந்து நோக்கி, "தாத்தா! இப்படியெல்லாம் நாடு நகரங்களில் சிலர் பேசி வருவதாக என் காதிலும் விழுந்தது. அது வெறும் பொய் வதந்தி என்று எண்ணியிருந்தேன். நீங்கள் இவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்களே? தெரிந்து கொண்டுதான் சொல்கிறீர்களா? இப்படியும் நடக்கக்கூடுமா!" என்றான்.

"ஏன் நடக்க முடியாது? உன் பாட்டனாருக்கு முன்னால் உன் பெரிய பாட்டனார் கண்டராதித்த தேவர்தானே சோழ நாட்டை ஆண்டார்! அவருடைய குமாரனுக்கு உங்களைக் காட்டிலும் அதிக உரிமை இந்த ராஜ்யத்தில் உண்டல்லவா?" என்றார் மலையமான் மிலாடுடையார்.

"இல்லவே இல்லை! அந்த முழு அசடன், நாலு வார்த்தை பேசத் தெரியாதவன், கையில் வாள் எடுத்து அறியாதவன், பெண்ணாய்ப் பிறக்கத் தவறி ஆணாகப் பிறந்தவன் - அவனுக்கு இந்த இராஜ்யம்



உரிமையா? பால் மணம் மாறாத பன்னிரண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்தவர், வீர பாண்டியன் தலைகொண்ட சிங்கம், தோல்வி என்பதையே அறியாத வீராதி வீரர், ஆதித்த கரிகாலருக்கு உரிமையா? ஐயா! மிலாடுடையாரே! வயதாகி விட்டபடியால், தங்களுடைய அறிவு கூட மழுங்கி விட்டதா?" என்று சீறினான் பார்த்திபேந்திரன்.

அவனைக் கரிகாலன் அதட்டி அடக்கி விட்டு, "தாத்தா! எனக்கு இந்த இராஜ்யம் ஒரு பொருட்டு அல்ல. வேண்டுமானால் என் கை வாளின் உதவி கொண்டு இதைப் போன்ற பத்து இராஜ்யங்களை ஸ்தாபித்துக் கொள்வேன். ஆனால் இதில் நியாயம் எப்படி? முதலிலேயே மதுராந்தகனுக்குத்தான் இராஜ்யம் என்று



சொல்லியிருந்தால் நான் குறுக்கே நின்றிருக்க மாட்டேன். நாடு அறிய, நகரம் அறிய மக்கள் எல்லாரும் அறிய எனக்குத் தான் அரசுரிமை என்று இளவரசப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு, இப்போது எப்படி மாறலாம்? உங்களுக்கு இது சம்மதமாயிருக்கிறதா?" என்று கேட்டான்.

"எனக்குச் சம்மதமாயில்லை, ஒரு நாளும் நான் சம்மதிக்கப் போவதுமில்லை. நீ சம்மதித்து இராஜ்யத்தை மதுராந்தகனுக்குக் கொடுப்பதாகச் சொன்னால், முதலில் உன்னை இந்த வாளால் கண்டதுண்டமாய் வெட்டிப் போடுவேன். பிறகு உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற உன் தாயை வெட்டிப் போடுவேன். பிறகு உன் தாயைப் பெற்றவனாகிய நானும் என் கையினாலேயே வெட்டிக் கொண்டு சாவேன். என் உடம்பில் உயிர் இருக்கும் வரை இந்தச் சோழ ராஜ்யம் உன்னை விட்டுப் போக விடேன்!" என்று அந்த வயோதிகர் கர்ஜித்தபோது, அவருடைய மங்கிய கண்களில் மின்னொளி வீசியது. உணர்ச்சி ஆவேசத்தில் தளர்ந்து போயிருந்த அவர் உடம்பெல்லாம் நடுங்கியது.

பார்த்திபேந்திரன், "அப்படிச் சொல்லுங்கள், தாத்தா! அப்படிச் சொல்லுங்கள்!" என்று கூவிக் கொண்டே ஓடிவந்து மலையமானைத் தழுவிக் கொண்டான். அவனுடைய கண்களில் கண்ணீர் பெருகிற்று.

கரிகாலனும் சற்று நேரம் ஆழ்கடலை நோக்கியவாறு இருந்தான். பிறகு பாட்டனாரைப் பார்த்து, "தாத்தா! தங்களுடைய எண்ணம் அதுவானால் தயக்கம் ஏன்? உடனே படை திரட்டிக் கொண்டு தஞ்சைக்குப் புறப்படுவோம். பழுவேட்டரையர்களையும் மற்றும் அவர்களைச் சேர்ந்த மழுவரையர், சம்புவரையர், முத்தரையர், முனையரையர் எல்லோரையும் ஒரேயடியாக ஒழித்து விட்டுத் தஞ்சைக் கோட்டையைப் பிடிப்போம். மதுராந்தகனைச் சிறையில் அடைப்போம். சக்கரவர்த்தியை விடுதலை செய்வோம். தங்களுடைய ஆசி எங்களுக்கு இருந்தால் போதும். நானும் பார்த்திபேந்திரனும் சேர்ந்தால், எங்களை வெல்லக்கூடியவர்கள் இந்தப் பூவுலகில் யார்?" என்று பெருமிதத்துடன் கூறினான்.

"உங்களைப் போரில் வெல்ல முடியாது; உண்மைதான். ஆனால் சூழ்ச்சியும் சதியும் சேர்ந்து எதிர்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? படையுடன் நீங்கள் தஞ்சையை நெருங்கும் போதே, பெற்ற தகப்பனுடன் மகன் யுத்தம் செய்ய வருவதாகக் கதை கட்டி விடுவார்கள்! அந்த அவமானத்தைத் தாங்காமல் சக்கரவர்த்தி உயிரை விட்டு விட்டார் என்றும் சொல்லி விடுவார்கள். அதை நம்புகிற ஜனங்களும் இருக்கக்கூடும் அல்லவா? அந்த நிலைமையில், நீதான் என்ன செய்வாய், குழந்தாய்! உன் மனமும் தளர்ச்சி அடைந்து விடும்! பெற்ற தகப்பனோடு யுத்தம் செய்ய வந்தவன் என்ற பழிச் சொல்லை உன்னால் தாங்க முடியுமா?"

ஆதித்த கரிகாலன் தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, "சிவ சிவா! கேட்கச் சகிக்கவில்லை!" என்றான்.

"அதனால்தான் முதலிலேயே நான் சொன்னேன் : பெரிய அபாயம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது என்று!"

"உபாயம் என்ன, தாத்தா! உபாயம் என்ன?"

"முதலில் இலங்கைக்கு நம்பிக்கையான ஆள் ஒருவனை அனுப்ப வேண்டும். அனுப்பி, அருள்மொழியை அழைத்து வரச் செய்ய வேண்டும். அவன் போர்க்களத்தை விட்டு, தன் கீழுள்ள போர் வீரர்களை விட்டு, இலேசில் வர மாட்டான். அவன் மனத்தைத் திருப்பி அழைத்து வரக்கூடிய ஆற்றல் உள்ளவன் ஒருவனை அனுப்ப வேண்டும்..."

பார்த்திபேந்திரன் முன் வந்து, "ஐயா! நீங்கள் சம்மதம் கொடுத்தால் நானே போய் அழைத்து வருகிறேன்!" என்றான்.

"அது கரிகாலன் இஷ்டம்; உன் இஷ்டம். ஆனால் போகிறவன் வந்தியத்தேவனைப் போல் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிடக் கூடாது...."



"பார்த்தீர்களா? நான் சொன்னேனே?" என்றான் பார்த்திபேந்திரன்.

''வந்தியத்தேவனைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, தாத்தா?'' என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"அவனைப் பற்றி முதலில் எனக்குச் சந்தேகமாகக் கூட இருந்தது. அவனும் நம் எதிரிகளுடன் சேர்ந்து விட்டானோ என்று. அப்புறம் அந்தச் சந்தேகம் தெளிந்தது."

"பார்த்தாயா, பார்த்திபேந்திரா!" என்றான் கரிகாலன்.

''அவர் முழுவதும் சொல்லட்டும். அதற்குள் அவசரப்படுகிறீர்களே? ஐயா! வந்தியத்தேவன் பேரில் தங்களுக்கு என்ன சந்தேகம் வந்தது?"

"சம்புவரையர் மாளிகையில் கூட்டம் நடந்த அன்று அவனும் அங்கிருந்தான் என்று அறிந்தேன். ஆனால் சதியில் அவனுக்குச் சம்பந்தமில்லையென்று பிறகு தெரிந்து கொண்டேன்."

"தாத்தா! இதெல்லாம் எப்படித் தங்களுக்குத் தெரிந்தது?"

''கடம்பூர் மாளிகை விருந்துக்கு எனக்கு அழைப்பு வரவில்லை. அதிலேயே கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. பிறகு, அங்கு வந்துவிட்டுத் திரும்பி ஊருக்குச் சென்ற குன்றத்தூர்க் கிழாரை வழியில் சிறைப்படுத்தி என் மலைக் கோட்டைச் சிறைக்குக் கொண்டு போனேன். அவரிடமிருந்து அங்கு நடந்தவைகளையெல்லாம் தெரிந்து கொண்டேன். வந்தியத்தேவன் சம்புவரையர்

மகன் கந்த மாறனின் சிநேகிதனாம்..."

"ஆமாம்; நம்முடைய சைன்யத்திலே இருவரும் இருந்தவர்கள் தானே? வட பெண்ணைக் கரையில் இருவரும் காவல் புரிந்தார்கள். அதிலிருந்து அவர்களுக்குச் சிநேகிதம் ஏற்பட்டிருந்தது எனக்குத் தெரியும்..."

"எப்படியோ, வந்தியத்தேவன் அன்றைக்கு அம்மாளிகையில் இருந்தான். அவன் சதியில் சம்பந்தப்பட்டானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. பிறகு அதற்கு ஒரு வழி கிடைத்தது. தஞ்சைக் கோட்டைக்குள் கந்தமாறனுடைய முதுகில் வந்தியத்தேவன் குத்திவிட்டுத் தம்பித்துச் சென்று விட்டான் என்று தெரிந்ததும்..."

"தாத்தா! இதை ஒரு நாளும் நான் நம்ப மாட்டேன். வந்தியத்தேவன் வேறு எது செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒருவனுடைய முதுகில் குத்தக் கூடியவன் அல்ல. அதிலும் சிநேகிதனுடைய முதுகில் குத்தக் கூடிய சண்டாளன் அல்ல..."

"அந்தச் சிநேகிதன் தன் எஜமானுக்கு விரோதமான சதியில் ஈடுபட்டவன் என்று தெரிய வந்தால்? இவனையும் அந்தச் சதியில் சேர்ப்பதற்கு அந்தச் சிநேகிதன் ஒருவேளை முயற்சி செய்திருந்தால்?..."

"எப்படியிருந்தாலும் முகத்துக்கு முகம் நின்று சண்டையிட்டிருப்பானே தவிர ஒரு நாளும் முதுகில் குத்தியிருக்க மாட்டான்!"

"உன் சிநேகிதனிடம் உன்னுடைய நம்பிக்கையை வியக்கிறேன், தம்பி! உண்மை எப்படியோ இருக்கட்டும். கந்தமாறனுடைய முதுகில் குத்தியதாக வந்தியத்தேவன் பேரில் பழுவேட்டரையர்கள் குற்றம் சுமத்தி அவனை வேட்டையாடி வருகிறார்கள். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஆகையால், வந்தியத்தேவனுக்கும் கந்த மாறனுக்கும் ஏதோ ஒரு விதத்தில் சண்டை வந்திருக்க வேண்டும். இதிலிருந்து அவன் உனக்கு எதிரான சதியில் சேர்ந்திருக்கவில்லை என்று நிச்சயமாகிறதல்லவா?"

"அதற்கு இவ்வளவு தூரம் சாட்சியம் வேண்டியதில்லை. வந்தியத்தேவன் நம் விரோதிகளுடன் சேர்வது என்றால், அப்போது இந்தப் பூமியே தலைகீழாகிவிடும். அலை கடல் வறண்டு விடும். வானம் இடிந்து விழும். சூரியன் இராத்திரியில் உதிப்பான். சோழர் குலம் சர்வ நாசத்தை அடையும்...." என்று ஆதித்த கரிகாலன் பரபரப்போடு கூறினான்.

"இளவரசர் சொல்லுவதை நானும் ஒத்துக் கொள்வேன். வந்தியத்தேவன் ஒருநாளும் நமக்குத் துரோகம் செய்து எதிரிகளுடன் சேர மாட்டான். அவனிடம் நான் சொல்லும் குற்றம் ஒன்றே ஒன்றுதான். அழகான பெண் முகத்தைக் கண்டால் வந்தியத்தேவன் தலை கிறுகிறுத்து விடுவான். அவனுடைய மதி மயங்கிவிடும்!"

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் புன்னகை புரிந்தான். "அது தெரிந்திருந்தபடியால்தான் சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு, இளையபிராட்டியிடம் போகும்படி அவனை அனுப்பினேன். இளவரசியை ஒரு தடவை அவன் பார்த்து விட்டால், அப்புறம் தப்புவது ஏன்? அவளுக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதானே?" என்றான்.

உடனே மலையமான் மிலாடுடையார், "ஓகோ! அப்படியா வந்தியத்தேவனுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறாய்? எனக்குத் தெரியாமல் போயிற்றே? தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய பிறகு வந்தியத்தேவனிடமிருந்து ஏதாவது செய்தி வந்ததா? அல்லது இளையபிராட்டியிடமிருந்தாவது செய்தி வந்ததா?" என்றார்.

"ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை ஒன்றும் செய்தி வரவில்லை..."

"அருள்மொழி இவ்விடம் வந்த பிறகு உன் சகோதரியையும் இங்கே தருவித்து விட வேண்டியதுதான். அப்புறம் நமக்கு ஒரு கவலையும் இல்லை. இளையபிராட்டியிடம் எல்லா யோசனையையும் விட்டுவிட்டு அவள் சொல்கிறபடி நாம் கேட்டு நடந்து வந்தால் போதும்!..."



"தாத்தா! இது விஷயத்தில் வந்தியத்தேவனைக் காட்டிலும் தாங்கள் மோசமாயிருக்கிறீர்களே?"

"ஆம், கரிகாலா! உன் சகோதரி இரண்டு வயதுக் குழந்தையாயிருந்த போதே கொடுங்கோலைக் கையில் பிடித்து விட்டாள். என்னையும் உன் பாட்டியையும் தாய் தகப்பனையும் தன் இஷ்டப்படி ஆட்டி வந்தாள். இப்போது என் வரையில் அப்படித்தான். அவள் வைத்ததே எனக்குச் சட்டம். கரிகாலா! உன் சகோதரியைப் பற்றிச் சொன்னால் உனக்கு அது குறைவு என்று நினைக்காதே! உனக்கு அது பெருமையே தவிர வேறில்லை. இளைய பிராட்டி குந்தவையைப் போன்ற அறிவுச் செல்வத்தைப் படைத்தவர் ஆண்களிலோ, பெண்களிலோ இது வரையில் பிறந்ததில்லை. நமது முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் எப்படிப்பட்டவர் என்பது உனக்குத் தெரியுமில்லையா? அவரே இளையபிராட்டியிடம் யோசனை கேட்பார் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்?" என்று மிலாடுடையார் ஒரே பரவசமாகப் பேசினார்.

வந்தியத்தேவனிடம் அசூயை கொண்ட பார்த்திபேந்திரன், "அதெல்லாம் சரிதான்; யார் இல்லை என்றார்கள்? ஆனால் ஒருவேளை வந்தியத்தேவன் இளைய பிராட்டியைப் பார்ப்பதற்கு முன்னால் வேறு ஒரு பெண் முகத்தைப் பார்த்து மயங்கியிருந்தால் என்ன செய்வது? உதாரணமாக, அந்தப் பழுவூர் இளையராணி என்கிற மோகினியைப் பார்த்திருந்தால்?..." என்றான். கடைசி வார்த்தைகளை அவன் சற்றுத் தாழ்ந்த குரலில் கூறியபடியால், கிழவரின் காதில் அது விழவில்லை. ஆனால் ஆதித்த கரிகாலனின் காதில் விழுந்தது. அவன் சட்டென்று திரும்பிக் கண்களில் கண்களில் தீப்பொறி பறக்கப் பார்த்திபேந்திரனைப் பார்த்தான். அந்தப் பார்வை பல்லவ வீரனைக் கதிகலங்கச் செய்து விட்டது.

மலையமான் பாறையிலிருந்து எழுந்து நின்று, "பார்த்திபேந்திரா! நீ நாளைக்கே இலங்கைக்குப் புறப்படுகிறாய் அல்லவா? வாலிபர்களாகிய உங்களுக்குப் பேசுவதற்கு எவ்வளவோ இருக்கும். நான்

கிழவன், மெள்ள மெள்ள அரண்மனைக்குப் போய்ச் சேர்கிறேன். நீங்கள் பேச வேண்டியதைப் பேசிவிட்டுச் சாவகாசமாக வந்து சேருங்கள்!" என்றார்.

அவர் சற்றுத் தூரம் சென்ற பிறகு பார்த்திபேந்திரன் ஆதித்த கரிகாலனைப் பார்த்து, "அரசே! என் தலைவா! தங்கள் மனத்தில் ஏதோ ஒரு சங்கடம் குடி கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு வேதனை தங்கள் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கிறது. அது பழுவூர் இளையராணி சம்பந்தமானது என்பதை நான் அறிவேன். பெரிய பழுவேட்டரையரின் கலியாணத்தைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் தங்கள் தோற்றமே மாறிவிடுகிறது. தங்கள் கண்கள் சிவந்து அனலைக் கக்குகின்றன. எத்தனை காலம் இந்த வேதனையைத் தங்கள் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு புழுங்கப் போகிறீர்கள்? என்னைத் தங்கள் 'உயிருக்கு உயிரான சிநேகிதன்' என்று ஆயிரந்தடவை கூறியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சிநேகிதனிடம் தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டக் கூடாதா? வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லக் கூடாதா? பரிகாரம் ஏதாவது கண்டு பிடித்துச் சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதா? தாங்கள் மனத்திற்குள்ளே வேதனைப்பட்டுப் புழுங்குவதைப் பார்த்துக் கொண்டு எத்தனை நாள்தான் நான் சும்மா இருக்க முடியும்?" என்று அடங்கா ஆர்வத்தோடு கூறினான்.

ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, "நண்பா! என் மன வேதனை என்றும் தீராத வேதனை. என் உயிரோடு மடிய வேண்டிய வேதனை. அதற்குப் பரிகாரமே கிடையாது. ஆயினும் உன்னிடம் சொல்லக் கூடாது என்பதில்லை. இன்றிரவு சொல்லுகிறேன். இப்போது கிழவருடன் அரண்மனைக்குப் போய்ச் சேர்வோம். அவரைத் தனியாக அனுப்புவது உசிதமில்லை!" என்று கூறிப் பாறையிலிருந்து எழுந்தான்.

(தொடரும்)

அதிசயம், ஆனால் உண்மை!

கல்கி கலெக்ஷன்

இந்த மாதத்தில் எங்கே பார்த்தாலும் "ஸீட் இல்லை!" என்ற கூக்குரலைக் கேட்கிறோம். லயோலா காலேஜில் ஸீட் இல்லை; விவேகானந்தா காலேஜில் ஸீட் இல்லை; ஆர்ட்ஸ் காலேஜில் இடம் இல்லை; விவசாய காலேஜில் இடம் இல்லை; ஆயுர்வேத காலேஜில் இடம் இல்லை; செத்த காலேஜில் இடம் இடமில்லை; உயிர்க் காலேஜில் இடமில்லை; என்ஜினியரிங் காலேஜிலும் கால்நடைக் காலேஜிலும் ஸீட் இல்லவே இல்லை! இப்படியெல்லாம் 'ஸீட்'டுக்குக் கஷ்டமாயிருக்கிறதே. மழுங்கத் தலையை மொட்டை அடித்துக் கொண்டு எல்லா காலேஜுகளுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விட்டு வரலாம் என்று புறப்பட்டால், மோட்டாரில் இடம் இல்லை; டிராமில் இடம் இல்லை; - இவ்வளவு நெருக்கடியைத் தாண்டி க்ஷவர ஸலூனுக்குள் புகுந்து பார்த்தால், அங்கேயும் 'ஸீட்' காலி இல்லை!!!


இவ்வளவு நெருக்கடியான 'ஸீட் இல்லை' பிரச்னைகள் எல்லாவற்றையும் ஒரே அடியாகத் தீர்த்து வைக்கக்கூடியவர் ஒருவர் இருக்கிறார்! அவர்தான் கோயமுத்தூரைச் சேர்ந்த அற்புத மாயாஜால மனிதர் ஸ்ரீ ஜி.டி. நாயுடு அவர்கள். "காலேஜில் ஸீட் இல்லை" என்று கஷ்டப்படுகிற வாலிபர்கள் எல்லாரும் தயவு செய்து கோயமுத்தூருக்கு யாத்திரை சென்று ஸ்ரீ ஜி.டி. நாயுடுவைப் பார்த்து விட்டு வரும்படி சிபாரிசு செய்கிறோம். அப்படிப் பிரயாணச் செலவு செய்து கொண்டு போய்ப் பார்க்க முடியாத வாலிபர்கள் அவர் எழுதியுள்ள "நான் கண்ட உலகம்" என்ற நூலையாவது

வாங்கிப் பார்க்கும்படி யோசனை சொல்கிறோம்.

ஸ்ரீ ஜி.டி. நாயுடுகாருவிடம் ஒரு வாலிபன் சென்று, "காலேஜில் எனக்கு இடம் கிடைக்கவில்லை" என்று சொன்னால், நாயுடுகாரு சிரிப்பார்; அல்லது கண்ணீர் விடுவார்; அல்லது திட்டவும் செய்வார். "அப்பனே! என்னைப் பார்! நான் எந்தக் காலேஜில் படித்தேன்?" என்று கேட்பார்.

திருவாளர் ஜி.டி. நாயுடு என்ஜினியரிங் காலேஜுக்கு மனுப் போட்டதில்லை; காலேஜ் நிழலில் ஒதுங்கியதில்லை; உயர்தரப் பள்ளியில் கூட அவர் படித்ததில்லை.

ஆனால் நாலு தடவை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார்; அமெரிக்காவில் அமெரிக்கர்கள் அடங்கிய சபைகளில் ஆங்கிலத்தில் பிரசங்கமாரி பொழிந்திருக்கிறார்; பெரிய பெரிய வாழ்க்கைத் தத்துவங்களைப் பற்றியும் ஆத்மீக விஷயங்களைப் பற்றியும் பேசியிருக்கிறார்; ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசித்த விஞ்ஞானிகள் - தொழில் நிபுணர்களுடன் சம்பாஷித்திருக்கிறார்.



• ஜி. டி. நாயுடு

ஐரோப்பாவில் மின்சார மோட்டார் என்ஜின்கள் பெருவாரியாக உற்பத்தியாகும் ஆல்பர்ட் ஹர்த் பாக்டரி தொழிற்சாலை ஒன்றுக்குத் திரு ஜி.டி. நாயுடு போயிருந்தார். அந்த இயந்திரங்களில் தாமே வேலை செய்து பார்த்தார். புதுவிதமான 'லேத்' இயந்திரம் ஒன்று அங்கே தயாரிக்கப்பட்டு வந்தது. அதை ஸ்ரீ நாயுடு ஓட்டிப் பார்த்தபோது, அதில் ஒரு குறை தெரிந்தது. குறையை அத் தொழிற்சாலை என்ஜினியர்களுக்கு எடுத்துக்காட்டினார். அத் தொழிற்சாலையின் டைரக்டர்கள் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்து உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி கூறினார்கள். நாயுடுகாரு அத் தொழிற்சாலையிலிருந்து புறப்படும் முன்பே குறையை நிவர்த்தி செய்தும் காட்டினார்கள்!

ஆம்; நாயுடுகாரு இளமையில் என்ஜினியரிங் காலசாலையில் படித்ததில்லைதான். ஆனால் அவருடைய நாற்பத்தேழாம் வயதில் (1940-ம் ஆண்டில்) அமெரிக்காவிலுள்ள செயின்ட் லூயி நகரத்தில் ஒரு தொழிற் பயிற்சிப் பாடசாலையில் சில மாத காலம் படித்தார். வாரம் ஒன்றுக்கு 16 டாலர் உதவிச் சம்பளம் பெற்றுக் கொண்டு படித்தார்!

நாயுடுவின் வாழ்க்கையில் அவர் பள்ளிக்கூடத்தில் படித்ததெல்லாம் இவ்வளவுதான். ஆனாலும் இன்றைக்கு உலகத்தில் தலைசிறந்த இயந்திர நிபுணர்களுக்கு அவர் யோசனை சொல்லக்கூடியவராயிருக்கிறார்!

என்ஜினியரிங் கலாசாலைகளில் ஐந்து வருஷம் படித்துத் தெரிந்து கொள்ளக்

அமரர் கல்கி

கூடிய விஷயங்களை "அநுபவ பூர்வமாக ஆறு மாதத்தில் சொல்லிக் கொடுக்கிறேன்!" என்கிறார்.

விவசாயக் கலாசாலை எதிலும் ஸ்ரீ ஜி.டி. நாயுடு படித்ததில்லை. ஆனால் விவசாயத் துறையில் அவர் சில அற்புத மாயா ஜால வித்தைகள் புரிந்திருக்கிறார்.

அவருடைய தோட்டத்தில் வளரும் ஆரஞ்சுச் செடியிலிருந்து ஒரு ஆரஞ்சுப் பழத்தைப் பறித்து அப்படியே சாறு பிழிந்து சாப்பிட்டால் கசக்கும்; அந்தச் சாற்றில் இருபது பங்கு தண்ணீர் கலந்து அருந்தினால் அது இனிக்கும்! அதாவது ஒரு பழத்தில் இருபது பழங்களின் சத்து உண்டாகும்படியான அற்புதத்தை அவர் செய்திருக்கிறார்.

அவருடைய தோட்டத்தில் ஒரு பருத்தி விதையிலிருந்து உண்டாகும் பருத்திச் செடி 10 அடி உயரம் வளருகிறது; அதில் இருபத்தி நாலு ராத்தல் பருத்தி விளைகிறது!

அவர் பயிரிடும் சோளச் செடி பதினெட்டரை அடி உயரம் வளர்ந்து 35 கதிர்கள் ஈனுகிறது. அவர் பயிராக்கும் பப்பாளி மரத்தில் பழுக்கும் ராட்சதப் பழங்கள் "உணவு மந்திரி கனம் முன்ஷியையும் விவசாய மந்திரி கனம் ஷெட்டியையும் இங்கே வரச் சொல்லுங்கள்! அவர்களை ஒரே விழுங்காய் விழுங்கி ஏப்பம் விடுகிறேன்!" என்று அறைகூவுகின்றன!

க்ஷவர ஸலூன்களில் இடமில்லை என்று புகார் செய்கிறவர்களுக்கு, ஸ்ரீ ஜி.டி. நாயுடு மின்சக்தியினால் இயங்கும் இயந்திர க்ஷவரக் கத்தி ஒன்று தயாரித்து வைத்திருக்கிறார். மேனாட்டுத் தொழில் நிபுணர்கள் அதைப் பார்த்து அதிசயித்தார்கள். "எங்களுக்கு இதைச் செய்யும் உரிமை கொடுங்கள்; நீங்களே மேற்பார்வை செய்யுங்கள்; வேண்டுமென்கிற பணம் தருகிறோம்!" என்றார்கள்.

ஸ்ரீ ஜி.டி. நாயுடு மறுத்து விட்டார். இந்தியாவிலேயே அதை உற்பத்தி செய்து அயல்நாடுகளுக்கும் அனுப்ப ஆசைப்பட்டார்.

அந்த ஆசை இன்னும் நிறைவேறவில்லை. அது போல் இன்னும் பல துறைகளில் திரு நாயுடுவின் தீக்ஷண்யமான அறிவில் தோன்றிய புதுமைகள் செயலில் வரவில்லை.

தேசத்தில் போதிய வசதிகள் இல்லை; சர்க்கார் ஆதரவும் இல்லை; எல்லாவற்றுக்கும் மேலாக, நாயுடுகாருவுக்கும் வருமான வரி இலாகாவுக்கும் 'லடாய்' ஏற்பட்டு, நாயுடு மனங்கசந்து போகும்படி செய்து விட்டது!

ஒருநாள் அவருடைய மனக்கசப்பு நீங்குமென்று எதிர்பார்ப்போமாக. காலமாகிய தண்ணீர் அந்தக் கசப்புடன் கலந்து அதுவே இனிப்பாகுமென்று நம்புவோமாக.

ஸ்ரீ நாயுடுவின் பலவிதத் தொழில் திட்டங்களும், தொழிற்கல்வித் திட்டங்களும் காரியத்தில் நிறைவேறும் காலம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதற்கிடையில் "நான் கண்ட உலகம்" என்ற நூலைத் தமிழாக்கி வெளியிட்ட ஸ்ரீ திரிலோக சீதாராம் தமிழ்நாட்டு வாலிபர்களுக்கு ஒப்பற்ற சேவையைப் புரிந்திருக்கிறார். ஸ்ரீ ஜி.டி. நாயுடு என்னும் விந்தை மனிதரைப் பற்றி நாம் பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தவையெல்லாம் இந்நூலின் மூலம் உறுதிப்படுகின்றன. நூற்றிருபத்தெட்டு பக்கமுள்ள இந்த நூலுக்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்து வாங்கலாம். தங்கத்தை விட விலை உயர்ந்த பிளாடினம், யுரேனியம், தோரியம் முதலிய உலோகங்களை எடைக்கு எடை கொடுத்தும் வாங்கலாம். அல்லது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் ரூ 1-10-0 கொடுத்தும் வாங்கிப் படிக்கலாம்.

நமது வாலிபர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட நம் சென்னை மாகாண சர்க்கார் இந்தப் புத்தகத்தில் பதினாயிரம் பிரதிகள் வாங்கி, பதினாயிரம் புத்தகசாலைகளைத் தமிழ்நாடெங்கும் ஏற்படுத்தி, புத்தக சாலைக்கு ஒரு புத்தகம் வீதம் விநியோகித்தால் அளவற்ற பயனை அடையலாம். ●

(கல்கி, ஜூலை 8, 1951)

1000 நாவல்!

தமது 1000வது நாவலை (டைனமைட் – 98) எழுதிக் கொண்டிருக்கிறார் ராஜேஷ்குமார். தமிழ் எழுத்துலகில் இது ஒரு சாதனை. மேலும் வாசகர் பேரவை கொண்ட ஒரே எழுத்தாளரும் ராஜேஷ்குமார்தான். கமர்ஷியலாகத் தடம் பதித்து விட்ட இந்த பேனா மன்னருக்கு இலக்கியமாக ஏதும் செய்ய ஆசை இல்லையா? கோவையில் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினோம்.

கல்கி : 1000 நாவல்கள் எழுதி விட்டீர்கள். இலக்கியத் தரமாக ஒரு நாவல் எழுதும் எண்ணம் வரவில்லையா...?



ராஜேஷ்குமார் : நான் நாவல் எழுத ஆரம்பித்தபோதே என் துறையை 'க்ரைம்' என வைத்துக் கொண்டேன். அப்போது க்ரைம் கதைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்த காலகட்டம். தமிழ்வாணனுக்குப் பிறகு மர்மக் கதை எழுதப் பொருத்தமான ஆள் என அமரர் எஸ்.ஏ.பி. அப்போது செய்த ஏற்பாடு. க்ரைம் நன்றாக வருகிறது என 'கல்கண்டில்' தமிழ்வாணன் செய்ததை என்னை நம்பி, பெரிய பத்திரிகை ஆசிரியரே ஒப்படைத்த சப்ஜெக்ட் க்ரைம். அப்படி நான் க்ரைமுக்கு தள்ளப்பட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். அப்போதே நான் இலக்கியத்திலிருந்தும் பிரிக்கப்பட்டேன்.

கல்கி : வாழ்க்கையில் ஒரு இலட்சியப் பிடிப்பு வேணும்... உங்க கதைகளில் கூட – கடைசியில் ஒரு இலட்சிய நோக்கோடு பாத்திரங்களை நகர்த்தியிருப்பீர்கள்... அது மாதிரி எழுத்தில் உங்களுக்கென்று ஒரு இலட்சியம் இல்லையா...?

ராஜேஷ்குமார் : என்னுடைய கதைகளில் வெறும் வெட்டு, குத்துதான் வரும்னு நினைப்பது தப்பு. என் கதையில் கடைசியா ஒரு மாரல் வரும். தப்பு பண்ணினவனுக்குக் கண்டிப்பா தண்டனை இருக்கும். சட்டமும் கோர்ட்டும் அவனைத் தப்பிக்க விட்டு விட்டாலும் குற்றவாளி இயற்கையாய் தண்டிக்கப்பட்டே திருவான். இலட்சியப் பிடிப்புங்கறது என்னைப் பொறுத்தவரை ஒரு வாசகன் என் கதையைப் படித்து, திருந்தினாலே போதும் என்பதுதான். இன்றைக்கு சாயங்கலாம் கூட ஒரு வாசகர் வந்து, 'சார் நீங்க உங்க அம்மா அப்பா மீது நல்ல பாசம் வச்சிருப்பீங்க போலயிருக்கு. அதுதான் உங்க கதையில பிரதிபலிக்குது... உங்க கதைகளைப் படிச்ச பின்னாடி நான் அப்பா – அம்மா மேல் கூடுதல் பாசம் காட்டறேன்'னு சொன்னார். அதுமாதிரி நிறையப் பேர் வெவ்வேறு கதைகளால், வெவ்வேறு கோணங்களில் திருந்தினதா சொல்லும்போது மனசுக்கு எவ்வளவு நிறைவு தெரியுமா.... அதுவே என் இலட்சியப் பிடிப்பா இருக்கு.

கல்கி : 'கிரைம்' எழுத்து மட்டுமே திருப்தி தந்து விடுகிறதா உங்களுக்கு...?

ராஜேஷ்குமார் : நம்ம தமிழ்நாட்டுல மட்டும்தான் க்ரைம் எழுதுகிறவர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகுகிறார்கள்.... பேசுகின்றார்கள்... கேரளாவில் எடுத்துக் கொண்டீர்களென்றால் கோட்டயம் புஷ்பநாத் எழுதறார். நல்ல பெயர் இருக்கு. ஆந்திராவில் பார்த்தீங்கன்னா எண்டமூரி வீரேந்திரநாத். அவருக்கும் 'நேம்' இருக்கு. ஆனா தமிழ்நாட்டுல இருக்கிற 'ரைட்டர்ஸ்' மட்டும் பார்த்தீங்கன்னா இலக்கியம்ங்கற கிழிசல் போர்வையைப் போர்த்திட்டு, 'க்மர்ஷியலா சக்ஸஸ்ஃபுல்லா' இருக்கிறவங்களைப் பார்த்து 'கமெண்ட்' பண்றது ஒரு பழக்கமாப் போச்சு. ஒரு துறையில்

ஒருவன் வெற்றிகரமா வர்றான்னா சாதாரணமா வந்திருக்க முடியாது. என்னவோ 'க்ரைம்' எழுதினதாலே இவர் வளர்ந்துட்டாருன்னு சிப் பப்ளிசிட்டி – பாப்புலாரிட்டி தேடிட்டதா நினைக்கிறாங்க. என் வாசகர்களை நீங்க பார்த்தீங்கன்னா ஆச்சர்யப்படுவீங்க. என்ஜீனியர், பி.எச்.டி. வாங்கினவங்க, லா காலேஜ் பிரின்சிபல் கூட இங்கு வந்து பாராட்டி, பேசிட்டுப் போறாங்க. தினம் குறைஞ்சது அம்பது கடிதம் வருது. கல்லூரிப் பேராசிரியர்கள் என் கதைகள் பற்றி வகுப்புகளில் பேசுவதாகக் கூடச் சொல்லி சந்தோஷப்படுகிறார்கள் என்றால் இதில் ஏதோ விஷயம் இல்லாமல் இருக்க முடியுமா...?

கல்கி : உங்களுடைய கதைகளை (குறிப்பாக பாக்கெட் நாவல்கள்) ரயில் பயணிகள் படித்துவிட்டுப் பாதையிலேயே விசியெறிந்து விடுவதைக் கவனித்திருக்கிறீர்களா...?

ராஜேஷ்குமார் : என்னைப் பொறுத்தவரை அவர்களை அந்த நேரத்திலும் படிக்க வைத்தேனா இல்லையா என்பதுதான் கேள்வி. நான் எந்த இடத்திலும் என் நாவல்களை இலக்கியம் என்று சொன்னது கிடையாதே... என்னுடையது 'டைம்பாஸ்' நாவல்தான். தண்ணி தாகத்துக்கு ஒரு சர்பத் சாப்பிடுறோம். அலைந்து திரிந்து வெயிலில் வருகிற மனிதனுக்கு அந்த நேரத்திற்கு உலகத்திலேயே உயர்வான பொருள் அதை விடப் பெரிசா என்ன இருந்திட முடியும்...? அதுமாதிரி வச்சுக்கலாம் இதை.

கல்கி : ஒரே மாதிரியான உத்தி... கதைக் கோர்வை... அரைத்த மாவையே அரைப்பது...

ராஜேஷ்குமார் : என்னுடைய நாவல்கள் ஒரே மாதிரியானவை என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஆயிரம் நாவல்களில் ஒன்று கூட ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இல்லவே இல்லை. இப்போதும் கூட நாலு சீரியல் வந்துட்டிருக்கு. நாலும் நாலு பாதையில போயிட்டிருக்கு. அதற்காகவே நான் நிறைய படிக்கிறேன். இப்பவெல்லாம் நம் வாசகர்களுக்குக் கொலை, கொள்ளையெல்லாம் பிடிக்கறதேயில்லை. அவர்களுக்கு இப்ப Scientific-காக வேணும். அதுக்காக நிறையப் படிக்க வேண்டியதா இருக்கு. புதுசா ஏதாவது பண்ணியாகணுமே... அந்த தாகம்தான் எனக்குள்ளே இருக்கு.

கல்கி : ரியலிசம், சர்ரியலிசம், மேஜிக்கல் ரியலிசம், நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்றெல்லாம் எழுத்துலகில் பேசுவது பற்றி?

ராஜேஷ்குமார் : நீங்க சொல்றது எனக்கு எதுவுமே புரியலை.

கல்கி : இங்கே ரசிகர் மன்றம் உள்ள ஒரே எழுத்தாளர் நீங்கள்தான்! ராஜேஷ்குமார் இலக்கியப் பேரவை (சுமார் ஆயிரத்திற்கும் மேல்) என்று ஒன்றை நீங்கள் உருவாக்கி, உங்களை நீங்களே வெளிச்சம் போட்டுக் கொண்டு வருகிறீர்கள் என பரவலாய்ப் பேச்சு...?

ராஜேஷ்குமார் : தெய்வாதீனமாய் அந்த வாசகர் பேரவையைச் சேர்ந்தவர்கள் சிலரே இந்தச் சமயத்தில் வந்திருக்கிறார்கள். ஏதும் சந்தேகமென்றால் அவர்களிடமே கேளுங்கள் (அவர்கள் தரப்பில் கேள்விக்கு பலமான மறுப்பு). நான் ஆரம்பம் முதலே அவர்களை அவரவர் வேலையை கவனியுங்கள் என்றே அறிவுறுத்தினேன். வாசகர் பேரவை வேண்டாம் என்று சொன்னதை ஏற்றுக் கொள்ளாமலே அதைச் செய்து விட்டனர். இப்போதும் கூட ஏதும் 'பாராட்டு விழா' என்று அவர்கள் வரும்போதெல்லாம் என்னிடமிருந்து வரும் ஒரே வார்த்தை 'வேண்டாம்' என்பதுதான்.

இலக்கியம்ங்கற கிழிசல் போர்வையைப் போர்த்திட்டு, 'கமர்ஷியலா சக்ஸஸ் ஃபுல்லா' இருக்கிறவங்களைப் பார்த்து 'கமெண்ட்' பண்றது ஒரு பழக்கமாப் போச்சு.

கல்கி : உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர், பிடித்த கதை...?

ராஜேஷ்குமார் : தி. ஜானகிராமனை நிறைய வாசித்திருக்கிறேன். அவற்றில் அம்மா வந்தாள் மீது தனி மோகம். இப்போதுள்ள எழுத்தாளர்களில்... ஒரு பெரியவர்... அ... அதான் கி. ராஜநாராயணன். அவரின் கரிசல் மண் வாசனையோடு கமழும் எழுத்து ரொம்பப் பிடித்தமான ஒன்று.

கல்கி : அடேயப்பா.. உங்கள் கதைகளில் எங்காவது உங்க ஊர் மண்வாசனையைப் பதித்திருக்கிறீர்களா...?

ராஜேஷ்குமார் : எங்கே மண் வாசனையைப் பதிக்கிறது? அங்கே வெறும் ரத்த வாசனைதானே அடிக்கிறது...? (பலத்த சிரிப்பு)

கல்கி : உங்கள் எழுத்துக்கு இன்ஸ்பிரேஷன் யார்?

ராஜேஷ்குமார் : கண்டிப்பாக எனக்கு நானேதான்...!

பேட்டி : **கா.சு. வேலாயுதன்**

இதுபோல் நம்
ஒவ்வொருவருக்கும் ஒரு
லட்சியம் இருக்கும்...
இருக்கவேண்டும்.

வக்கீலாக... டாக்டராக...
வங்கி அதிகாரியாக...
இப்படி எத்தனையோ
கனவுகள்... குறிக்கோள்கள்.

இளம் வயதில்
நம் உழைப்புதான் வெற்றிக்கு
அடிப்படை. மாறாக,
சபலத்திற்கு இடம்
கொடுத்தால்...
வாழ்நாளெல்லாம்
அவலம்தான் மிஞ்சும்.

**சாதனை படைக்க வேண்டிய
வயதில் சபலம் எதற்கு ?**

**நான்
இஞ்சினியர்
ஆகணும்
அதுவே என்
குறிக்கோள்**



தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம்
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
போன் : 8255467, 8255261, 8254917
ஹாட் லைன் : 8256882, 8256864.

அப்பாவை போலீஸ் நேராக முத்துப் பிள்ளையின் வீட்டிற்குத்தான் கூப்பிட்டுப் போனது. சொல்லும்போது ஸ்டேஷனுக்குப் போகலாம் என்றுதான் சொன்னது. ஆனால் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. வெயில் முகத்தில் அறைந்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டே நடந்தார். இன்றைய காலைப் பொழுது இப்படி விடிந்திருக்கிறது! திமுதிமு வென்று கூட்டம் திரண்டு விட்டது. முத்துப் பிள்ளை வீட்டுத் திண்ணை நிறைந்து விட்டது. நடை



12

வாசலிலும் கூட்டம். முத்துப் பிள்ளை பளபளவென்று மடிப் புக் கலையாத சட்டையும் வேஷ்டியுமாய் உட்கார்ந்து இருந்தார். வேஷ்டியும் சட்டை யும்தான் மடிப்புக் கலையாமல் இருந்தது. அவர் மனசு? குற்றம் பண்ணுவது எளிது. தப்பித்துக்கூட விடலாம். ஆனால் அது தரு கின்ற சங்கடம் எளிதல்ல; கொசுவாய் மொய்க்கும். தூங்க விடாது. துரத்தும். உள்ளே சிறுபிள்ளை மாதிரி விளையாட்டில் உட்கார்ந்து விடும். முத்துப்பிள்ளையின் மன சில் அந்த விளையாட்டுத் துவங்கி விட் டது!

''என்ன சங்கதி? ஒரே கூட்டமா வந்திருக்கீங்க?''

"ஐயா, வயல்லெ கஞ்சா கட்டு இருந்தது!"

"கஞ்சாவா?"

"ஆமாம். போலீசுக்குத் தகவல் வந்தது" என்றார் ஒரு போலீஸ்.

"வேலுப்பிள்ளை அப்படிப்பட்ட ஆளில் லையே..."

"எங்களுக்குப் புகார் வந்தது. வந்து பார்த் தோம். ஒரு கட்டு கஞ்சா செடியும் இருந்தது. இதோ அதையும் கொண்டாந்திருக் கோம்."

''என்ன இதெல்லாம்?'' முத்துப் பிள்ளை அப்பா



செவ்வந்தி

வைக் குறும்பாகப் பார்த்தார்.

"நான் என்ன சொல்ல? நான் அப்படிப் பட்டவன் இல்லை. உங்களுக்கும் அது தெரியும். இனி நான் என்னை எப்படி நிரூபிக்கட்டும்?"

"கேஸ், புக் பண்ணிடுறோம். கோர்ட்டுலெ நிரூபிங்க!"

அப்பாவின் கண் கலங்கியது.

அப்பா இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். இப்படி அவர் மீது சந்தேகம் கொள்வதே பாவம். இது அந்த ஊருக்கே தெரியும். முத்துப்பிள்ளைக்கும் தெரியும். இதை அவர் முகமே சொல்லிற்று. அந்த முகத்தை மறைக்க அவர் படும் சிரமங்கள் தெளிவாயிற்று. ஆனால் ஊருக்குத்தான் இந்த கண்ணாமூச்சு புரியவில்லை. திடீர் என்று போலீஸ் ஏன் வேலுப்பிள்ளை வயலுக்கு வர வேண்டும். இப்படி ஒரு கஞ்சாக் குலை ஏன் திடுதிடுப்பென்று வந்து நிற்க வேண்டும்? ஒன்றும் விளங்கவில்லை.

"ஊர் பெரியவர் நீங்கள். இனி நீங்கதான் சொல்லணும்!" என்று போலீஸ் முத்துப்பிள்ளையைப் பார்த்தது.

அவர் அந்தக் கூட்டத்தைப் பார்த்தார்.

"நான் சொல்ல என்ன இருக்கு!"

"அப்படி ஒதுங்கிட்டாலும் சரி. நாங்க பார்த்துக்கிறோம்."

"நான் ஒதுங்கலை..."

"பின்னே?"

"யோசனையா இருக்கு!"

முத்துப்பிள்ளை அப்பாவைப் பார்த்தார். அவரால் அவரை நேராகப் பார்க்க முடியவில்லை. அவர் முகத்தில் குறும்பு! வன்மம் அரும்புகின்றபோது அது வெறும் குறும்பாகத்தான் வெளிப்படும்.

"அப்ப வேலுப்பிள்ளையை ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டுப் போறோம்."

"முடிவு பண்ணியாச்சா?"

"கையும் களவுமா இருக்கே?"

பாரதிபாலன்

"வாய் திறந்து பேசுங்களேன். என்ன நடந்ததுன்னு சொல்லப் படாதா. தவறிப் போயிடுறது சகஜம்தான். அதை வாய் திறந்து சொல்லலாமில்லை..." என்றார் முத்துப்பிள்ளை.

அப்பா வாய் திறக்கவில்லை.

"அப்ப கிளம்பறோம்."

எப்படியோ இந்தச் செய்தி காயாம்பை எட்டிவிட்டது!

காயாம்பு மூச்சு இறைக்க இறைக்க ஓடி வந்தான். கூட்டத்தைப் பிளந்து கொண்டு வந்தான். இதுவரை முத்துப்பிள்ளை வீட்டுத் திண்ணையைத் தாண்டினதில்லை. அது தான் அவன் எல்லை. திண்ணையோடு நிற்பதுதான் மரியாதை. அவர் பெரிய மனிதர். பெரிய மனிதருக்குச் செய்யும் மரியாதை எல்லை அது. இன்று அவன் அப்படி நிற்க



• படம்: **யோகா**

வில்லை. அதற்கு அவசியமில்லை என்ற எண்ணம். கூட்டத்தை ஒரு பார்வை பார்த்தான்.

"சாமிகளா, இது என் வேலைதான். இதோ இந்த சாமி சொல்லித்தான் அந்தக் கஞ்சாக் கட்டை ஐயா அவுக வயல்லெ போட்டேன்..." என்று முத்துப்பிள்ளையைக் கை காட்டினான். மூச்சு விடாமல் அப்படியே சகலத்தையும் அப்படியே கொட்டி விட்டான் காயாம்பு. ஏழோ, எட்டோ வார்த்தைகள்தான். அதற்குக்கூட அவன் சிரமப்படவில்லை. பீடிக்குப் பற்ற வைப்

பதுபோலத்தான் ஒரே மூச்சில் விருட்டென்று உரசிப் பொறி உண்டாக்கினான். அது தெருவில் சிதறிற்று. ஒரே ஒரு கணம்தான். ஊரே பற்றிக் கொண்டது.

"என்னடா சொல்றே?" என்று முத்துப்பிள்ளை நாற்காலி அலற, உதறி எழுந்தார். காயாம்பு தன் முதுகுக்குப் பின்பு நின்ற சாட்சிகளின் உருவத்தைக் காட்டினான். ஒருவன் மாரப்பன். அவன்தான் கஞ்சா குலையை வாங்கி வந்தவன். மற்றொருவன் மல்லன். அதைப் பதுக்கி வைத்திருந்தவன்.

முத்துப்பிள்ளை வாயடைத்துப் போனார்.

இன்னும் ஒரு நிமிடம் காயாம்பு பேசியிருந்தால் முத்துப்பிள்ளை அசிங்கத்தில் விழுந்திருப்பார். அவமானத்தில் துடித்திருப்பார். காயாம்பு பேசவில்லை. அப்பா தடுத்து விட்டார். ஒரே ஒரு பார்வை. காயாம்பைப் பார்த்தார். 'எல்லாம் புரிந்து விட்டது காயாம்பு. இனி நீ ஒன்றும் பேச வேண்டாம்' என்று ஜாடை காட்டுகின்ற பார்வை.

அவனும் அந்தப் பார்வையைப் புரிந்து கொண்டாற்போல் அமைதியாகி விட்டான். இதை முத்துப்பிள்ளையும் கவனித்தார். குன்றிப் போனார்.

கதவு தட்டுகிற ஓசை!

செவ்வந்தி திடுக்கிட்டு விழித்தாள். சக்திவேல் நின்றிருந்தான்.

"என்ன யோசனை?"

"வண்ணத்துப் பூச்சி என் கைக்கு வந்திடுச்சு. மனசுலேதேன் படபடப்பு. மனசு துள்ளுது. எட்டாததை எட்டிப் பிடிச்சு கட்டாப்புலெ இருக்கு. கடவுளே! நான் இதை அலுங்க விட்டுடப் படாது."

"இன்னும் கனவா?"

"அதென்ன 'இன்னும்'?"

அவள் முறுவலித்தாள்.

"சொல்லேன்."

"உங்க நினைப்பு!"

அவன் ஒரு புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டான். அவன் மனசிலும் அது துள்ளிக் கொண்டுதான் திரிகிறது!

"அப்பா மட்டும் இல்லாட்டா?" செவ்வந்தி கண்கள் படபடத்தன.

"நம் சந்தோஷம் தகர்ந்து போகும். கால் பாவாத கனவாகத்தான் முறிந்திருப்போம்."

செவ்வந்தி வாய்க்காலைப் பார்த்துக் கை குவித்தாள்.

"நம்ம கனவுக்கு ரத்தமும் உடலும் கொடுத்து உசிப்பி உயிர் உண்டாக்கினவர் அவர்தான். அதுக்கு அவர் பட்ட சிரமம்..."

"அதுக்கெல்லாம் நாம எப்படிங்க நன்றி– என்ன செய்யப் போறோமோ தெரியலை..." அவள் சேலைத் தலைப்பில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"உங்கிட்ட ஒண்ணு கேக்கட்டுமா? உங்க அப்பாவுக்கும் இது தெரியாது போயிருந்தால்?"

"எல்லாம் மனசோடதான்."

"மனசோட மட்டும் இருந்தா போதுமா?"

"ஒண்ணு தெரிஞ்சுக்க. காதல்ங்கிறது சந்தோஷமா இருப்பதுதான். எதையும் கட்டிப் போட நினைப்பது காதலாக முடியாது. உறவின் நோக்கமே அன்புதான். அடைய வேண்டும் என்கிற எண்ணம் எப்படி அன்பாக முடியும்? அன்புக்கு அடையாளமே வெறும் அன்பாக மட்டும் இருப்பதுதான்."

"ஒண்ணு சேர்ந்துட்டா அது அன்பு இல்லாம போயிடுமா?"



"அர்த்தம் அப்படி இல்லை செவ்வந்தி!"

"எனக்குப் புரியலை."

"நேசிப்பதுலெ பல வகை உண்டு. ஒவ்வொண்ணுக்கும் ஒரு குணம். உன்னை நான் நேசிச்சது எனக்குத்தான் புரியும். அது வேற. அதை எதோடும் சேர்க்க முடியாது. அப்படியே உணர்ச்சியாகத்தான் மிதந்தது. அதனாலதான் உன்னைக் கவர்ந்து கொண்டு போய் எங்கும் பூட்டத் தோணலை."

"எனக்கு இதுவும்கூட புரியலை. ஆனா நீங்க உசத்தினு தெரியுது."

"செவ்வந்தி."

"சாவுர முட்டும் எனக்கு எதுவும் குலைஞ்சிடப் படாது!"

"ஏய்! இப்ப எதுக்கு அழுவுறே?"

செவ்வந்தி அப்படியே உட்கார்ந்து விட்டாள். பக்கத்தில் அவன் இருக்கின்றான் என்ற நினைப்பே அவளுக்கு நிம்மதியாக இருந்தது. நெஞ்சை வருடுகின்ற நிம்மதி,

அந்த நிம்மதியிலே அவள் மனம் சருகாகி, காற்றில் கலந்து சுழன்றது.

வாசலில் ஓர் உருவம். அது முத்துப் பிள்ளை. ஆறடி ஓர் அங்குலத்தில் அசைந்து அசைந்து வந்தார். அப்பா 'வரணும்... வரணும்' என்று வாசலுக்கு ஓடினார். மாடியில் இருந்து சக்திவேல் ஓடி வந்தான். அடுக்களையில் இருந்த அம்மாவும் ஆச்சரிய அரிப்புத் தாங்காது வாசலுக்கு வந்தாள். அம்மாவை ஒட்டிக் கொண்டு செவ்வந்தி.

முத்துப்பிள்ளை தலை கவிழ்ந்து இருந்தது.

"உள்ளே வாங்கண்ணா!"

"நேரே பார்க்கத் தெம்பு இல்லைம்மா."

"இதென்ன பேச்சு? உள்ளே வாங்க..."

முத்துப்பிள்ளை திண்ணையோரம் செருப்பை உதறினார்.

''செருப்பெல்லாம் காலுக்குத்தான் பண்ணிருக்கான். முள்ளு மனசுலெ குத்தினா?"

"உட்காருங்க..."

முத்துப்பிள்ளை திரும்பி வாசலைப் பார்த்தார்.

"யாரும் வர்றாங்களா?"

"எல்லாம் தூரமாத் துரத்தியடிச்சுட்டுத்தான் வர்றேன்."

அப்பாவுக்கு அது புரியவில்லை. விழித்தார்.

"நான் மனுஷங்களைச் சொல்லலை. என் மனசுலே தேங்கிக் கிடந்ததைச் சொன்னேன்."

"நீங்க எதையோ நினைச்சுச் சங்கடப் படுறாப்புலெ தெரியுது."

"கண்ணெதிரே உங்க மனசைப் போட்டு நொறுக்கிப் போட்டேன்."

''அதை வுடுங்க. எனக்கு எல்லாம் மறந்திட்டது!"

''அதான் எனக்குத் தெரியுமே? அன்னிக்கு அதிரப் பேசாமலே என்னை மிரள வெச்சாச்சே. கண்ணுலே காயாம்பு கிட்டப் பேசி, நான் அம்மணமா ஆகுறதுக்குள்ளே கதவைச் சாத்திப் போட்டீங்களே!"

"கொஞ்சம் மோர் கொண்டா" என்று அப்பா பேச்சைத் திசை திருப்பினார்.

''வேலுப்பிள்ளை, ஒண்ணு மட்டும் சொல்றேன். நான் இதுவரை வியாபாரத்துலெ நஷ்டப்படலை. கபோதித்தனமா ஒரு காரியம் பண்ணிட்டு நஷ்டப்பட்டு நிக்கறேன். எப்போ நிமிரப் போறேனோ?"

"இப்ப எதுக்கு இப்படி வருத்தப்படணும். நான் யார்? உங்க பங்காளி மாதிரித்தானே? எல்லாம் சகஜம்தான். விடுங்க..."

"நான் அப்படி நினைக்காத போயிட்டனே!"

"எதுக்கு இப்படிக் கொதுச்சுப் போய்ப் பேசணும்?"

"கொதிக்காதா? நெருப்பைக் காய்ச்சி நெஞ்சுல இல்லெ ஊத்திட்டேன்."

"வுடுங்க."

"இதுதான் அந்தப் பொண்ணா? என்று முத்துப்பிள்ளை செவ்வந்தியை ஒருகணம் பார்த்தார். பின் வெகுநேரம் வரை ஒன்றும் பேசவில்லை. மௌனம். அப்பாவின் பக்கம் திரும்பி அவருக்கு மட்டும் கேட்கிறாப்போல் "ரொம்பத்தான் உசந்திட்டீர்" என்று ஒரு பார்வை பார்த்தார். அவர் பார்வையில் பிரமிப்பு. பலபலவென்று ஈரமும் வியப்பும் மிதக்கின்ற பார்வை.

"**செ**வ்வந்தி, உங்க சின்னய்யாவுக்கு எலை போடு" என்று அப்பா உரக்கக் கூவினார். அவர் குரலில்தான் எத்தனை உற்சாகம். சக்திவேலுக்கு எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அப்பாவின் பேச்சின் மீது ஒரு பிடிப்பு வந்தது. அவர் பேசப் பேச அது மலர்ந்தது. அந்தப் பிடிப்பு வெறியாகி விட்டது. எல்லாம் ஒரு சத்திய வலைக்குள்தான் இருக்கிறார்கள். போலியற்ற உருவம். அந்த அமைதியும், அந்த வாழ்வின் அர்த்தமும் அவனுக்குப் புரியத் தொடங்கிற்று. இந்த உலகத்தை நலுங்கி விடாமல் இந்த மண்தான் காத்துக் கொண்டிருக்கிறதோ?' இன்னும் எத்தனை இந்த மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றதோ! சக்திவேலுக்கு முதன்முறையாக அந்த மண்ணின் மீது ஒரு பிடிப்பு வந்தது!

(முற்றும்)

'பிளாட்'னு சொல்லிட்டு குளத்தைக் காட்றீங்களே...?"

''இப்பதாங்க தண்ணி இருக்கு... சம்மர்ல சுத்தமா தண்ணியே இருக்காது!"

— சீர்காழி ரேவதி

வட்டமேஜை

மாணவர்களுக்கு வரப்பிரசாதம்!

✉ ஒவ்வொரு செயலிலும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பங்கெடுப்பதே தம் நினைவாற்றலின் ரகசியம் என்ற கலைஞரின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை. இதை இக்கால இளைய சமுதாயம் கருத்தில் கொண்டு செயல்படுமானால் மறதி என்ற சொல்லுக்கே இடமில்லை.
மதுரை, நெல்லை. வி. சிவா.

✉ பொடி வைத்து ஊதித்தான் பொற்கொல்லர் நகை செய்வார்: பொடி வைத்துப் பேசி, நகைச்சுவை மிளிர, கல்கியின் வாசகர்களுக்காகப் பதிலளித்த கலைஞர் – எமக்குப் பேட்டியெனும் நல்லாபரணத்தை நல்கியிருக்கிறார்.
மதுரை – 9,
இரா. கல்யாணசுந்தரம்.

✉ அரசியல் கலப்பில்லாத கேள்விகளைக் கொண்ட கலைஞரின் பேட்டி அருமை. சுவாரசியமான பதில்களைக் கூறி அசத்தி விட்டார் கலைஞர்.
திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

✉ அயல்நாட்டு முதலீட்டாளரிடம் கையேந்தும் நிலை, தி.மு.க. அரசு கலைப்பு பற்றிய ஜெயின் நிர்ப்பந்தம், பி.ஜே.பிக்கு மம்தா கொடுக்கும் நெருக்கடி.... மூன்று கார்ட்டூன்களும் அருமை. வெளிநாட்டு ஏடுகளில் காணப்படும் கார்ட்டூன்களுக்கு இணையாக இருந்தன.
மதுரை – 10, எம். ராஜலட்சுமி.

✉ கல்கியோடு, இலவச இணைப்பாக வெளிவந்த ''கம்ப்யூட்டர் கல்வி கையேடு'' 10-வது, 12 வது மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.
பூனாம்பாளையம்,
கே. எம். சுப்பிரமணியன்.

✉ சுரேஷ்ஜியின் ''ஸேம் சைட் கோல்'' சிறுகதை தலைப்புக்கு ஏற்றபடி மிக சுவாரஸ்யம்.
விழுப்புரம்,
வை. வெங்கடேசன்.

✉ 'ஜெ-வை இப்போதும் கூட என் மகள் மாதிரிதான் நினைக்கிறேன்' என்ற ஹெக்டேவின் பேட்டியிலிருந்து அவரின் சகிப்புத் தன்மையையும், அரசியல் விவேகத்தையும் நன்கு உணர முடிகிறது!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ சிதா ரவி எழுதிய 'உதை' சிறுகதை, மனதை உதைத்துச் சிறகடிக்கச் செய்து விட்டது. மழலையின் உதையையும் வாலிபனின் மன உதையையும் தாய் எப்படி உணருகிறாள் என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டிய உன்னத சிறுகதை.
திருச்சி – 17,
உஷா முத்துராமன்.

✉ 'எங்களை மட்டமாக எண்ண வேண்டாம்!' என்ற கென்யா அணி கேப்டனின் சூளுரை நியாயமானதே. ஒருகாலத்தில் இலங்கையை சாதாரண கிரிக்கெட் டீம் என நினைத்த நம்மவர்கள் இன்றைக்கு அந்த நாட்டினரிடமே பரிதாபமாகத் தோற்கிற நிலைமை. அடுத்து வரப் போகும் காமன்வெல்த் ஆட்டங்களில் கென்யா பல சாதனைகளைப் புரியும் என்பது மறுக்க முடியாத உண்மை.
திருவண்ணாமலை, கே. அருணாசலம்.

✉ சூப்பர் ஸ்டாரின் படங்களைப் பற்றிப் பல்வேறுவிதமான வதந்திகள் உலவி வரும் இவ்வேளையில், சூப்பர் ஸ்டாரின் ரசிகர்களின் நெஞ்சில் 'படம் இல்லை' என்ற ஈட்டியைப் பாய்ச்சி விட்டீர்களே!
அரவக்குறிச்சிப்பட்டி,
எம். அசோக்ராஜா.

✉ பட்ஜெட் பற்றிய தலையங்கம் அருமை. இன்னும் கூட உறைக்கும்படி திட்டியிருக்கலாம். நடுத்தர மக்களை மட்டுமல்ல; ஏழை மக்களுக்கும் பாதிப்பைத் தந்த பட்ஜெட்.
தூத்துக்குடி – 1,
சிவராமசுப்ரமணியன்.

● மு. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? ஈழத் தமிழர் பிரச்னையை அணுகி தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி விட்டார் 'ஜெ' எனப் புகழ்கிறாரே டாக்டர் ராம்தாஸ்?

! இந்த ஐஸ் உருகும்போது சுடும்!

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? கெடுபிடியான தணிக்கை இருக்கும் போதே ஒருசில ஆபாசப் படங்கள் வெளி வந்து விடுகின்றன. இந்நிலையில், தணிக்கை முறையில் க்ரீன் சானல் தேவை தானா...?

! க்ரீன் சானல் தாண்டி வரும் படங்கள் ஆபாசம் என சென்ஸார் முடிவு செய்யுமானால்

...பிரச்னை

• இமேஜ்....









... தானா?

... இவர்களுக்குத்

கடுமையான அபராதம்/ தண்டனை விதிக்கலாம். அப்படிச் செய்தால் பொறுப்புணர்ச்சியைத் தூண்டி, நேர விரயத்தைக் குறைக்க இந்த முறை உதவும்.

● எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

? கல்கி ஆளுங்கட்சி பக்கமா? எதிர்க் கட்சி பக்கமா? நியாயத்தின் பக்கமா?

! ஆளுங்கட்சியா எதிர்க்கட்சியா என்பதோடு நிற்காமல் நீங்கள் மூன்றாவதாக ஒன்றைச் சேர்த்துக் கொள்ள கல்கி அவசியம் ஏற்படுத்தியிருக்கிறதே சார்!

● கே. பெருமாள், கூனியூர்.

? 'ஜெ'வின் தற்போதைய ஆசை என்ன...?

! எப்போதும் ஒரே ஆசை – நாற்காலி!

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.

? லட்சக்கணக்கில் செலவு செய்து தேர்தலில் வெற்றி பெறக்கூடிய சக்தி படைத்த எம்.எல்.ஏக்களுக்குச் சம்பள உயர்வு, எம்.பிக்களுக்கு வருடம் ஐம்பது போன் கோட்டா; 160 கேஸ் கனெக்ஷன் கோட்டா போன்ற சலுகைகள் தேவை தானா?

! தேர்தலின் போது லட்சக்கணக்கில் செய்த செலவுகளை ஈடுகட்டத்தானே இந்தச் சலுகைகள்? அப்புறம் நாம் தேவைதானா என்றால் தியாகம் செய்து விடுவார்களா? இதெல்லாம் லைசென்ஸ் வழங்கப்பட்ட லஞ்சம் ஐயா!

● எம். ராஜலட்சுமி, மதுரை – 10. ❑

? அயோத்தியில் ராமர் கோயில் கட்ட தூண்கள் செதுக்கப்படுவது உண்மை என்று கூறும் அத்வானி அதைத் தடுக்காமல் விட்டது ஏன்...?

நடிக – நடிகையர்கள் இமேஜ் பார்ப்பதேன்...?

! தடுக்காமல் விட்டது கட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான்! நீதிமன்றத் தீர்ப்பு இந்த முடிவுக்கு எதிராக இருந்தால், அதைப் பாராளுமன்ற சட்டம் மூலம் ரத்து செய்வோம் என்று ஷா பானு வழக்கை உதாரணம் காட்டிப் பேசுகிறார்களே பி.ஜே.பிக் காரர்கள்!

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

? கோயில்களை வர்த்தக நிறுவனங்களாகக் கருதி, அதன் ஊழியர்கள் 'ஸ்டிரைக்'கில் ஈடுபட்டது எதைக் காட்டுகிறது?

! அந்த ஊழியர்கள் அவ்வளவு தூரத்துக்குத் துணிந்து ஸ்டிரைக் செய்யும் அளவுக்கு அவர்களை வாட்டமுற அரசு அனுமதித்து வந்திருப்பதையே இது காட்டுகிறது.

நீங்கள் கேட்டவை – தராசு

● வாக, சென்னை – 70.

? பேச்சு என்பது எப்படியிருக்க வேண்டும்?


! 'அட, அதுக்குள்ள முடிச்சிட்டாரே, இன்னும் கொஞ்சம் பேசியிருந்தா நல்லா இருந்திருக்குமே'ன்னு கேட்கறவங்க நினைக்கிற மாதிரி இருக்கணும்.

● வி.பி.எம். வள்ளி, மதுரை.

? குஜராத்தில் புயலின் கோரத் தாண்டவம் பத்தி...?

! புயலின் தாண்டவத்தை விட துறைமுக நிர்வாகத்தின் அலட்சியம் அதிகமாக பாதித்திருக்கிறது. 'தங்கள் ஊழியர்களை மட்டும் அப்புறப்படுத்தி விட்டு, சுற்று வட்டாரத்தினரை எச்சரிக்காமல் விட்டு விட்டது துறைமுக நிர்வாகம் – 'இதுகுறித்து விசாரணை தேவை' என குஜராத் முதல்வரே சொல்கிறார்.

• 'வாக்கு' வாதம்!



● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? அரசியல்வாதிகள் ஊழலை ஒழிப்போம் என்று கூறும்போதெல்லாம் உங்களுக்கு என்ன தோன்றும்?

! உங்களுக்கு என்ன தோன்றுமோ அதேதான்!

● ஏ. காதர், நாகூர்.

? மானியம் வழங்கப்பட்டவை தரமான திரைப்படங்களா...?

! பல படங்களின் பெயர்களைக் கூட நான் கேள்விப்பட்டதில்லை.

● ராஜி, கமுதி.

? பிணைக் கைதிகளை மட்டும் அதிரடிப்படை மீட்பதன் மர்மம் என்ன...?

! வீரப்பன் அதை அனுமதிப்பதால்...!



• மௌன சம்மதம்!



• அனுமதி, ஆசியுடன்...!

● அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

? சாராய ஏலத்தில் எதிர்க்கட்சிகளும் இணைகின்றன. பஞ்சாயத்து நிர்வாகத்தில் கூட்டணிக் கட்சிகளும் மோதுகின்றனவே..?

! பஞ்சாயத்து நிர்வாகத்தில் விதிவிலக்காக காஞ்சிபுரம் அருகே வெள்ளப்புத்தூர் பஞ்சாயத்து யூனியன் தலைவரை மற்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து பதவி நீக்கம் செய்துள்ளார்கள். காரணம் : ஊழல்! இப்படியும் நடக்குது சார்...

● கி. திலகர், ஈரோடு – 11.

? கவர்னரின் வாக்கு வேத வாக்கு அல்ல என்கிறாரே தம்பிதுரை...?

! வேதவாக்காக இல்லாவிட்டாலும் சொந்த வாக்காக இருக்கிறதே! தம்பி துரைக்கு அப்படியா!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம், உதாரணம்..?

! பி.ஜே.பி. பட்ஜெட்!

• போட்ட கோலம்!



● ஆர். பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.

? நடிக, நடிகையர்கள் பொதுவாக இமேஜ் பார்ப்பதேன்...?

! யார்தான் இமேஜ் பார்ப்பதில்லை...? வெளியே போகுமுன் கண்ணாடியில் அவசரமாக ஒரு பார்வை பார்த்து, தலையைக் கோதி விட்டுக் கொள்வதில்லையா...?

● ஆ. அழகேஷ், பூதப்பாண்டி.

? வரலாறு என்பது மிக முக்கியமான ஒன்று. ஆயினும் பள்ளிகள் கல்லூரிகளில் வரலாறு பாடம் எடுத்துப் படித்தால் பயனில்லை என்கிறார்களே...? காரணம் என்ன...?

! வரலாற்றை வெறும் பழைய நிகழ்வுகள் என்று கருதி பரீட்சைக்குப் படிக்கிறோம். அப்படிப் படித்தால் பயனில்லைதான். ஆனால், வரலாறு உணர்த்தும் உண்மைகளை, பாடங்களை அலசி, ஆராய்ந்து வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்த்தோமானால் பயனடைவோம். அப்படியொரு கலாசாரம் நம் நாட்டில் – ஏன் உலகில் பெரும்பாலான இடங்களில் இல்லை. If men could learn from history, what lessons it would teach us...! But passion and party blind our eyes... and experience is but a lantern on the stern, that shines only on the waves behind us! - சொன்னவர் கோல்ட்ஸ்மித்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
எம். ராஜலட்சுமி,
த/பெ. என். முருகேசன்,
M 461, எல்லீஸ் நகர், மதுரை – 10.



"நிஜமாவே நீங்க ஜோக் எழுத்தாளரா சார்...?"

"இல்லீங்க.. வீட்டுக்கு யாரும் விருந்தாளிங்க வந்துடாமல் இருக்க சும்மா ஒரு போர்டு வச்சிருக்கேன்!"

— சீர்காழி வி. ரேவதி



"டார்லிங்! நம்ம காதலைப்பத்தி வீட்ல சொல்லிட்டியாம்மா?"

"ம். சொல்லிட்டேன்."

"என்ன? சொன்னாங்க?"

"இந்தப் பையனையாவது உருப்படியா காதல் பண்ணி கல்யாணம் பண்ண முயற்சி பண்ணுன்னாங்க!"

— மகாராம் திருப்பதி

ஸ்மைல்



"போன வாரம் ரிட்டையர் ஆன நம்ம கிளார்க் ஆபீஸ் வந்து தகராறு பண்றாரு!"

"எதுக்கு?"

"சம்பளம் தராட்டியும் பரவாயில்லை, டெய்லி வந்து இப்படி ஒரு ஓரமா தூங்கிட்டு போறேன்னு அடம்பிடிக்கறாருங்க!"

— சா. அனந்த குமார்

"நேற்று நான் பார்த்துட்டு வந்த பொண்ணு உலகம் தெரிந்தவளா இருப்பான்னு தோணுது."

"எப்படி?"

"என்னோட சம்பளத்தைப் பற்றி வாயே திறக்காமல், சம்திங் எவ்வளவு வரும்னு கேட்டதோடு நிறுத்திக்கிட்டாளே!"

— சீர்காழி வி. ரேவதி





"ஏன் அவரை கட்சியிலிருந்து நீக்கிட்டாங்க?"

"வருமானத்துக்குக் குறைவா சொத்து வெச்சிருந்தாராம்."

— தாரமங்கலம் அ. முத்துசாமி

பளிச்!

"தம்பி ஏன் கேமிராவுக்குப் பக்கத்துல நிக்கிறீங்க? கொஞ்சம் தூரத்துல நில்லுங்க."

"வேலைக்கு அப்ளிகேஷன் போட 'மிகச் சமீபத்தில் எடுக்கப்பட்ட படம்' கேட்டிருக்காங்களே!"

— தேனி முருகேசன்





"உங்க நண்பரை அரை மணி நேரம் இருந்து காப்பி குடிச்சுட்டுப் போகச் சொல்லுங்க!"

"காப்பிப் போட அரைமணி நேரம் ஆகுமா?"

"காப்பியை நொடியில் போட்டுடுவேன். அதுக்கு முன்னாடி பால், சர்க்கரை, காப்பி பொடி இரவல் வாங்கத்தான் கொஞ்ச நாழியாகும்!"

— ஞா. ஞானமுத்து

"ஆபீஸ்ல தூங்கறது உங்க பிறப்புரிமையா இருக்கலாம்; அதுக்காக ஆபீஸுக்குள் நுழையும் போதே தூக்கக் கலக்கத்தோட வரணுமா?"

"ஏன் சார்?"

"என் பெயருக்கு நேரே கையெழுத்துப் போட்டுத் தொலைச்சிருக்கியே!"

— ஞா. ஞானமுத்து





"அப்பா, 'Mother Tongue' என்ற காலத்துக்கு நேரே என்ன எழுதணும்?"

"ரொம்ப நீளம்னு எழுது!"

— வலங்கைமான் நூர்தீன்

"படப்பிடிப்பு தளத்துலயே நம்ம ஹீரோயின் தூங்கறாங்களே...ஏன்?"

"அடுத்த படத்துக்கான கதையை யாரோ சொல்லித் தொலைச்சிருங்காங்க!"

— அம்பை தேவா



சமாளிக்கத்தான்...

ஒரு புதிய பொருளை உருவாக்கிய போது, எனக்குத் திருப்தி ஏற்பட்டது உண்மை. ஆனால் அது சோதனைக் களத் திற்கு வரும் போது – இடையில் எத்தனையோ சம்பவங் கள் நேரலாம். பொருளின் தரம் இந்தக் காரணங்களால் குறைந்திருக்கலாம்.

எனினும் ஒரு சம்பவம் இன்னும் என் மனக்கண் முன் நிற்கிறது. எங்கள் தொழிலகத் தின் எல்லா நிர்வாகிகளும் அங்கே அரை வட்ட வடிவில் நின்று கொண்டிருக்கின்றனர். பொருளானது வெந்த நிலையில் மொர மொரப்பான நிலையில் மேஜை மீது வைக்கப்படு கிறது.. நிறுவனத்தின் உரிமை யாளர் என்னருகில் நின்று கொண்டிருந்தவர், சென்று அதைச் சிறு சிறு துண்டு களாகப் பதம் பார்க்க வெட்டத் துவங்குகிறார்.



ஏதோ மேலிருந்து, சுமார் நாலடி உயரத்தி லிருந்து ஒரு வெண்மை யான மங்கலான ஒளிப் படிவத்தில் அதனுள் இறங்கியதைக் கண் டேன். நான் இருந்த உணர்வு நிலையில் அதைப் பற்றி ஆராயும் அமைதி நிலையில் என் மனம் இல்லை.

ஆனால் அங்கிருந்த நிர்வாகிகள், "ஆகா! பிரமாதம்!" என்று தெரி வித்தபோது மீண்டும் அந்தக் காட்சி என் நினைவுக்கு வந்தது. இது என் பிரமையாக இருக்கலாம். நமக்கு மேற்பட்ட ஒரு சக்தி ஏதோ ஒன்று நமக்குத் துணை செய்ய வந்தது போன்ற ஆழமான எண்ணமே இன்னும் என மனத்தில் நிற்கிறது.

அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மிகவும் திருப்தி அடைந்தவராய் இன்னும் சில துண்டுகளை எடுத்து வாயில் போட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அவருடன் நான் அவரது அறைக்குச் சென்றேன். "இந்த நிறுவனம், பெரும் நஷ்டத் தில் ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார். அதன் பல்வேறு கஷ்டங்களையும் நினைவில் கொண்டு வந்தவராய், ஒரு கணம் மௌனம்.

"இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் இந்த நிறுவனத்தை மூட வேண்டிய நிலை ஏற்படலாம்... எனவே நீங்கள் நன்கு யோசித் துச் சொல்லுங்கள். தலைமை நிர்வாகியாக நீங்கள் பொறுப்பேற்பதில் எனக்குப் பிரியம் தான்" என்றார்.

அமெரிக்க நாட்டில் ஒரு பழக்கம். ஏதா வது ஒரு நிறுவனத்தில் அதுவும் திவாலாய்ப் போன நிறுவனத்தில் இருந்து ஒரு ஆள் வேலைக்கு விண்ணப் பித்தால் அவர் கீழ் மட்டப் பணியாளராய் இருந்தால் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். 'நிறுவனம் திவாலா னதற்கு இவர் பொறுப்பல்ல' என்ற எண் ணத்தில். ஆனால் மேல்மட்ட நிர்வாகிகள் – அதுவும் தலைமை நிர்வாகியாக இருந்த ஒருவர், மூடப் பட்ட ஒரு நிறுவனத்தில் இருந்து வெளியே சென்று வேலைக்கு விண்ணப்பித்தால் வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் நிறுவனத்தின் சரிவுக்கும் நஷ் டத்திற்கும் அவர்தான் காரணம் என்ற எண்ணம் அவர்கள் மனத்திலே நிரந்தரமாய் நின்று கொண்டிருக்கும். "இந்த அதிர்ஷ்டக் கட்டையை நம் நிறுவனத்தில் வேறு சேர்க்க வேண்டுமா?" என்றே எண்ணுவார்கள்.

எனவேதான் அந்த நிறுவனத்தின் சொந்தக்காரர் என்னைப் பார்த்து அப்படிக் கேட்டார். "மூன்று மாதத்திற்கு நல்ல சம் பளம் கிடைக்கும்; பிறகு நாலாம் மாதத்திற்கு அடிமட்ட வேலைதான் கிடைக்கும். இதற்கு

எ.கெ.எ — டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



நீ தயாரா?" என்று கேட்காமல் கேட்டார்.

நான் ஒரு கணம் யோசித்தேன். "இது ஒரு வாய்ப்பு. நம் திறமையைக் காட்ட, வெளிக் கொணர, நாம் விரும்பியதை எல்லாம் செய்ய - இது ஒரு வாய்ப்பு. அதுவும் பெரிய வாய்ப்பு" என்பதை மட்டுமே என் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. ஒரு பத்து அல்லது இருபது சதம் இது தோற்றும் போய்விடலாம். அப்படியே தோற்றால் என்ன?

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதிய சிவனும், செத்து விட்டானோ? பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்கு அன்னாய், நெஞ்சமே அஞ்சாதே நீ!"

என்ற எண்ணம்தான் மோதியது.

"இல்லை! இதை மீட்டு விடலாம். திருப்பி விடலாம்" என்று உறுதியுடன் அவரிடம் சொன்னேன்.

வெளியிலிருந்து ஒரு நிறுவனத்தை ஆலோசகனாகப் பார்ப்பது ஒரு விஷயம்; உள்ளே தலைமை நிர்வாகியாகப் பொறுப்பேற்பது என்பது முற்றிலும் மாறுபட்ட விஷயம். ஆலோசகனாக இருக்கும் போது நாம் மற்ற நிர்வாகிகள், தொழிலாளர்களது ஒத்துழைப்பை நாடுகிறோம். நிர்வாகியானபின் அத்துடன் பொறுப்பையும், கண்டிப்பையும், "இது இப்படித்தான் இருக்க வேண்டும்" என்கிற மாற்றத்தையும் நாம் கொண்டு வர வேண்டும்.



மாற்றம்! மாற்றத்தை யாருமே விரும்புவதில்லை!

காரணம் : மாற்றத்தில் முன்பு இருந்த நிலை இல்லை. எல்லாமே புதிய நிலை. அனுபவமற்ற புதிய இடம் - புதிய சூழ்நிலை. மனம் "தனக்கு பாதுகாப்பு இருக்குமா?" என்று பயப்படுகிறது. புதிய சூழ்நிலையில் "வேலைக்கு ஆபத்து ஏற்படுமா?" என்கிற பயம் எழுகிறது.

நிறுவனத்தில் நிலவும் சூழ்நிலையை நான் நன்கு அறிந்திருந்தேன். பொருளை வாங்குவோரிடம் பொருளைப் பற்றிய திருப்தியோ மகிழ்வோ இல்லை. அத்துடன் அவர்கள் செய்திருந்த அட்டைப் பெட்டி மேலுறை (packing) சரியாயில்லை. லேசான பென்சில் கோடு போன்ற எழுத்துக்களில் பொருளின் பெயரை அச்சிட்டிருந்தார்கள். நம்மை அழைக்கக் கூடிய, கவரக் கூடிய நிலையில் அதன் மேலட்டை வண்ணங்கள் இல்லை. எல்லாம் நீர்த்த நிலையில். அதைவிடுங்கள்! மற்ற விஷயங்கள் இன்னும் அதிகக் கவலை தந்தன.

பொருளின் தரம் எங்கே நிச்சயிக்கப்படுகிறது? தொழிற்சாலையில். அந்தத் தொழிற்சாலையில் சுமார் நூறு பேர் ஆண்களும் பெண்களும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பொருட்கள் கனவு போய்க் கொண்டிருந்தன. தொழிற்சாலையின் நிர்வாகி ஓய்வு பெற்ற உணவுத் துறை ஆய்வாளர். சுத்தமான நிலையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்று ஆய்வு செய்து வந்த

...சவால்கள்! 25

மனிதர். அவருடைய மகனும் அங்கே உற்பத்திப் பிரிவில் தரக் கண்காணிப்பாள ராக வேலை பார்த்தார். அவரது மகளுக்கும் அங்கே கணக்கெழுதும் வேலை. தொழிற் சாலை நிர்வாகி சமயங்களில் கால்ஃப் விளையாட வேலை முடியும் முன்பாகவே போய் விடுவார். அவரது மகனோ ஆர்வ மில்லாத இளைஞர். பெண்ணோ, "வங்கி வரை வேலை" என்று போவாள். எல்லாம் நல்லவர்கள்தான். எனினும் அங்கே பொறுப் பற்ற நிலை. தரமான பொருளைச் செய் கிறோம், செய்ய வேண்டும் என்கிற 'நிறுவன உணர்வு' இல்லாத நிலை. ஏதோ ஒரு வேலை பார்க்கும் ஒரு மனோபாவத்தைத்தான் அங்கு கண்டேன்.

மாவு பிசைவதிலிருந்து அதைத் தட்டை யாக, வில்லையாக ஆக்கி அதை அரை வேக்காட்டில் வேக வைத்து, பின் பொருட் களை அதன் மீது குவித்து கடைசியாகக் குளிர்பதன சாலைக்கு எடுத்துச் செல்வது வரை எல்லாமே யந்திரமயம். எனினும் எல் லாம் பழைய யந்திரங்கள். ஆனால் அவை ஒழுங்காக நாணயத்துடன் வேலை செய்து கொண்டிருந்தன.

பிரச்னையே தொழிற்சாலையில்தான் இருப்பதாக எனக்குப் பட்டது. எனவே அங்கே துவங்கினேன். எனது காரியதரிசி யிடம் நான் தொழிற்சாலையில்தான் இன் னும் சில வாரங்களுக்கு இருக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு அதில் கவனம் செலுத்தினேன்.

காலை ஆறரை மணிக்கு தொழிற்சாலையில் வேலை துவங்கும். எனது வீடோ தொழிற்சாலையிலிருந்து 90 மைல் தள்ளி. எனவே நான் காலையில் 4 மணிக்கே எழுந்து சரியாக ஆறு மணிக்கு தொழிற்சாலைக்குப் போய் விடுவேன். அரைமணி முன் பாக. தொழிற்சாலையின் வாயிற் படியில் நின்று கொண்டு உள்ளே நுழையும் பலரையும் 'ஹலோ' சொல்லியும் மற்ற ஆயத்த வேலை களில் கவனம் செலுத்தவும் ஆரம்பித்தேன்.

வேலை நடக்கும்போது ஒவ்வொரு பகுதி யிலும் சென்று "வேலை எப்படி நடக்கிறது?" என்று பேசுவேன். சமயத்தில் நானும் உதவு வேன். வேலை நடக்கும்போதே நடக்கும் களவுகள் குறைந்தன. அக்கறையுடன் விசாரித்ததில் அவர்களுக்கு ஒரு சந்தோஷம். நான் கொடுத்த கலவை முறைப்படி மாவு கலக்கப் படுகிறதா என்பதில் கவனமாயிருந் தேன். தெரியாத விஷயங்களைத் தயக்க மின்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். யந்திரங்களை சீரான ஓட்டத்தில் வைத் திருக்கும் பொறுப்பைப் பெற்றவர் என்னைப் போல ஒரு வெளிநாட்டு இளைஞர். பத்தா வதுக்கு மேல் படிக்காத 'இன்ஜினீயர்'. எனி னும் யந்திர நுட்பங்களை நன்கு அறிந்தவர்.

எனது நோக்கத்தை அறிந்த அவர் எனக்கு உதவியாக இருந்தார். அடுத்த வாரம் நான் அங்கு சென்றபோது எங்கும் ஒரு புது உற்சாகம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. "தலைமை நிர்வாகியே நம்முடன் வந்து சகஜமாகப் பேசுகிறாரே, அக்கறை எடுத்துக் கொள்ளுகிறாரே" என்ற செய்தி பரவியது; அந்த உணர்வில் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் எல்லாவற்றையும் முன்னை விடத் துடிப்பாகச் செய்ய ஆரம்பித்தார்கள். பொருட்களால் ஆன பெட்டிகளைத் தூக்கி அடுக்கி வைப்பதிலிருந்து எந்த வேலைக்கும் உழைப்பிற்கும் நான் தயங்குவதில்லை.

அப்போதுதான் வெளியே நின்ற ஒரு பெரிய 'லாரி' கண்ணில் தென் பட்டது. அதாவது உற்பத்தியான பொருளை வைக்க இடமில்லாமல் பாதுகாப்பில்லாத, வெளியே குளிர் பதனப்படுத்தப் பட்ட லாரியில் பொருட்கள் வைக் கப்பட்டிருந்தன. சொன்னார்கள்: "ஒரு வாரத்திற்கு இரண்டு மூன்று முறை பல 'கேஸ்கள்' பெரிய பெட்டி கள் களவாடப்படுகின்றன. பூட்டு உடைக்கப் படுகிறது; நமது காவல்காரரால் சரிவர இதைக் கண்காணிக்க முடியவில்லை. இதனால் ஏராள நஷ்டம்."



ஒரு வெள்ளிக் கிழமை. நாங்கள் காவல் துறையினரிடம் ரகசியமாகப் பேசினோம். அவர்கள் சாதாரண உடையில், சாதாரண காரில் வந்து, தற்செயலாக கார் அங்கு நிறுத்தப்பட்டிருப்பது போன்ற பாவனையில் இரவு பூராவும் கண்காணித்தார்கள். இரவு மணி இரண்டு. லாரியின் கதவைத் திறந்து பெட்டிகளை அப்புறப்படுத்தும் வேலையில் திருடர்கள் ஈடுபட்டார்கள். காவல் துறையினர் அப்படியே அங்கேயே அவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்தார்கள்.

இதில் துக்ககரமான விஷயம் என்னவென்றால் திருடியவன் எங்கள் நிறுவனத்திலே வேலை செய்பவர். துரதிர்ஷ்டவசமாக, அவர் அந்த நாட்டுப் பழங்குடிப் பரம்பரையைச் சேர்ந்த இளைஞர்; செவ்விந்தியர் என்று சொல்வோமே, அந்த அமெரிக்க இந்தியப் பழங்குடியைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி ஒரு அமெரிக்கப் பெண். அந்த இளைஞருக்கு வேலை போயிற்று; மேலும் மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க, வழக்கும் தொடரப்பட்டது.



இந்த நிலையில் அந்த அமெரிக்கப் பெண் – திருடியவரின் மனைவி – என்னிடம் வந்து முறையிட்டாள், கோபப்பட்டாள்; அழுதாள். ஏழைக் குடும்பம்.

என்னுள் ஏற்பட்ட மனக் கலக்கம் – அனுதாபம் – எது நியாயம் என்ற உணர்வு, கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு ஏழை பழங்குடி மகனின் வேலையைப் பறித்து விட்டது பாவமான செயல் போல என்னை வாட்டியது. இரண்டு மூன்று நாட்கள் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

வழக்கை நாங்கள் மேற்கொள்ளவில்லை. இரண்டு வாரங்களில் அந்த ஆள் வேறொரு வேலையில் சேர்ந்ததாக அறிந்தேன். ஆனால் நாங்கள் செய்த அந்த செயல் – கண்காணிப்பும் கண்டிப்பும் – பிரமிக்கத்தக்க மாறுதலை எங்கள் தொழிலாளர்களிடையே ஏற்படுத்தியது. "இவர்கள் வெறும் பேச்சு பேசுபவர்களல்ல. காரியவாதிகள்!" என்ற எண்ணம், அதன் கனம் – வேகமாகப் பரவியது.

ஒரு மூன்று மாதங்கள் இப்படித் தினமும் காலை 6 மணியிலிருந்து இரவு 8 வரை நான் அங்கே கடுமையாக வேலை செய்தேன். தொழிற்சாலையில் எல்லாம் சரியாகி விட்ட நிலையில், எங்கள் நிறுவனத்தின் மிக முக்கியமான மனிதரான, எனக்கு அடுத்த கட்டத்தில் வேலை பார்க்கும், விற்பனை விளம்பரம் இவற்றைக் கவனித்துக் கொண்ட மனிதரிடம் சென்றேன்.

"ஜிம்! நமது விற்பனையில் இந்த 19 மாநிலங்களிலும் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நமது நிறுவனத்தின் சிறந்த விற்பனையாளர் இருக்கும் தொகுதியிலும், மிக மோசமாக விற்பனை ஆகும் தொகுதியிலும் நான் சென்று பார்க்க, தங்க, ஏற்பாடு செய்யுங்கள்!" என்றேன்.

"சந்தோஷமாக!" என்றார் அவர்.

நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் நம்பிக்கை இழந்துவிட்ட ஒரு நிறுவனத்தைத் தூக்கி நிறுத்துவது என்பது ஒன்றும் எளிதல்ல.

நான் எனது அடுத்தக் கட்டப் பணியில் – விற்பனை இலாகாவில் இறங்கினேன்.

ஒரு ஆப்பிரிக்கப் பழங்குடியில் பிறந்த ஒரு சிறுவன் தன் தாத்தாவைப் பார்த்துக் கேட்டானாம்.

"தாத்தா! இவ்வளவு பெரிய யானையை எப்படித் தின்பது?" என்று.

"கொஞ்சங் கொஞ்சமாக!" என்றாராம் தாத்தா.

அது போல நானும் இறங்கினேன்.

கொஞ்சங் கொஞ்சமாக.

காலை நன்றாக ஊன்றிக் கொண்டு.

(தொடரும்)

ஜூன் 24 முதல் 30 வரை

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க புத்திசாலித்தனம் வெளிப்படற வாரங்க இது. குடும்பத்துல இருந்த குழப்பமெல்லாம் மாறி, சந்தோஷ நிலைக்கு வருவீங்க. கலைத்துறை, மருத்துவத் துறையினருக்கு வளர்ச்சி நிச்சயம். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். நெனைச்சதெல்லாம் நடக்கும். பண விஷயத்திலும் பிரச்னை இருக்காது. ஆனாக்கூட கொடுக்கல், வாங்கல்ல உஷாரா இருங்க. பதற்றம், அவசரத்தை ஓரங்கட்டி வையுங்க. இரவுப் பயணம் வேண்டாம். எதிலும் வீண் பழிக்கு ஆளாயிடாதீங்க. ஆறு, குளத்துக்குப் போனா ஜாக்கிரதையா இருங்க. மின்சாரம், ஆயுதங்களோடு பழங்க நேர்ந்தாலும் உஷாராயிருக்கிறது அவசியம்.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

பணப் புழக்கத்துக்குக் குறைச்சலே இருக்காது. குடும்பத்துல கல்யாணம் மாதிரியான சுப காரியங்களுக்குப் பிள்ளையார் சுழி போடுவீங்க. ஸ்பெகுலேஷன் மாதிரியானவற்றில் நல்ல அதிர்ஷ்டம் காத்திருக்கு. அப்புறம் குடும்பத்துல சந்தோஷத்துக்குக் கேட்கணுமா! ஆசிரியப் பணி, கணிதம், எழுத்துத் துறையில இருக்கறவங்களுக்கும் முன்னேற்றம் தென்படும். விஞ்ஞானிகள், அரசுப் பணியாளர்களுக்கும் வளர்ச்சியும் பாராட்டும் உறுதி. ஆனாலும் தாயாரின் உடல் நலத்திலும் குழந்தைகள் உடல் நலத்திலும் கவனம் காட்டறது நல்லது.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

சனியும் ராகுவும் உங்களுக்கு அனுகூலமா இருக்கறபோது, உங்களுக்கு இந்த வாரம் என்னங்க கவலை! நினைச்சதெல்லாம் நடக்கும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் உங்களைத் தேடி வந்து கதவைத் தட்டும். வியாபாரிகள், கலைத்துறையினர், விவசாயிகன்னு எல்லோருக்குமே ஏற்றமான வாரம்தான். ஆனாலும் வீடு, நிலம்னு நீங்க லாபத்தை எதிர்பார்க்க முடியாது. உங்க எதிரிங்க உங்களுக்குத் தெரியாமலே உங்க கூட இருப்பாங்க; முதுகுல குத்தறதுக்கும் தயாரா இருப்பாங்க; உஷாராயிருங்க!

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பிறருடைய பாராட்டைப் பெறுகிற அளவுக்குக் காரியங்களை முடிச்சுக் காட்டுவீங்க. பெரிய பெரிய உத்தியோகத்துல இருக்கறவங்களுக்கும் முன்னேற்றமான வாரம்தான். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் எதுவானாலும் ஆதாயம்தான். வழக்கு கிழக்குன்னு கோர்ட்டுல ஏதாச்சும் இருந்துதுன்னா உங்களுக்குச் சாதகமான திருப்பம் ஏற்படும். இருந்தாலும் சின்னச் சின்னத் தடைகள் வரலாம்; சிறு விபத்துக்குக் கூட சான்ஸ் இருக்கு. புதுசா யாரோடவும் பழக நேர்ந்தா உஷாரா இருங்க. அனாவசியச் செலவையும் தவிர்த்திடுங்க.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

கிரகங்களெல்லாம் உங்களுக்குச் சாதகமாவே சஞ்சரிக்கறதால மனகல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பெருகும். அப்புறம் என்ன! எதிலும் ஜெயிச்சுக்காட்டி மத்தவங்க பாராட்டையும் பெறுவீங்க. மத்தவங்களும் உங்களுக்குப் பக்க பலமா இருப்பாங்க. ஆபீஸ் வேலைல இருக்கறவங்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வுக்கு சான்ஸ் நிறைய்ய! குடும்பத்துலயும் உறவினர்கள் வருகை, விருந்து, கேளிக்கைன்னு குதூகலமே நிலவும். ஆனாலும் மனைவியின் ஆரோக்கியத்துல ஒரு கண் வெச்சுக்கங்களேன்!

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


எடுத்த காரியமெல்லாம் தடையில்லாம நடக்கும்; உங்க ராசியும் புத்திசாலித்தனமும்! அப்படி! உங்களுக்கு மேல உள்ள அதிகாரிங்க, இல்லேன்னா முக்கியஸ்தர்களெல்லாம் உங்களுக்கு உதவியா இருப்பாங்க. வெளிநாட்டுத் தொடர்பால லாபம் கிடைக்கும். அரசியல்வாதிங்க வாழ்க்கைல ஒரு புதுத் திருப்பம் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. பொதுவா நல்ல பலன்கள்தான்னாலும் வயித்து வலி மாதிரியான பிரச்னைகள் வர்ற வாய்ப்பு இருக்கு. பணம் ஒரு பக்கம் தாராளமா வந்தாலும் இன்னொரு பக்கம் செலவும் ஏராளமா இருக்கவே

நடக்குமென்பார், நடக்கும்!



கும்பராசிக்காரரான சௌந்தர்யா பயணத்துல எச்சரிக்கையா இருக்கணுமாம். அவுட்டோர் போறப்ப லக்கேஜ் எதாவது காணாமப் போக சான்ஸ் இருக்கு!

செய்யும்!




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்களுக்குக் கிரகங்கள் சாதகமா இல்லீங்க. அதால, நினைச்ச காரியத்துல சிறு சிறு பிரச்னைங்க வரும். அதனால குழப்பம், நிம்மதிக் குறைவு ஏற்படும். பயணத்தால கொஞ்சம் அனுகூலம் ஏற்படும்னாலும் எச்சரிக்கையா இருப்பது அவசியம். மாணவர்களுக்கு நெனச்ச காலேஜ்ல சீட் கிடைக்க சான்ஸ் இருக்கு. எதிலும் உணர்ச்சி வசப்படாம நிதானமா செயல்படுங்க. வெளிநாட்டுலேர்ந்து நல்ல சேதிகள் வரலாம். சிலருக்கு ஆதாயமும் ஏற்படலாம். பொதுவாப் பார்த்தா, வாரக் கடைசில பிரச்னைகள் தீர்ந்து நல்ல திருப்பம் வரும்; கவலைப்படாதீங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4 - ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க மதிப்பும் அந்தஸ்தும் உயரும் வாரம். பணப் புழக்கம் தாராளமாவே இருக்கும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கலில் ஆதாயம்தான். மருத்துவத் துறையில் இருப்பவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். குடும்பத்துல சுப காரியங்களால் குதூகலம் நிரம்பும். கவிஞர்களுக்குப் புகழ் சேரும் வாரம். இரும்பு தொடர்பான விஷயங்களில் லாபம் உறுதி. தாய், மனைவி உடல் நலத்துல கவனம் காட்டுங்க. சில திடீர்த் திருப்பங்களால ஏமாற்றங்களுக்கு வாய்ப்பு இருக்கு. எதிலும் நிதானமா செயல்படறது நல்லது.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

எந்தக் காரியத்திலயும் துணிச்சலா ஈடுபட்டு ஜெயிப்பீங்க. எதிரிங்க காணாம போவாங்க. கோர்ட் - கேஸ் விஷயங்களில் வெற்றி கிடைக்கும். எந்தத் தொழில் செய்து வந்தாலும் அவரவரும் அந்தந்தத் தொழிலில் வளர்ச்சியே காணுவீங்க. நிலம், வாகனத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். இருந்தாலும் சனியோட தலையீடு காரணமா சிறு சிறு குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் சான்ஸ் இருக்கு. அலைச்சலும் ஏற்படலாம். செலவும் கட்டுக்கடங்காம போகும். யாரோடும் வீண் விவாதம் வெச்சுக்காதீங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

முக்கியமான கிரகங்களெல்லாம் இந்த வாரம் உங்க சைடுலதாங்க இருக்கு. அதனால உங்களோட எண்ணங்கள் ஈடேறுவதற்கான வாய்ப்புங்க அதிகம். வியாபாரிகளுக்கு வளர்ச்சி உறுதி. எழுத்துத் துறையில இருக்கறவங்களுக்கு செல்வாக்கு கூடும். ஏஜெண்டுகள், கலைத் துறையில் உள்ளவர்கன்னு எல்லோருக்குமே முன்னேற்றமான வாரம்தான். பெண்களுக்கு நகை, வாஷிங் மெஷின்னு வாங்கற சான்ஸ் நிறைய இருக்கு. ஆனாலும் புதிய முயற்சிகள் வேணாம். வயிற்று உபாதைகள் மாதிரி ஏதாவது வந்து படுத்தலாம். ஜாக்கிரதையா இருங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

குடும்பத்துல சுபகாரியங்கள் நடக்கும். இல்லேன்னாலும் அதற்கான அறிகுறிகளாவது தென்படும். பணவிஷயம் திருப்தியா இருக்கும். ஸ்பெகுலேஷன், ஷேர், வீடு, மனைன்னு எல்லா விஷயங்களிலும் ஆதாயமே கிடைக்கும். ஆபீஸ் கோயர்ஸுக்கு ஊதிய உயர்வுக்கு சான்ஸ் இருக்கு. பிரச்னைகள் வந்தாலும் அதை ஈஸியா சமாளிச்சிடுவீங்க. கடன் கிடன் ஏதாவது இருந்தா இந்த வாரம் அதைத் தீர்த்திடுவீங்க. ஆனாலும் அலைச்சலும் சோர்வும் வரத்தான் செய்யும். பயணத்தில ஜாக்கிரதையா இருங்க. இல்லேன்னா லக்கேஜ்ல ஒண்ணைத் தொலைச்சிட்டு நிப்பீங்க!




மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பேச்சில திறமை, செயல்ல வேகம், மனசில துணிச்சல், மத்தவங்களோட உதவி.. உங்களுக்கு இருக்கறபோது என்னங்க கவலை! எதிரிங்க அம்பேல் ஆயிடுவாங்க. கேஸ் விஷயங்கள்ல உங்களுக்கே சாதகமான சூழ்நிலை ஏற்படும். வீட்டுக்காரரே பாராட்டியாக வேண்டிய அளவுக்குப் பெண்கள் செயற்கரிய செயல் ஏதாவது செஞ்சு காட்டுவாங்க. ஆனாலும் எல்லோருக்குமே வீண் அலைச்சலும் சில காரியத் தடைகளும் ஏற்படறதுக்கு சான்ஸ் இருக்கறதால, எதையும் பதற்றப்படாம செய்யறதுதான் நல்லது.

அக்னி சர்மா பக்கம்

அட இதுல இவளோ விஷயம் இருக்கா?



இதயத்துக்கு வண்ணச் சாயம்!

ஆன்ஜியோகிராம் (Angiogram) டெஸ்ட் என்பது பொதுவாக இதய பாதிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படுகிறது என்றாலும் இந்த வார்த்தைக்குப் பொருள் "ரத்தக் குழாயின் வரைபடம்" என்பதுதான். அதாவது எக்ஸ்ரேவின் மூலம் இதயத்தில் உள்ள எந்த ரத்தக் குழாயில் எந்த அளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிவதுதான் இந்தச் சோதனையின் நோக்கம்.

ஆனால், ரத்தக் குழாயின் பாதிப்பை எக்ஸ்ரே மூலம் கண்டறிவது என்பது ஏதோ எலும்பு முறிவைக் கண்டறிவது மாதிரி எளிதான விஷயமல்ல! நம் இதயப்பகுதியை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் அதில் எந்த ரத்தக் குழாயையும் நம்மால் பார்க்க முடியாது. காரணம் எக்ஸ்ரே கதிர்கள் சுலபமாக ரத்தக் குழாய்கள் மற்றும் அதில் பாயும் ரத்தம் ஆகியவற்றை ஊடுருவிச் சென்றுவிடும்.

இதைத் தடுப்பதற்காக இதயத்தின் எந்த பாகத்தில் பாதிப்பு இருக்கக்கூடும் என்று (ECG மூலம்) சந்தேகிக்கப்படுகிறதோ அந்தப் பகுதியில் ஒருவித வண்ணச் சாயத்தை (dye) டாக்டர் ஏற்றுவார். இந்தச் சாயம் கதிரியக்கத்தால் ஊடுருவ முடியாததாக இருக்கும். எனவே எக்ஸ்ரேவில் எந்த ரத்தக் குழாய் அடைபட்டிருக்கிறது, எந்தப் பகுதிக்கு ரத்தம் சீராகப் பாயவில்லை என்பதெல்லாம் தெளிவாகத் தெரிந்துவிடும்.

செலுத்தப்படுகிற வண்ணச் சாயத்தை நம் உடல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் முக்கியம் (பொதுவாக நம் ரத்தத்தில் எந்த வேற்றுப் பொருள் நுழைந்தாலும் உடல் அதைப் பல்வேறு விதங்களில் எதிர்த்து வெளியேற்றத் துடிக்கும்).

முதலில் கொஞ்சம் வண்ணச் சாயத்தை ஏற்றி, உடல் அதற்கு எதிர்ப்புணர்வு காட்டவில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான், தேவைப்படும் அளவு சாயத்தை

இதயத்தின் குறிப்பிட்ட பாகத்திற்குள் செலுத்தி எக்ஸ்ரே எடுப்பார்கள்.

வண்ணச் சாயத்தை உட்செலுத்துவது என்றால் ஏதோ இதயத்தில் ஒரு துளையிட்டு சிரின்ஜ் மூலமாக அதை உட்செலுத்துவது அல்ல. இது கொஞ்சம் சாவகாசமான, நுட்பமான செயல்முறை. கதீடர் (Catheter) எனப்படும் மிக மெல்லிய, நன்றாக வளையக்கூடிய ஒரு குழாய் மூலமாக இது சாதிக்கப்படும். பெரும்பாலும் இடது தொடையின் மூலமாகத்தான் இந்தக் குழாய் உட்செலுத்தப்படும். டாக்டர் இந்த நீளக் குழாயை மெதுவாக இதயத்தின் திசையை நோக்கிச் செலுத்துவார். இந்தக் குழாய் செல்லும் திசை, அருகில் உள்ள எக்ஸ்ரே ஸ்கிரீன் மூலம் கண்டறியப்படும்.

உடலுக்குள் வேற்றுப் பொருளை செலுத்தி சோதனை நடைபெறுகிறதென்றால் அதில் ரிஸ்க் அதிகம்தான். இந்த மெல்லிய குழாய், தான் செல்லும் பாதையில் உள்ள (அது இதயமாகவும் இருக்கலாம்) ஏதாவது ரத்தக் குழாயில் ஓட்டை ஏற்படுத்திவிடலாம். அல்லது மாரடைப்பை மேலும் அதிகப்படுத்தவும் செய்யலாம். இப்படி ஆன்ஜியோகிராம் சோதனைக்கு உள்ளாகிறவர்களில் ஆயிரத்தில் ஒருவருக்கு பெரும் சிக்கலோ, இறப்போ நேரிட வாய்ப்பு இருக்கிறது. என்றாலும் இதில் உள்ள ரிஸ்கை விட, இதனால் விளையும் கண்டுபிடிப்புகளும் தீர்வுகளும் மிக அதிகம் என்பதால், இதை மேற்கொள்ள மருத்துவர்கள் தயங்குவதில்லை.

இதயத்தின் குறிப்பிட்ட பகுதியை அடைந்தவுடன் இந்தக் குழாய் தன்னிடமுள்ள கதிரியக்கம் ஊடுருவாத அந்த வண்ண இரவத்தை மெதுவாக 'ரிலீஸ்' செய்யும். குறைவான நேரத்துக்குத்தான் இது இதயத்தில் தங்கும். என்றாலும் அதற்குள் அந்தப் பகுதியை எக்ஸ்ரே படம் பிடித்து விடுவார்கள். இதய ரத்தக் குழாய்களில் ஏதாவது அடைப்பு (முழுவதுமாகவோ அல்லது ஓரளவோ) ஏற்பட்டிருந்தால் அது தெளிவாகத் தெரிந்துவிடும்.

— ஜி.எஸ்.எஸ்.

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி — 9 முடிவு

அந்தப் பிரமுகர்:
டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்)

சரியான விடை எழுதியவர்களுள், குலுக்கலில் தேர்வாகி பட்டுப் புடைவை பரிசாகப் பெறுபவர்:

எம். கலைவாணி,
4. வீரபாண்டியன் தெரு,
வியாசர்பாடி, சென்னை – 39

சென்னைக்கு வந்த மனித கம்ப்யூட்டர்!

உலகப் புகழ்பெற்ற கணித மேதை சகுந்தலா தேவி, அண்மையில் சில நாட்கள் சென்னை வந்து தங்கியிருந்தார். நட்சத்திர ஓட்டலில் அவர் தங்கியிருந்த அறைக்கு, பத்து நிமிடங்களுக்கு ஒரு போன் வீதம் அப்பாயின்ட்மென்ட் கேட்டு வந்து கொண்டிருந்தது. இரண்டு இளம் பெண் செகரட்டரிகளுக்கும் போனில் பதில் சொல்லி மாளவில்லை. 'கல்கி'க்கு பேட்டி என்றதும், 'எப்போ வறீங்க?' என்று தமிழிலேயே கேட்டார்! தமக்கு நேர்ந்த சில மாறுபட்ட அனுபவங்களை நினைவுகூர்ந்து பேசினார்:

"என் மின்னல் வேகக் கணிதத் திறமையைப் பெருமைப் படுத்தும் விதமாய் மனித கம்ப்யூட்டர் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால், கம்ப்யூட்டர்களையே நான் மிஞ்சியிருக்கிறேன். 1977ம் வருடம் ஜனவரி 24ம் தேதிதான் அந்த அதிசயத்தை நான் நடத்திக் காட்டினேன். இருநூற்றியோரு இலக்கங்கள் கொண்ட எண்ணின் இருபத்து மூன்றாவது மூலம் (23rd root of 201digit number) கண்டு பிடிக்கச் சொன்னார்கள். கம்ப்யூட்டரில் இதற்கு விடை கண்டுபிடித்த நிபுணர்கள், 13ஆயிரத்து 466 கட்டளைகள் கொடுத்தார்கள். இந்தக் கணக்குக்கு 546372891 என்று விடை கண்டு பிடித்துச் சொல்ல அறுபத்தி இரண்டு விநாடிகள் பிடித்தன. கம்ப்யூட்டர் நிபுணர்கள், கம்ப்யூட்டருக்கே அறுபத்தி இரண்டு விநாடிகள் பிடித்தால், மனித மூளையால் விடை கண்டு பிடிப்பது சாத்தியமே இல்லை என்று முடிவுகட்டிவிட்டார்கள்.

அன்று மாலை, கம்ப்யூட்டரில் கணக்குப் போட்டது பற்றிய விஷயம் எனக்குத் தெரியாத சூழ்நிலையில், எனக்கும் அதே கணக்கு தரப்பட்டது. 201 இலக்க எண்ணைப் பார்த்தேன். பின் கண்களை மூடி, விடையைச் சொன்னபோது கடிகாரத்தில் ஐம்பது விநாடிகள்தான் ஆகியிருந்தன! பன்னிரண்டு விநாடி வித்தியாசத்தில் நான் கம்ப்யூட்டரை மிஞ்சி விட்டிருந்தேன்! பின்னர் இதேபோன்ற சாதனையை மறுபடியும் லண்டன் இம்பீரியல் காலேஜ் ஆஃப் டெக்னாலஜியில் முப்பதே விநாடிகளில் நிகழ்த்திக்காட்டினேன்.

● "ஒருமுறை ஜெர்மனிக்குப் போயிருந்தேன். ஏர்போர்ட்டில் இறங்கியவுடன், என்னை அழைத்துப்போக வந்திருப்பவர் யார் என்று தெரியாத குழப்பம். ஒருவரது கையில் இருந்த அட்டையில் எழுதப்பட்டிருந்தது என் கவனம் கவர்ந்தது. அவரை நோக்கிச் சென்றேன். அட்டையில் எழுதப்பட்டிருந்த பெருக்கல் கணக்கிற்குச் சட்டென விடை எழுதினேன். என்னை அழைத்துப் போக வந்திருந்தவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். புத்திசாலித்தனமான, நகைச்சுவையான இந்தச் சம்பவம் எனக்கு என்றும் மறக்காது!

● அமெரிக்கா சென்றிருந்த சமயம், ஒரு சூப்பர் மார்க்கெட்டில் பல

பொருட்களையும் எடுத்துக் கொண்டு பில்போடும் இடத்துக்கு வந்தேன். ஒவ்வொரு ஐட்டமாய் எடுக்கிறபோதே அவற்றின் விலையைப் பார்த்து, கூட்டிக் கொண்டே வந்ததால், பில்போடும் முன்பாகவே பில் தொகை இவ்வளவு என்று சொல்லி பணத்தைக் கொடுத்தேன். பில் கவுண்டரில் இருந்த பெண், 'மனித கம்ப்யூட்டர் என்ற நினைப்போ?' என்று கிண்டலாகக் கேட்க, நான் "ஆமாம்! என்னை அப்படித்தான் குறிப்பிடுவார்கள். என் பெயர் சகுந்தலா தேவி. இந்தியாவிலிருந்து வருகிறேன்" என்றதும், "ஓ! அந்த கணித ஜீனியஸா நீங்கள்?" என்று மிரண்டு போய் மன்னிப்புக் கேட்டாள் அந்தப் பெண்.

இன்னொரு முறை, ஒரு சூப்பர் மார்க்கெட்டில், பில் போடுமிடத்தில் கம்ப்யூட்டர் வேலை செய்யாத போது ஒவ்வொருவர் வாங்கிய ஐட்டங்களையும் பார்த்து, சட்டென்று கணக்கிட்டு, பில் தொகையைச் சொன்னபோது, 'பேசாமல் இங்கேயே இருந்து விடுங்கள். ரொம்ப உதவியாக இருக்கும்' என்று சொல்லிச் சிரித்தார்கள்!



• சகுந்தலா தேவி

● "விமான நிலையமொன்றில், ஒரு நபர் என்னைப் பார்த்துவிட்டு, "அட! இப்போது கம்ப்யூட்டர்கள், புடைவை கட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டனவா?" என்று கேட்டபோது அவரது கமென்ட்டை ரொம்ப ரசித்தேன்.

● "பெங்களூரில், ஒரு தடவை என் வீட்டு மிக்ஸியை ரிப்பேருக்குக் கொடுத்திருந்தேன். இப்போது வா, அப்போது வா என்று இழுத்தடித்துக் கொண்டிருந்தார் கடைக்காரர். வெறுத்துப்போன நான், "நான் யார் தெரியுமா? எனக்கு நேரம் எத்தனை முக்கியம் தெரியுமா? என்றதும், "நீங்கள் யாராம்?" என்று அலட்சியமாய்க் கேட்டதும், நான் யார் என்று சொன்னேன்.

"ஐயோ! நீங்கள்தானா அது! உங்களைப்போய் அடையாளம் தெரிந்து கொள்ளாத முட்டாளாக இருந்து விட்டேனே!" என்று வருந்தி "நீங்கள் சிறுமியாக இருந்தபோது, நான் படித்த பள்ளிக் கூடத்துக்கு வந்து கணிதப் புலமையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியை வழங்கி என்னை பிரமிப்பில் ஆழ்த்தினீர்கள்!" என்று பழையதை நினைவுகூர்ந்தார். என் மிக்ஸி உடனடியாக ரிப்பேராகி வந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?"

● "சென்னை வந்த முதல்நாள், சரவண பவன் ஓட்டலுக்கு என் செகரட்டரிகளுடன் போயிருந்தேன். எங்களுக்கு எதிரே உட்கார்ந்திருந்த இரண்டு பேரில் ஒருவர், 'இவரை அடையாளம் தெரிகிறதா? கணிதமேதை சகுந்தலா தேவி' என்று சொல்ல, மற்றவர் 'முட்டாளே! சகுந்தலா தேவி எதற்குடா சரவண பவன் வருகிறார்?' என்று ஓங்கி மண்டையில் தட்டினார். நாங்கள் புறப்பட்ட பின்னர்கூட அவர்களிடையிலான விவாதம் ஓயவில்லை!" ●

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **ஸ்ரீஹரி**



கள்ளன்

எம்.பி. நாராயணபிள்ளை

சரியான இருட்டு. வீட்டுக்கு மேலே தவழ்ந்து வந்த மாமரத்தின் கிளையைப் பற்றி, சப்தமில்லாமல் இறங்கி, ஓட்டைப் பிரித்தான். இனி, இறங்க வேண்டியது தான் என்று பார்த்தால் இரட்டை வேலை. ஓட்டுக்கு கீழே இருந்தது பரண். வேறு வழி? மெல்ல இறங்கி, உற்றுக் கவனித்தான். அது சமையலறையின் பரண். வெறும் பலகை. தட்டுமுட்டுச் சாமான்கள்.

ஓசைப்படாமல் நகர்ந்தான். ஒரே குதி. குதித்து விடலாம். ஆனால் இரவுப் பொழுது. சப்தம் கேட்டு, தூங்குபவர்கள் விழித்து எழுந்து விட்டால் அவ்வளவுதான்.

சப்தமில்லாமல் பலகை ஒன்றை நகர்த்திச் சரித்து இறங்கப் பார்த்தான். சே, டார்ச் இல்லாமல் எத்தனை கஷ்டம்! இருந்த ஒரு டார்ச், அடமானத்தில் இருக்கிறது. மீட்கலாம். இரண்டு ரூபாய் பணம் வேண்டும். என்ன கஷ்டம்!

அதெல்லாம் பிறகு. முதலில் இறங்கி, ஏதாவது தேறுகிறதா பார்க்க வேண்டும். சாப்பிட ஏதாவது கிடைக்குமா? இரண்டு நாட்களாகக் கொலை பட்டினி.

சப்தமில்லாமல் இறங்கி விட்டான். கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மெல்ல ஒரு தீக்குச்சியைக் கிழித்து, நோட்டம் பார்த்தான். ஒரு பானை நிறையத் தண்ணீர். வரிசையாகக் கழுவி அடுக்கிய பாத்திரங்கள். மூன்று, நான்கு பாத்திரங்களில் – ஆ! சாப்பாடு!

பிறகு அடுப்பில் சாம்பல் பூத்திருந்தது. கீழே நெருப்பு இருக்கும். சுகமாக ஒரு பீடி குடித்தால் தேவலை. ஆனால் பீடிக்கு எங்கே போவது? ஹூம்..!

அடுப்புக்கு அருகே ஒரு சிறிய மண்ணெண்ணெய் விளக்கு இருந்தது. பற்ற வைத்தான். வெளிச்சமில்லாமல் என்ன செய்ய முடியும்?

அடுப்பில் இருந்த தண்ணீர்ப் பாத்திரத்தைத் தொட்டுப் பார்த்தான். லேசாகச் சூடு இருந்தது. ஆஹா, காலும் முகமும் கழுவலாம். பிறகு ஃப்ரெஷ்ஷாக உட்கார்ந்து சாப்பிடலாம்!

கழுவிக் கொண்டான். தலையில், தலைப் பாகையாகச் சுற்றியிருந்த துண்டை எடுத்து உதறித் துடைத்துக் கொண்டான்.

சோற்றுப் பானையை நகர்த்தி, எட்டிப் பார்த்தான். சாதம் அடியில் இருந்தது. அடிச்சோறு என்றால் கல் இருக்கக் கூடும். வீட்டுக்கார அம்மாள் அரிசியை நன்றாகப் பொறுக்கி, களைந்திருந்தால் தேவலை. இல்லாவிட்டால் சாப்பிடுவது எத்தனை கஷ்டம்!

தண்ணீர்ப் பாத்திரத்தை அருகே நகர்த்திக் கொண்டதும், 'சே! இது என்ன, இத்தனை கஷ்டப்பட்டதும் வெறும் பழைய சோறு சாப்பிடத் தானா!' என்று நினைத்தான்.

அட, அதோ உரியில் ஏதோ தொங்குகிறதே!

ஆவலுடன் எழுந்து போய்ப் பார்த்தான். மீனும் மாங்காயும் போட்டுச் சமைத்த குழம்பு! ஹா, என்ன வாசனை!

உரியிலேயே இன்னொரு பாத்திரத்தில் புதிய சோறு! யாராவது இரவு திடீர் விருந்தாளி வந்தால் என்ன செய்வது என்று செய்து வைத்திருப்பார்கள் போலும்.

சந்தோஷமாக எடுத்து வந்து, விளக்கருகே ஒரு

பலகையின் மீது சோற்றுப் பாத்திரத்தை வைத்து, அப்படியே குழம்பைக் கவிழ்த்தான். பிசைந்து ஆசை ஆசையாக உண்ணத் தொடங்கினான்.

அடடா, அடுத்து ஒரு மோர் சாதமும் ஊறுகாயும் மட்டும் கிடைத்து விட்டால்..!

ஒரு நப்பாசையில் எழுந்து போய் அலமாரியைத் திறந்து பார்த்தான். கடவுள் கருணை மிக்கவர். மோரும் ஊறுகாயும் இருந்தது. ரொம்பக் குஷாலாகி விட்டான்.

அடுத்தது, குடிக்க நீர். அதையும் கொண்டு வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். உணவைப் பார்த்ததும் மனம் கஷ்டமாகி விட்டது.

இரண்டு நாட்களாக, இதற்காகத்தானே இத்தனை அலைச்சல்! நேற்றும் சரி; அதற்கு முன் தினமும் சரி – ஸொம்பிக் ஸொம்பி எத்தனை தடை? சகுனத் தடைகள்!

நேற்று ஒரு வீட்டின் சமையலறை ஜன்னலைத் திறந்தபோது, கெட்ட நாய் ஒன்று குலைத்து, காரியத்தைக் கெடுத்து விட்டது.

சப்தம் கேட்டு ஆட்கள் தடியுடன் ஓடி வர, தப்பித்து ஓடுவதற்குள் உதை விழ ஆரம்பித்து விட்டது. உடம்பெல்லாம் ரணம்! முள்புதரில் ஓடியதால் வந்த வினை! வேட்டியெல்லாம் நாசமாகி, போட்டிருந்த பனியன் எங்கே போனதென்றே தெரியவில்லை!

பகல் முழுக்கப் பச்சைத் தண்ணியைக் குடித்துக் கொண்டு மரத்தடியில் படுத்திருந்தபோது, தற்கொலை எண்ணம் கூட வந்தது.

தொண்டை அடைத்து, சோறு இறங்க மறுத்தது. அழுத்தும் துக்கம்.

அவனுக்கு, முன்பு ஒரு நிலமும் அம்பது சென்ட் வாழுகிற பூமியும் சொந்தமாக இருந்தது. எல்லாம் போய் விட்டது. பிறகு திருட்டுப் பழக்கம். வாழைத்தாரும் நெல்லும் திருடி வந்ததைப் பார்த்தே விழவியான அம்மாவுக்குத் தலை தெறித்து விட்டது. தெய்வாதீனம்தான். போலீஸ் பிடித்துப் போனதை மட்டும் அவள் பார்க்கவில்லை.

போலீஸ்காரர்கள், கால்–கை விரல் நகங்களில் ஊசி ஏற்றினார்கள். துடையில் செமை அடி ஒன்றுக்குப் போக முடியாதபடி அங்கே தீக்குச்சியால் சுட்டிருந்தார்கள். உயிர் போயே



இருக்கலாம். செய்தது தவிர செய்யாதவற்றையும் ஏற்று எத்தனையோ பட வேண்டி இருந்தது.

எட்டு மாச ஜெயில் வாசம். வெளியே வந்த போது இருபத்தேழு ரூபா கையில் இருந்தது. மூன்று ரூபாய்க்கு வேட்டியும் துண்டும் வாங்கிக் கொண்டான். போத்தி ஓட்டலில் பத்தணாவுக்குச் சாப்பிட்டுவிட்டு, ஒரு கட்டு பீடியும் தீப்பெட்டியும் வாங்கிக் கொண்டான். பாக்கிப் பணத்தை வேட்டியில் முடிந்து கொண்டு, ரயில்வே ஸ்டேஷனில் படுத்துத் தூங்கினான்.

காலை எழுந்து ஒரு சாய் அடிக்கலாம் என்று பார்த்தால், யாரோ பாவி வேட்டி முடிச்சை பிளேடால் அறுத்து, அத்தனை காசையும் அள்ளிப் போயிருந்தான்.

வேறு வழி? கொலைப்பட்டினி! குழாயில் தண்ணீர் குடித்துக் கொண்டு, தண்டவாளம் போன வழியே நடக்க ஆரம்பித்தான். ரொம்பப் பசித்தது. குஞ்ஞன் நாயர் கடைக்குப் போய் இரண்டு தோசையும் கடலைக் குழம்பையும் ஒரு பிடி பிடித்துவிட்டு, முதல் நாள் வாங்கிய துண்டை அடமானமாகக் கொடுத்துவிட்டுப் போனான்.

இனி தாங்காது. திருட வேண்டியதுதான்.

முதலில் அகப்பட்டது ஓர் இட்லித்தட்டு. அதை விற்று ஒரு டார்ச் லைட் வாங்கினான். டார்ச் இல்லாமல் தொழில் எப்படி சாத்தியம்?

இருந்த நிலத்தை விற்றுச் சாப்பிட்டாயிற்று. சொந்தமான ஒரு கிழவியையும் தின்றாயிற்று. இன்னும் பசி அடங்கலையே? திருடித் தின்று தான் தீர்க்க வேண்டும்.

திருப்தியாக சாப்பிட்டு முடித்தான். வயிறு வலிக்கும் அளவு. இனி நடக்க முடியாது. கண் அழுத்தியது. சுகமான உறக்கம்...!

பசி இருந்தபோது தூக்கம் வரவில்லை. வயிறு நிறைவதுதான் என்ன சுகம்!

எத்தனை பேரிடம் கடன் கேட்டிருக்கிறான்? ஒரு மடி வாங்கக் கூட யாரும் சல்லிக்காக தரவில்லை. துரோகிகள். ஒரு தார் நேந்திரம் பழம் திருடியதற்கு, கையில் விலங்கு போட்டு, மூணு மைல் இழுத்துப் போனார்கள். வழியெல்லாம் கடைகளில் நின்றிருந்தவர்கள், "கள்ளன்! கள்ளன்!" என்று கூவி வேடிக்கை பார்த்தார்கள். ஒரு பிடி வாங்கக் கூட உதவி செய்யாதவர்கள் அவர்கள்.

தூக்கம் கருட்டியது. ம்ஹூம்! தூங்கக் கூடாது! தூங்கக் கூடாது! தாகம் வேறு எடுக்கிறது. தண்ணீருக்கு எழுந்து போக வேண்டும். இது யார் வீடு? யாரோ புதிதாக வீடு கட்டி வந்திருக்கிறார்கள். தூங்கக் கூடாது. எழுந்து, போய் விடலாம். ஒரு பிடி அடித்தால் சுகம். போய் எங்காவது மரத்தடியில் படுக்கலாம். நல்ல நிலா வெளிச்சம் இருக்கிறது. நல்ல வேளை, இங்கே நாய்த் தொல்லை இல்லை. தூங்கிப் போய் விடப் போகிறேன்... ம்ஹூம்... கொஞ்சம்... ஆ, தூக்கம்...



மிகச் சிறந்த மலையாள எழுத்தாளர் எம்.பி. நாராயணபிள்ளை, சமீபத்தில் காலமானார். அவரது நினைவாக, அவருக்குப் பெரும் புகழ் பெற்றுத்தந்த அவரது முதல் சிறுகதையான 'கள்ளனை' இங்கே வெளியிடுகிறோம்.
மொழிபெயர்ப்பு:
ராஜன் — பிஆர்.

முதுகில் ஓர் உதை விழுந்த போது தான் எழுந்தான். அருகே ஒரு முரட்டு ஆளும் சமையல் கட்டு வாசலில் பயத்துடன் இரு பெண்களும் நிற்பதைப் பார்த்தான்.

"யாருடா நீ?" — அந்த ஆள் கேட்டான்.

"நான்... நான்..."

ஒன்றும் பேச வரவில்லை.

"யாரு நீ...?"

"க...கள்ளன்."

அந்த மனிதனின் முகத்தில் ஆச்சர்யம் படர்ந்தது. கையில் வைத்திருந்த கம்பைத் தூரப் போட்டான்.

"எழுந்திரு."

எழுந்து உட்கார்ந்தான்.

"என்ன திருட வந்தே?"

உண்மை சொல்ல முடிவெடுத்து, இரண்டு நாள் பட்டினியில் தொடங்கி, திருப்தியாகச் சாப்பிட்டு முடித்ததுவரை சொல்லி விட்டான்.

"சாப்பிட்டாச்சில்லே?"

"உம்..."

"சரி. தூங்கினியா நல்லா?"

"உம்."

ஒரு கணம் மௌனம்.

அவன் அந்தப் பெண்களை மறுபடி ஒருதரம் பார்த்தான். அதே அமைதி. பயம். மௌனம். அந்த ஆளைப் பார்த்தான். பின் மெல்ல, காலெடுத்து வைத்து, நடந்து அறையை விட்டு வெளியே வந்தான், திரும்பித் திரும்பிப் பார்த்தபடி. யாரும் அசையவில்லை.

முற்றம் கடந்து, வெளி வாசலை அடையும் வரை கூட...

மனிதர்கள்!

நகக்கணுவில் ஊசி ஏற்றிய போதும், தொடையில் மிளகாய்ப் பொடியை அழுத்தித் தேய்த்த போதும் வராத ஒரு வேதனை அப்போது அவன் மனத்தில் நிறைந்து, கனமாகப் பரவியது. ○



• பயிற்சியில் வீரர்கள்

ஜாலியாக ஒரு கெட்-டு-கெதர்!

இலங்கை சுற்றுப் பயணத்துக்குக் கிளம் பும் முன், இந்திய கிரிக்கெட் அணி மூன்று நாட்கள் சென்னையில் தங்கியது. 'மூன்று நாள் பயிற்சி முகாம்' என்று கிரிக்கெட் போர்டு சொன்னாலும் அதையே தின சரிகளும் எழுதியிருந்தாலும் நடந்தது பயிற்சி முகாம் அல்ல! வெறும் கெட்-டு-கெதர்.

கேப்டன் அஸாருதீன், கோச் கெய்க்வாட், அணியின் மேலாளர் வெங்கட் சுந்தரம் தொடங்கி மிக ஜூனியர் வீரர்கள் வரை தலையில் அடித்து சத்தியம் பண்ணாத குறையாக இப்படித்தான் சொன்னார்கள்.


"அணியில் நிறைய மாறுதல்கள் நடந்திருக்கிறதல்லவா? புதிய வீரர்கள் பலர் வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சீனியர்களுடன் கலந்து, பேசிப் பழகி, புரிந்து கொள்ளச் சற்று அவகாசம் தரும் விதமாகவே இந்த கெட்-டு-கெதர் கேம்ப்!" என்றார் மேலாளர் வெங்கட் சுந்தரம்.

அஸார் முதல் புதியமுகம் ராகுல் சங்வி வரை அத்தனை பேரும் கேம்ப்புக்கு முதல் நாளே ஆஜர். ஆஸ்திரேலியப் பயிற்சியாளர் கோகினோ, வீரர்களை 'பரேட்' எடுத்தார்.

நெட் பிராக்டிஸெல்லாம் அதிகமில்லை.



• அஸார்



• வெங்கட் சுந்தரம்



• கெய்க்வாட்

ஆனால் வீரர்கள் மூன்று நாளும் உடற்பயிற்சியில் தீவிரமாக இருந்தார்கள்.

லேசாக எட்டிப் பார்த்த மழையை நோக்கி செல்லப் பெருமூச்சு விட்டு, டெண்டுல்கர் சொன்னார்: "அது என்னவோ தெரியலை. இலங்கைக்கு போறதுன்னாலே மழை துணைக்கு வந்துடுது!"

பொழுது போக வேண்டுமே? அஸார், கும்ளே, மோங்கியா, சச்சின் போன்ற சீனியர்கள் தம் ஜூனியர்களை மட்டும் நைஸாகக் கழட்டிவிட்டு விட்டு, ஜீன்ஸ் படம் பார்க்கக் கிளம்பி விட்டார்கள். புரியாத காட்சிகளை விளக்கும் பொறுப்பு, கும்ளே தலையில் விழுந்தது. (தமிழ் தெரியுமே!)

ஐஸ்வர்யா ராய், ரகுமான், ஷங்கரை வாய் வலிக்கும் அளவுக்குப் புகழ்ந்து தள்ளிவிட்டார்கள், வீரர்கள்.

டெண்டுல்கரின் மனைவி அஞ்சலி ஒருபடி மேலே போய், 'கண்ணோடு காண்பதெல்லாம்' பாடலில்

புதுப் புயல்- வயது 20

இந்திய கிரிக்கெட்டில் ஒன் டே ஆட நுழைந்திருக்கும் இளம் புயல் அஜித் அகர்கர். மும்பைக்காரர். இருபது வயதாகிறது. ஒல்லியான தேகம். பழுப்புக் கண்கள். சிவப்பான உருவம். ஏதாவது சொல்லப் போய், வீண் வம்பாகிவிடப் போகிறது என்று ரொம்ப ஜாக்கிரதையாய்ப் பேசுகிறார். குரலிலும் மென்மை, இந்த இடது கைக்காரருக்கு.

பள்ளிக் கூட நாட்களில் கிரிக்கெட் ஆர்வம் தொடங்கியது. முதலில் இவரது திறமை அடையாளங்காணப்பட்டவுடன், பள்ளிக்கூட டீமில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதன்பின், ரஞ்சிக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்ற மும்பை அணியில் இவருக்கு இடம் கிடைத்தது.

அங்கிருந்து ஒருநாள் போட்டிகளில் ஆட, இந்திய அணியில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"முதன்முதலில் டெஸ்ட் மாட்ச் ஆடக் களம் புகுந்தபோது எப்படி இருந்தது?"

"ரொம்ப நர்வஸாக இருந்தது. 'நிதானமாய் இரு! பதற்றமடையாதே!' என்று எனக்குநானே சொல்லிக் கொண்டேன். அப்புறம் பதற்றம் மறைந்து நார்மலானேன்!"



"இந்திய அணியில் திறமையான ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்திய அணிக்குத்தான் வெற்றி பெறும் திறமை இல்லை என்று இந்திய அணி பற்றிய விமர்சனம் உள்ளதே! அதுபற்றி?"

"அந்தக் கருத்து தவறானது என்பது கடந்த மூன்று மாதங்களில் நிரூபணமாகி விட்டதே!"

"உங்கள் வெற்றிக்குக் காரணம் என்று நீங்கள் கருதுகிற அம்சங்கள் என்னென்ன?"

"என்னுடைய கடுமையான உழைப்பு, ஒழுக்கம், கட்டுப் பாடான பயிற்சி, மற்றவர்களுடைய நல்வாழ்த்துக்கள்..."

"பிடித்த உணவு?"

"தால், சாதம் வீட்டில் சாப்பிடப் பிடிக்கும். ஒட்டலுக்குப் போனால் கடல் உணவு ஐட்டங்களை ஒருபிடி பிடிப்பேன்."

"சினிமா பார்ப்பீர்களா?"

"ரொம்ப அபூர்வமாகப் பார்ப்பேன்."

"நீங்கள் ரொம்ப ரிசர்வ்டு டைப்பாமே?"

"எனக்கு நிறைய நண்பர்கள் கிடையாது. ஆனால் என் நண்பர்களுடன் ரொம்ப கலகலப்பாக இருப்பேன்."

"கிரிக்கெட் தவிர வேறு எதில் ஆர்வம்?"

"மியூஸிக். எல்லா டைப் மியூஸிக்கும்..."

"பத்தாண்டுகளுக்குப் பின் எப்படி இருப்பீர்கள்?"

"எனக்கு முப்பது வயதாகியிருக்கும். அப்போதும் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருப்பேன்." ◯

சந்திப்பு: கௌதம்



பங்களாதேஷின் தலைநகரமான டாக்காவில் சுமார் 10,000 பேர் சேர்ந்து ஒரு புதுமையான சங்கத்தை அமைத்துள்ளனர். இந்தப் பத்தாயிரம் பேரும் திருடர்கள்! திருட்டுத் தொழிலில் பயிற்சி அளிக்க இந்த சங்கம் ஒரு பயிற்சிப் பள்ளியை அமைத்துள்ளது. இதில் இது வரை 2000 பேர் சேர்ந்துள்ளனர். இதில் பிக்பாக்கெட்டுகள் உட்பட பலவகை திருடர்கள் உள்ளனர். வீடுகளைக் கொள்ளையிட வீட்டு வேலைக்காரர்களே உதவுகிறார்கள். அவர்களுக்கு கொள்ளையடித்த பணத்தில் குறிப்பிட்ட பங்கைக் கொடுத்து விடுகிறார்கள்.


ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்

– எஸ். ஆலன்

''நேத்து ஏன் சுரேஷ் பீச்சுக்கு வரலை? என்மேலே கோபமா?''

''அதெல்லாமில்லை! அதை சொல்லித்தான் தொலைக்கணுமா? சுண்டல் வாங்கக் காசு இல்லை, அதான்!''

– வடபழனி பாலு



நெக்குருகி, "யார் பாடியது?" என்று விசாரித்து, உடனே ஒரு 'பொக்கே' வாங்கி நம்மிடம் கொடுத்து "மறக்காமல் நித்ய ஸ்ரீயிடம் கொடுத்து, என் பாராட்டுக்களைச் சொல்லி விடுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.

இந்த முறை இலங்கையை எப்படியும் வென்றுவிடுவது என்கிற உறுதியில் இருக்கிறார் அஸார். பேசிய போது, 'கடந்த முறை இலங்கைக்குச் செல்லும்போது ஸ்ரீநாத், பிரசாத் இரண்டு போலர்களுமே இல்லை. இம்முறை பிரசாத்தும் அகார்கரும் இருப்பது ரொம்ப நம்பிக்கை தரும் விஷயம். இரண்டு பேருமே இடதுகை ஆட்டக்காரர்களுக்குப் பந்து வீசுவதில் வல்லவர்கள்!'' என்று ஜெயசூர்யாவை நினைத்துக் கொண்டே சொன்னார்.

சமீபத்தில் கென்யா, பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் 12 புதிய வீரர்களை அறிமுகப்படுத்திப் பார்த்தது ரொம்ப உபயோகம் என்று நினைக்கிறார் அஸார். அந்த மேட்ச்களில் சிறப்பாக ஆடிய இளைஞர்களுக்குக்கெல்லாம் இப்போது இலங்கை டூரில் சான்ஸ்!

"இவர்களைத் தவிரவும் சுமார் பத்துப் பேர் உள்ளூர் மேட்ச்களில் நன்றாக ஆடி வருவதை கவனிக்கிறேன். ஆனால், சர்வதேச அளவில் அவர்களின் பர்ஃபாமென்ஸ் எப்படி இருக்கும் என்று பார்க்க வேண்டும். உள்ளூரில் வெளுத்து வாங்கும் பலர், தேசிய அணிக்கு வந்தால் ஏனோ சொதப்பி விடுகிறார்கள். சற்று வலு குறைந்த நாடுகளுடன் ஆடும்போது அவர்களையெல்லாம் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்!'' என்றார் அஸார்.

அணி மேலாளராக வந்திருக்கும் வெங்கட் சுந்தரம், முன்னதாக உ.பி. அணியின் மேலாளராக இருந்தவர். முன்னாள் ஆட்டக்காரர். இந்த வருஷ ரஞ்சிப் போட்டிகளில் உ.பி. அணி பைனல் வரை வந்தும் அந்த அணியிலிருந்து ஒருவர் கூட இந்திய அணிக்குத் தேர்வு செய்யப்படாததால் மல்லுக்கட்டி சண்டை போட்டுக் கொண்டிருப்பவர். அவரைச் சமாதானப்படுத்தும் விதமாகத்தான் இந்திய அணியின் மானேஜர் பொறுப்பு வழங்கப்பட்டதாக ஒரு – அதான், வதந்தி.

வெங்கட்டிடம் இது பற்றிக் கேட்டால் கோபம் பிய்த்துக் கொண்டு வருகிறது, மனுஷருக்கு.

"அதையும் இதையும் முடிச்சுப் போட்டுப் பார்க்காதீர்கள். இரண்டுக்கும் எந்த 'லிங்க்'கும் இல்லை. உ.பி. வீரர்கள் புறக்கணிக்கப்பட்டதற்கான என் போராட்டம் தொடரும்," என்றார் காட்டமாக.

இளம் வீரர்கள் சங்வி, அகார்கர், கனிட்கர், ஹர்பஜன்சிங் எல்லாரும் பால் முகமும், டூரில் இடம் பெற்றாலும் டீமில் இடம் பெற வேண்டுமே என்கிற தவிப்பும் தீவிர எக்ஸர்ஸைஸ் போன்ற முன்னேற்பாடுகளுமாக இருக்க, எது பற்றியும் கவலைப்படாத சீனியர்கள் ஹாயாகச் சென்னையை ரவுண்ட் அடித்துவிட்டு, சிலோனுக்கு ஃப்ளைட் ஏறிவிட்டார்கள்.

— சிம்மம்

படங்கள் : உமா மணி

"நான் பாடினால் உதைப்பார்கள்!"



கிரிக்கெட்டர் ஸ்ரீகாந்த், ராஜ் டீ.வி.யில் வழங்கி வரும் "இந்திய கிரிக்கெட்டின் பொன்னான தருணங்கள்" ரொம்ப பாபுலராக உள்ளது. இந்த ஐடியா எப்படி வந்தது அவருக்கு?

"தாம்ஸன் டெலிவிஷன் நிறுவனத்துக்கு நான் கிரிக்கெட் ஆலோசகர். இந்திய விடுதலைப் பொன்விழா சமயத்தில், அவர்களுக்காக ஒரு டெலிவிஷன் தொடர் வழங்க விரும்பினேன். யோசித்தபோது, கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டில் நடந்துள்ள சாதனைகள் பற்றிச் சொன்னால் என்ன என்று தோன்றியது. அதன் விளைவுதான் ராஜ் டீவி தொடர்."

"கிரிக்கெட் மாட்ச் கிளிப்பிங்குகள் கிடைப்பதில் சிரமம் இருந்ததா?"

"எந்தெந்த மாட்ச்களின் கிளிப்பிங்குகள் வேண்டும் என்று லிஸ்ட் எடுத்துக் கொண்டு பி.பி.சி முதலிய நிறுவனங்களுக்கு எழுதினோம். சுலபமாய்க் கிடைத்து விட்டது!"

"ரொம்ப ஆசைப்பட்டு, கிடைக்காமல் போன மாட்ச் காட்சி ஏதாவது உண்டா?"

"ஜிம்பாப்வேக்கு எதிராக ஆடின மாட்ச்சில் கபில்தேவின் 175 நாட் அவுட் காட்சிக்காக ரொம்ப டிரை பண்ணினேன். அந்த மாட்சின்போது, சஸ்பென்ஸ் நிறைந்த அந்த ஒவ்வொரு நிமிடமும் என்னால் மறக்கவே முடியாது. அந்தக் காட்சி கிடைக்காதது எனக்குக் குறைதான்."

"உங்கள் கம்பெனி சார்பாக ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சிகள் மட்டுமே வழங்கப் போகிறீர்களா?"

"இப்போது இந்தியா ஆடிய மாட்ச்களை வைத்து கோல்டன் மொமன்ட்ஸ் வழங்குவதுபோல, இந்தியா இடம் பெறாத மாட்ச்களின் அடிப்படையில் ஒரு நிகழ்ச்சி வழங்கப் போகிறோம். அனுராதா ஸ்ரீராம் நடத்தும் அந்தாக்ஷரி ஒன்று ஒளிபரப்பாகப் போகிறது."

"உங்களுக்குப் பாடத் தெரியுமா?"

"எனக்கா? நான் பாடினால்... ஜனங்க உதைப்பாங்க. எனக்கு எது வருமோ, அதை மட்டும்தான் நான் செய்யணும்!" (சிரிக்கிறார் பலமாக)

"தமிழில் மட்டுமே நிகழ்ச்சி தயாரிக்கப் போகிறீர்களா?"

"கோல்டன் மொமன்ட்ஸ் ஆப் இந்தியன் கிரிக்கெட்டை, ஈநாடு டீ.வியில் வழங்கப் போகிறேன்."

"உங்களுக்குத் தெலுங்கு தெரியுமா?"

"அதற்குத்தான் நிகழ்ச்சி வழங்க வெங்கடபதிராஜுவைக் கூப்பிட்டிருக்கிறேன்." ●

- மௌலி

"சஸ்பென்ஸ் நிறைந்த அந்த ஒவ்வொரு நிமிடமும் என்னால் மறக்கவே முடியாது. அந்தக் காட்சி கிடைக்காதது எனக்குக் குறைதான்."

நான் உன்னை சுவாசிக்கிறேன்

25

காதல் டைரிக் குறிப்பு:

உன்னைவிட அழகிகளை தினம் சந்திக்கிறேன். ஆனால் உன்னிடம் தான் உருகுகிறேன். எனில்... அழகென்பது காதல்தானே?

பிரஸ் அலுவலகத்தில் டென்ஷனாக அமர்ந்திருந்தான் அரவிந்த்.

அடுத்த மேஜையில் சீனிவாசன் போனில் சொல்லிக் கொண்டிருந்தான், "கொஞ்சம் பொறுத்துக்கங்க சார். மெஷின்ல ஒரு சின்ன பிரச்னை, இன்னும் மூணு நாள்ல உங்க ஆர்டரை டெலிவரி செஞ்சிடறோம்."

அமைதியாய் இருந்த ஆஃப்செட் மிஷினையும் மிஷின் நபர்கள் டீ குடித்துக் கொண்டு அரட்டையடித்தபடி காகித பண்டல்கள் மேல் அமர்ந்திருப்பதையும் கண்ணாடிச் சுவர் வழியாகப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

"சார்" என்றான் போன் ரிசீவரை மூடிக் கொண்டு சீனிவாசன்.

"என்ன?"

"விஜயலட்சுமி டிரேடர்ஸோட ஆர்டர் நாளைக்குத் தர்றதா சொல்லியிருந்தோம். மூணு நாள் பொறுத்துக்க முடியாதாம். இன்னும் வேலை ஆரம்பிக்கலைன்னா ஸ்பெசிமெனை ரிட்டர்ன் பண்ணிடுங்கன்னு கோபமாப் பேசறார்."

"அந்த ஜாப் என்ன பொசிஷன்?"

"மேட்டர் நெகடிவ் எடுத்து பிளேட் போட்டு ரெடியா இருக்கு சார். மிஷின் ரெடியா இருந்தா நாலே மணி நேர வேலை."

"கொண்டா, நான் பேசறேன்."

ரிசீவரை வாங்கி பவ்யமாக, "வணக்கம் சார், நான் அரவிந்த் பேசறேன். சௌக்கியமா சார்?" என்றான்.

"ம்... ம்... என்ன சார் அவ்வளவு தூரம் கேட்டிங்கன்னு முதன் முதலா ஒரு ஆர்டர் கொடுத்தோம். டிலே ஆகும்னு சொல்றாரே உங்க ஆளு."

"அது... திடீர்னு மிஷின்ல ஒரு பிராப்ளம். நாளைக்கு சரியாயிடும் சார். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க. மிஷின் ரெடியானதும் முதல் வேலையா உங்க வேலைதான் ஓட்டச் சொல்லிருக்கேன்."

"அதெல்லாம் விடுங்க. நாளைக்குக் காலைல உங்களால டெலிவரி கொடுக்க முடியுமா, முடியாதா?"

"அதான் சொன்னனே."

"ஸாரி அரவிந்த். எங்க ஆர்டரை கேன்ஸல் பண்ணிடுங்க."

"சார், உங்க போஸ்டர் சைசுக்கு பேப்பர் வாங்கி கட் பண்ணி வெச்சாச்சு. பிளேட் கூட போட்டு ரெடியா இருக்கு. இந்த நிலைமைல கேன்ஸல் செஞ்சா எனக்கு நஷ்டமாயிடும்."

"நாளைக்கு எங்க போஸ்டர்ஸ் மார்க்கெட்டுக்குப் போகலைன்னா எங்களுக்கு நஷ்டம் வரும் சார். ஸ்கீம் அறிவிச்சிருக்கோம். டெட்லைன் தேதி இருக்கு. நாலு தடவை டெலிவரி தேதியை கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டதுக்கப்புறம்தானே நான் ஆர்டரே கொடுத்தேன்."

"கரெக்ட்டுதான். ஆனா..."


"ஸாரி சார். கோவிச்சுக்காதிங்க. பிஸினெஸ் தனியா இருக்கணும். நட்பு தனியா இருக்கணும். உங்க பிரச்னைக்காக நாங்க அட்ஜஸ்ட் பண்ண முடியாது. ஆர்டரை கேன்சல் செஞ்சிடுங்க."

லொடக்கென்று எதிர்முனை வைக்கப்பட்டது.

"என்ன சார் சொல்றாரு?"

"அவர் பிரச்னை அவருக்கு."

"நாலு நாள் ஆச்சி சார்



பிஷின் ஓடி. என்ன சார் செய்யப் போறோம்?''

"சர்வீஸ் பண்றதுக்கான பில்லை உடனே செட்டில் செய்யணுங்கறான். பணத்துக்கு ஏற்பாடு செஞ்சிட்டிருக்கேன். ஒரு லட்சம் ரூபா ஒரு இடத்தில மாட்டிக்கிச்சு. வாங்க முடியலை,'' என்ற அரவிந்த் போனை எடுத்து லால்சந்த் வீட்டு எண்ணை முயன் றான்.

"ஹலோ, வணக்கம்மா, நான் அரவிந்த் பேசறேன். நேத்து கூட போன் செஞ்சிருந் தேனே. சேட் ஊர்லேர்ந்து வந்துட்டாரா? தேங்க் காட்! வந்துட்டாரா? நான் போன் செஞ்சேன்னு சொன்னீங்களா? நான் இன்னும் அரை மணி நேரத்தில் ரொம்ப முக்கியமான விஷயமா அவரைப் பார்க் கணும். ஆபீசுக்கு வரணுமா இல்லை வீட் டுக்கு வரலாமான்னு கொஞ்சம் கேட்டுச் சொல்றீங்களா, நான் லைன்ல இருக்கேன்,'' என்றான். பதிலுக்குக் காத்திருந்தான்.

பீடாவைக் குதப்பியபடி லால்சந்த் சேட் இவன் சொன்னதை எல்லாம் பொறுமை யாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

கொண்டு வந்து வைக்கப்பட்ட டீயை எடுத்துக் கொள்ளச் சொல்லி சைகை காட்டி னார்.

எழுந்து சென்று வாயைக் கொப்புளித்து விட்டு வந்தார்.

அரவிந்த் பாதி டீயை வைத்துவிட்டு அவரை அமைதியாகப் பார்த்தான்.

"தம்பி, தப்பா எடுத்துக்காதீங்க. ஆரம் பிச்சி கொஞ்ச நாள்லயே இப்படி ஒரு பிரச் னைன்னு வந்து நிக்கிறீங்க. உங்களுக்கு இந்த பிசினெஸ்ல ராசி இல்லையோன்னு தோணுது. சில பேருக்கு சில பிசினெஸ்தான் செட்டாகும். இப்ப என் ஜாதகத்தையே எடுத் துக்கங்க. பணத்தாலதான்

பட்டுக்கோட்டை பிரபாகர்

லாபம்னு இருக்கு. மூணு வருஷம் முன்னாடி அதை மீறி லெதர் பிசினெஸ்ல இறங்கி னேன். செம அடி!"

"எனக்கு இதில எல்லாம்..."

"உங்க வயசுக்கு நம்பிக்கை வராது. என் அனுபவத்துக்கு பேசறேன். இப்ப மேற் கொண்டு பணம் கேக்கறீங்க. உங்ககிட்ட திறமை இருக்கலாம். ஆனா சனி பிடிச்சி ஆட்டிச்சின்னா யாரும் எதுவும் செய்ய முடி யாது. வேற வேற பிரச்னைகள் வந்துச் சின்னா எப்படி பிசினெஸ் பண்ணுவீங்க?"

"மிஷின் ரிப்பேராகறது இந்தத் தொழில்ல சகஜம் சார். இதுக்கு நான் சோர்ந்து போயி நம்பிக்கை இழக்கத் தயாரா இல்லை."

"சந்தோஷம். நான் கொஞ்சம் யோசனை செய்யணும். மத்தியானம் ரெண்டு மணிக்கு வர்றீங்களா?"

"கண்டிப்பா உங்ககிட்ட வாங்கின, இப்ப வாங்கற மொத்த கடனையும் திருப்பிக் கட்டிடுவேன். உங்களுக்கு அதில கவலையே வேணாம். இதெல்லாம் ஆரம்பப் பிரச் னைகள். சமாளிச்சி ரெகுலராக்கிட்டா எந்தப் பிரச்னையும் இருக்காது."

"நீங்க மத்தியானம் வாங்க" என்று எழுந்து கொண்டார் சேட்.

மதியம் மறுபடி சேட் வீட்டிற்குச் சென்றபோது வரவேற்பறையில் காத்திருக்கச் சொல்லப் பட்டான்.

வெளியே சென்றிருந்த சேட் வீட்டுக்கு இரண்டு மணி நேரம் கழித்துதான் வந்து சேர்ந்தார். வந்து இறங்கியதுமே டிரைவரை ஹிந்தியில் கடுமையாகத் திட்டினார்.

அரவிந்தின் வணக்கத்தைப் புறக்கணித்த அவரின் முகம் இறுக்கத்துடன் இருந்தது.

"தம்பி, நான் சினிமா தவிர வேற எந்த ப்ராஜெக்ட்டுக்கும் ஃபைனான்ஸ் பண்ற தில்லை. சந்துரு ரொம்ப வற்புறுத்தினதால தான் நான் உங்க ப்ராஜெக்டுக்குப் பணம் கொடுத்தேன்."

"தெரியுமே சார்."

"நான் ரொம்ப செண்டிமெண்ட்ஸ் பார்க் கறவன். உங்க தொழில்ல எடுத்ததுமே பெரிய பெரிய பிரச்னை வந்து நிக்குது. இப்ப ஓடாம நிக்கிற மிஷினை நீங்க ஓட்டியாகணும். அத னால நம்பிக்கையாத்தான் பேசுவீங்க. பேசி யாகணும். ஆனா எனக்கு நம்பிக்கை போய் டுச்சி. இந்தத் தொழில் உருப்பட்டு பேசின படி கரெக்டா அசலும் வட்டியும் நீங்க திருப்பிக் கட்டுவீங்களான்னு எனக்கு இப்ப சந்தேகமா இருக்கு."

"சார்... நான் நாணயஸ்தன்!"

"உங்க நாணயத்தை நான் தப்பாச் சொல் லலை தம்பி. சூழ்நிலை சதி பண்ணிடுச் சின்னா யாரும் எதுவும் செய்ய முடியாது. ஆரம்பமே அபசகுனமா இருக்கே..."

"சார்... நான்...."

"நான் சொல்லி முடிச்சிடறேன். நான் எதையும் சொல்றதுக்கு முன்னாடி பத்து தடவை யோசிப்பேன். அப்படி யோசிக்கிற துக்குத்தான் உங்ககிட்ட அவகாசம் வாங் கிட்டு மறுபடி வரச் சொன்னேன். யோசிச்ச தில எனக்கு இந்த ப்ராஜெக்ட் தேறும்னு தோணலை. மேற்கொண்டு இதில காசு கொடுக்க மனசு வரலை தம்பி."

"ரைட் சார். நான் வேற யோசனை பண்ணிக்கிறேன்."

"இருங்க. அந்த வேற யோசனையை நானே சொல்லிடறேன்."

"என்ன சார்?"

"ஏற்கெனவே அந்த மிஷினை என் பேர்ல தான் வாங்கிருக்கோம். இடத்துக்காரருக்கு கொடுத்திருக்கிற அட்வான்ஸ் கணக்கு பண்ணிக்கலாம். அந்த அக்ரிமெண்ட்டும் பேர் மாத்திடலாம். ஆபீஸ் தளவாட சாமான்கள் எவ்வளவு செலவு செஞ்சிருக் கிங்கன்னு கணக்குப் போட்டுச் சொல்லுங்க, ஒரு செட்டில்மெண்ட்டுக்கு வந்துடலாம்."

"சார், எனக்கு எதுவும் புரியலை. என்ன சொல்றீங்க?"

"என்ன புரியலை? இப்ப இருக்கிற இந்த நிலைமையோட பிரஸ்லை அப்படியே என் கிட்ட ஒப்படைச்சுட்டு நீங்க விலகிடுங் கன்னு சொல்றேன். நான் ஆள் வெச்சி பார்த்துக்கறேன். இல்லை விலைபேசி வித்துக்கறேன்."

"சார்!" பதறப் போனான் அரவிந்த், "என்ன சார் இப்படிப் பேசறீங்க? இந்தத் தொழிலை ஆரம்பிக்கணுங்கறது என் எத் தனை வருஷக் கனவு தெரியுமா?"

"என் பையன் கிட்டே ஜாதி மத பேதம் கூடாதுன்னு சொன்னது தப்பா போச்சு!"

"என்ன ஆச்சு?"

"ஒவ்வொரு ஜாதியிலும் ஒரு பெண்ணை லவ் பண்ணறான்!"

– ராதா வாசுதேவன்

"கனவு மட்டும் இருந்தால் போதுமா தம்பி? காசு வேணாமா? நாலு நாளா உன்னோட கனவை சும்மா துருப் பிடிக்கப் போட்டு வெச்சிருக்கியே..."

"மேற்கொண்டு கடன் கேட்டது உங்களை அப்செட் செஞ்சிடுச்சின்னு நினைக்கிறேன். அதுக்காக அவசரப்பட்டு இப்படியெல்லாம் பேசாதீங்க."

"தம்பி, பேங்க்ல லோன் தர்றதா இருந்தாக்கூட உன் பங்கா குறிப்பிட்ட சதவீதம் பணம் போடச் சொல்வான். இந்த பிரஸ் ஆரம்பிச்சதில உன் பணம் எவ்வளவுப்பா போட்டிருக்கே?"

"அது... வந்து..."

"முழுக்க என் பணம்தானே? இப்ப எனக்கு இஷ்டமில்லைன்னு சொன்னா பிரச்னை பண்ணாம விலகிக்கறதுதானே சரி."

"ஆறு மாசத்துக்கு அசல், வட்டி எதுவும் திருப்பித் தர முடியாதுன்னு நான் சொல்லி



நீங்களும் ஒத்துக்கிட்டீங்களே... அக்ரிமெண்ட்ல கூட அப்படித்தானே எழுதி கையெழுத்து போட்டிருக்கோம்? இப்ப திடீர்னு பிசினெஸை விட்டுடுன்னு சொன்னா எப்படி சார்?"

"முதல் தவணைகூட கட்டாம மறுபடி கடனுக்கு வந்து நிப்பேன்னு அக்ரிமெண்ட்ல போட்டிருக்கியா தம்பி? அக்ரிமெண்ட்படி ஆறு மாசம் வரைக்கும் நான் காசு கேக்கக் கூடாதுன்னு சொல்றே, சரி. ஆறு மாசத்தில உன்னால எந்தப் பிரச்னையையும் சரி செய்ய முடியலைன்னா அப்போ என்ன சொல்றது? மிஷின் இன்னும் தேய்மானமாகி இன்னும் குறைஞ்ச ரேட்டுக்குத்தானே போகும்? உனக்கு உதவி பண்ண நினைச்சதுக்காக நான் நஷ்டப்படணுமா?"

"பேசினபடி நான் திருப்பிக் கட்ட மாட்டேன்னு ஏன் அழிச்சாட்டியமாப் பேசறீங்க?"

"எனக்கு நம்பிக்கை போயிடுச்சி. ஒரு தொழில் டீலிங்ல நம்பிக்கை போனதுக்கப்புறம் எதுவும் தொடரக் கூடாதுன்னு என் பாலிசி. எனக்குப் பிடிக்கலைன்னா விட்டுடுங்க. ரெண்டு நாள்ல எல்லாம் கணக்குப் போட்டு செட்டில் பண்ணிடுங்க."

"எப்படி சார்?"

"தம்பி, சந்துருவுக்கு நண்பர் நீங்க. அதனால இதமா பதமா பொறுமையா பேசிட்டிருக்கேன். இல்லைன்னா என்னோட அணுகுமுறையே வேற! மனசுக்குப் பிடிக்கலைன்னா விட்டுடணும். சும்மா மறுபடி பேசிப் பேசி வெறுப்பேத்தக் கூடாது. புரிஞ்சுதா?"

சேட்டின் குரலில் மிரட்டல் இருந்தது.

அரவிந்திற்கு அந்த அதிர்ச்சி மனமெங்கும் வியாபித்து பல மடங்கு பெருகிக் கொண்டிருந்தது.

உதவி செய்வார் என்று நினைத்து வந்தால் பிரச்னையை பூதாகரமாக்கி விட்டாரே!

எல்லாம் ஒப்படைத்து விட்டு விலகிவிடு என்கிறாரே...

இதற்காகவா இத்தனை மெனக்கெட்டேன்? இதற்காகவா உறவுகளை விட்டு வெளியே வந்து போராட்டம் துவங்கினேன்? ஊரில் தெரிந்தவர்களை எல்லாம் அழைத்து விழா நடத்தி தொழில் துவங்கி விட்டு கொஞ்ச நாளிலேயே மறுபடி பழைய நிலைக்குத் தள்ளப்படுவதென்றால்... எத்தனை அவமானம் இது!

யாரையாவது நிமிர்ந்து பார்க்க முடியுமா?

அரவிந்தை பய மேகம் சூழ்ந்தது.

"சார். இப்படியெல்லாம் அவசரப்பட்டு நீங்க..." வார்த்தைகள் நடுக்கத்துடன் வெளி வந்தன.

"தம்பி, கணக்கை ஒப்படைச்சிட்டு நகர்ந்துடுன்னு சொல்றேன், முடியாதா? இன்னொன்னு செய்யி! என்னை மாதிரி வேற எங்கயாச்சும் பணத்துக்கு ஏற்பாடு செய்யி. என்கிட்ட வாங்கின தொகையை பைசா பாக்கியில்லாம ஒரே வாரத்தில் செட்டில் செஞ்சிடு. நீயே தாராளமா நடத்து. எனக்குத் தொழில் வேணாம். காசுதான் முக்கியம். இந்த ரெண்டுல ஒரு முடிவை எடு! இல்லைன்னா நானே வேற விதமா செயல்பட்டு இந்த விவகாரத்தைத் தீர்த்துக்குவேன்."

பதறிப் போன அரவிந்த், "அப்படியெல்லாம் சொல்லாதீங்க சார். ப்ளீஸ்.... சார்..." என்றவன் சட்டென்று சேட்டின் கால்களில் கண்கள் கலங்க விழுந்து விட்டான்.

(தொடரும்)

நிவேதிதா... ஓ, நிவேதிதா!

நிவேதிதா - அண்மையில் மாடியிலிருந்து கீழே விழுந்து அடிபட்டு, கோமா நிலையை அடைந்து, நினைவு திரும்பாமலேயே மரணத்தைத் தழுவிய கன்னட நடிகை. அவர்தான் அர்ஜுன் நடித்து, இயக்கும் தாயின் மணிக்கொடி படத்தின் கதாநாயகி. படத்தின் ஷூட்டிங் முடிந்து, இப்போது டப்பிங் நடக்கிறது.

சுஜாதா டப்பிங் தியேட்டரில், தா. மணிக்கொடி படத்தின் டப்பிங் பேசிக் கொண்டிருந்த அர்ஜுனைச் சந்தித்தபோது, சோகம் பொங்க, லேசாய் கண் கலங்க, நிவேதிதா பற்றிச் சொன்னார்:

"ரொம்ப இன்டலிஜென்ட் பொண்ணு சார்! அவரோட அப்பா மிலிடரியில பணியாற்றியவர். அவர், என் பிரதருக்குத் தெரிந்தவர். என்னோட தாயின் மணிக்கொடியில் ஒரு சூப்பர் கேரக்டர். என் கேரக்டரை விட, அந்தப் பெண் மேல்தான் படம் பார்க்கிறவர்களுக்கு அனுதாபம் வரும்! அப்படி ஒரு அழுத்தமான கேரக்டர்! அதுக்கு சரியான நடிகையைத் தேடினபோது, என் பிரதர் நிவேதிதா பற்றிச் சொன்னான். 'ஆனா, அவங்க நல்ல உயரம்; உனக்கு ஜோடியா எடுபடுமான்னு சந்தேகம் தான்' என்றான். நான் நிவேதிதாவை நேரே சந்திச்சேன். என் படத்தின் கேரக்டருக்கு ரொம்பப் பொருத்தமாக இருப்பார் என்று தோன்றவே, உயரம் ஒரு பிரச்னை இல்லை என்று விட்டு விட்டேன்.

"கலகலப்பு, கிண்டலுக்கும் குறைவில்லை. ஒரு காட்சி எடுத்தவுடன், டைரக்டர் என்கிற முறையில், 'ஷாட் நல்லா வந்திருக்கா?' என்று கேட்டால் கிண்டலாய் 'இப்ப ஓ.கே. ஆனா மொத்தத்துல டைரக்ஷன் எப்படின்னு, முதல் காப்பி வரட்டும். பார்த்துவிட்டு சொல்றேன்!" என்று கிண்டல் செய்வார்.

"அதே நேரம், ஆழ்மனம், தியானம் போன்ற அசாதாரணமான விஷயங்களைப் பத்தியெல்லாம் விரிவாக அலசுபவர். எப்போ பார்த்தாலும், ஏதாவது படிச்சுக் கிட்டே இருப்பார்.

"விடை பெறும்போது, யாராவது 'போய் வருகிறேன்' என்றால், இல்லை... இல்லை... ஸீ... யூ என்று சொல்லுங்கன்னு சொல்லுவார். அடிபட்டு, ஆஸ்பத்திரில இருந்தபோது நான் போய்ப் பார்த்தேன். ரொம்பப் பரிதாபமா இருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்டபோது, எனக்கு அதுதான் நினைவுக்கு வந்தது. கண் கலங்கிட்டேன்.

"தாயின் மணிக்கொடி படத்துல, அந்தப் பெண் இறந்து போகிற மாதிரி ஒரு காட்சி வரும். அந்தக் காட்சியின் டப்பிங் நடந்த அன்று மாலைதான் நிவேதிதாவின் மரணச் செய்தி வந்தது. ஆடிப் போய் விட்டேன். கலகலப்பான அந்தப் பெண்ணின் சடலத்தைப் பார்க்கிற சக்தி எனக்குக் கிடையாது. அதனால்தான் டெலிபோனில் அவரது அப்பாவுடன் பேசினேன். நேரே போகாமல் தவிர்த்து விட்டேன்.



"முதல் தமிழ்ப் படத்தில், தன் நடிப்பைத் திரையில் பார்க்காமல் நிவேதிதா போய் விட்டதில் எனக்கு ரொம்ப வருத்தம்!"

— பாரதி

நிதி நிறுவன மோசடிகள்:

1996-ல் கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்கள் பூட்டை அழுத்திப் போட்டுப் பூட்டி, மூடிவிட்டு ஓடிய வயிற்றெறிச்சலை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இந்தப் போலி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 20,000 டெபாஸிட்டர்களின், 197 கோடி ரூபாய் முடக்கப்பட்டிருந்தது என்பது மூச்சு முட்டும் தகவல்.

"நான் ஒரு லட்சம் போட்டிருந்தேனே பொண்ணு கல்யாணம் பண்ண" என்ற சோகக் கதையிலிருந்து அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுப் போட்டு, ஏமாந்து போனவர்கள் வரை லிஸ்டில் உண்டு.

வழக்கப்படி போலீஸ், மோசடி கேஸ் பதிவு செய்து முதலாளிகளைக் கைது செய்து உள்ளே அடைத்தது. டெபாஸிட்டர்கள், பனகல் பார்க்கிலும், ஜீவா பார்க்கிலும் கூடிப் பேசி, கூடிப் பேசி... பேசினார்கள்.

வழக்கமான நீதிமன்ற நடவடிக்கைகளின் படி செயல்பட்டால் இந்த ஜென்மத்துக்கு விடிவு காலம் வரப் போவதில்லை என்பதை உணர்ந்த அவர்கள் 'நிதி நிறுவன மோசடிகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார்கள்.

தி.மு.க. அரசும், அதற்கான நடவடிக்கையில் இறங்கியது. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்று கெஜட்டில் வெளியிடப்பட்ட பின்தான் அந்த அதிர்ச்சித் தகவல் டெபாஸிட்டர்களைத் தாக்கியது. தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சட்டப்படி அமைக்கப்பட்ட தனி நீதிமன்றம், 1997-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 7ம் தேதிக்குப் பின் நடக்கும் மோசடிகளைத்தான் விசாரிக்கும் என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்!

ஏனென்றால் அந்தத் தேதியிலிருந்துதான் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறதாம்!

பாவம் டெபாஸிட்டர்கள். அங்கே இங்கே ஓடினார்கள். தலைமைச் செயலகம் மற்றும் சட்டத்துறையின் கதவைத் தட்டினார்கள். அப்புறம் என்ன நடந்தது? சொல்கிறார் தமிழ்நாடு டெபாஸிட்டர்கள் சங்கத் தலைவர் டி.ஆர். சீனிவாசன்:

"**ஸ்**பெஷல் கோர்ட் வருவதற்கான சட்டம் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறுவதற்காக நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அரக்கோணத்தில் இருந்த ஜனாதிபதியின் சகோதரி



முதற்கொண்டு டெல்லி வரை சென்று, விரைவுபடுத்தினோம். ஆனால் சட்டம் கெஜட்டில் வந்தபோது எங்களுக்கு பயங்கர ஷாக். 1997ம் வருடம் ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு பெரிய நிதி நிறுவனங்களில் மோசடி அவ்வளவாக நடைபெறவில்லை. 1995-96ம் ஆண்டுதான் மேக்ஸிமா, ஸ்நேகம், ஈஸ்வரி என்று பெரிய நிறுவனங்களின் தில்லு முல்லுகள் அம்பலம் ஆனது. தனி நீதிமன்றம், இந்த நிறுவனங்களின் வழக்கை விசாரிக்க முடியாது என்றால் அந்த நீதிமன்றமே அவசியமில்லை! கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் 'ஸ்வாஹா' ஆகியிருக்கிறது. அதில் சிறிதேனும் மீட்டு டெபாஸிட்டர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் விரைவாக விசாரிக்கும் தனி நீதிமன்றம்தான் தேவை. வழக்கமான கோர்ட் என்றால் போட்ட

பணத்தில் சிறிதேனும் வரும் என்ற நினைப்பைக் கூட மூட்டை கட்டி வைத்து விடலாம்" என்கிறார் சீனிவாசன்.

எதற்காக, யாருக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அவர்களுக்கு பயனளிக்காத நிலை. இதில் ஏதாவது வஞ்சகம், சூழ்ச்சி இருக்கலாம் என்று சந்தேகிக்கிறார்கள் டெபாஸிட்டர்கள். பெரும்பாலான மூடப்பட்ட நிதி நிறுவனங்கள் அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவை.

இவை, 1996 தேர்தலில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல் நன்கொடைகளை வாரி வழங்கின. எனவே டெபாஸிட்டர்களின் சந்தேகம் வலுக்கிறது. பிடிபட்ட நிதி நிறுவன அதிபர்கள் இப்போது ஜாம் ஜாம்மென்று வெளியில் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் புதிய நிறுவனங்கள் துவங்க இருக்கிறார்களாம்!

'தம்பிடிக்கு உதவாத தனிநீதிமன்றம்!

• சீனிவாசன்



பணம் போன அதிர்ச்சியில் கிட்டத்தட்ட 100 டெபாஸிட்டர்கள் மரணம் அடைந்துவிட்டதாகச் சொல்கிறார் சீனிவாசன். தனி நீதிமன்றமும் தன் பங்குக்கு 7.8.97க்கு அப்புறம் நடந்த சிறிய மோசடிகளை விசாரிக்கத் துவங்கி விட்டதாம்.

"இந்த சட்டமும், தனி நீதிமன்றமும் எங்களுக்குப் பயன்படாத நிலையிலிருப்பதை முதல்வரைச் சந்தித்து எடுத்துச் சொல்ல முயன்றோம். கோட்டையிலும், கோபாலபுரத்திலும், அறிவாலயத்திலும் கூட எங்களால் சந்திக்க முடியவில்லை. ஆந்திராவில் முதல்வர் நாயுடு, தேவி கோல்டு ஹவுஸில் பணம் கட்டி ஏமாந்த டெபாஸிட்டர்களின் பணத்தைத் திருப்பி வாங்கிக் கொடுத்திருக்கிறார். அந்த அளவுக்கு நாங்கள் எதிர்பார்க்காவிட்டாலும், குறைந்தபட்சம் மோசடி நிறுவனங்களின் வழக்குகளை தனி நீதிமன்றம் விசாரிக்கும்படி ஏற்பாடு செய்தால் போதும்" என்றார் சீனிவாசன். ஆனால் இது சுலபமான வேலையில்லை என்றும் அதற்குச் சட்டத்திருத்தம் தேவை என்றும் சொல்கிறார்களாம். இது பற்றி சட்ட அமைச்சர் ஆலடி அருணாவிடம் விசாரித்தோம்.

"அரசியல் சட்டப் பிரிவு 20, மற்றும் அதன் உட்பிரிவுகளின்படி ஒரு குற்றம் நடைபெறும்போது எந்தச் சட்டம் நடைமுறையிலுள்ளதோ அதன்படிதான் குற்றம் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்க வேண்டும். முன் தேதியிட்டு நீதிமன்ற சட்டங்களை அமுல் நடத்த முடியாது. இந்த நிலை மாற வேண்டுமென்றால் அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வர வேண்டும். டெபாஸிட்டர்களின் பரிதாப நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் சாதாரண நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரித்து டெபாஸிட்டர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு விரைந்து செயல்படும்" என்றார் அமைச்சர். மோசடி நிறுவனங்களின் அசையும், அசையாத சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதால் டெபாஸிட்டர்கள் கவலைப்பட வேண்டியதில்லை" என்கிறார் அமைச்சர்.

எங்கே போய் முட்டிக் கொள்வது என்ற நிலையில் டெபாஸிட்டர்களின் வாராந்திரக் கூட்டம் பனகல் பார்க்கிலும், ஜீவா பார்க்கிலும் தொடர்கிறது.

— கௌசி



காதில் விழுந்தவை :

அம்மா அப்செட்!

●● சென்னை ஓட்டேரியில் பொடிக் கடை என்ற ஒரு பஸ் நிறுத்தம் இருக்கிறது. மார்வாடி ஒருவர் பல வருடங்களாக அங்கே வட்டிக் கடை நடத்தி வருகிறார். ஒயின் கடையை பினாமியில் எடுத்த அந்தக் கழக எம்.எல்.ஏவுக்கு வட்டிக் கடை மீது பார்வை விழுந்து விட்டது. அந்த இடத்தில் ஒயின் ஷாப் இருந்தால் வியாபாரம் சக்கைப் போடு போடும் என்பது அவர் கணிப்பு. மார்வாடியைக் கூப்பிட்டார். பிரம்பால் அடிக்காத குறையாக அவரை மிரட்டி அந்த இடத்தைக் காலி செய்ய வைத்து விட்டார். "தேர்தலின்போதெல்லாம் ஏகப்பட்ட நன்கொடை கொடுத்தும் நமக்கே ஜின்ஜர் கொடுக்கிறார்களே!" என்று அந்த மார்வாடி புலம்பிக் கொண்டிருக்கிறார்.

●● அ.தி.மு.க. – ம.தி.மு.க. உறவுப் பாலத்தில் விரிசல் விட்டுக் கொண்டே போகிறது. கொள்கைரீதியாக 356ஐ ம.தி.மு.க. எதிர்ப்பதால் அம்மாவுக்குக் கோபம். "நாங்கள் நீண்ட நாள் அரசியலைப் பார்க்கிறோம். திராவிட இயக்கங்களுக்கு எதிர்கால வழிகாட்டி வை.கோ.தான். இப்போது தி.மு.க.வில் இருப்பவர்கள், ஒரு கட்டத்தில் அவரது தலைமையை ஏற்றுச் செயல்பட்டே ஆக வேண்டும். இப்போது தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கத் துணைபோவதால், கழக உடன்பிறப்புக்களின் வெறுப்பைத்தான் சம்பாதிக்க வேண்டியிருக்கும்" என்று சொன்னார் மாநில ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர். சிங்கப்பெருமாள் கோயிலில் கிட்டத்தட்ட 500 இளைஞர்களுக்கு குருகுல ஸ்டைலில் மூன்று நாள் பயிற்சி முகாம் நடத்தி முடித்த உற்சாகத்தில் இருக்கிறார் வை.கோ. இதற்கிடையில் மத்திய அமைச்சரவையில் சேருவது பற்றி வை.கோ. சாதகமான முடிவை எடுப்பார் என்று எதிர்பார்க்கிறார் தேசிங்குராஜன் ஊர்க்காரர்.

●● விவசாயிகளுக்காக நடத்திய பேரணியும் ஆர்ப்பாட்டமும் பிசுபிசுத்துப் போனதில் ரொம்பவும் அப்செட் ஆகி விட்டார் அம்மா. "சட்டம் – ஒழுங்குப் பிரச்னை கிளப்பத்தானே பேரணியை ஏற்பாடு செய்தோம். ஒன்றும் நடக்கவில்லையே!" என்று சொல்கிறாராம். ஆனால் அ.தி.மு.க. எதிர்பார்க்காதது என்னவென்றால் பேரணிக்கு இரண்டு நாட்கள் முன்னர் முக்கியப் புள்ளிகளைத் தடுப்புக் காவல் சட்டப்படி கைது பண்ணி விடுவார்கள் என்பது. பேரணி அன்று 'கலவரப்' புள்ளிகள் உள்ளே இருந்ததால்தான் அந்த அளவுக்கு அமைதி காக்கப்பட்டதாம். இதற்கிடையில் வக்கீல்கள் விஷயத்தில் தாங்கள் நினைத்தபடி நடந்திருப்பதாக மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள் அ.தி.மு.க.வினர். "அன்றைக்கு விஜயனும், சண்முகசுந்தரமும் தாக்கப்பட்ட போது போய்ப் பார்க்கவில்லை. இன்று ஏதோ கையில் சிறு காயம் பட்டவரைச் சென்று பார்க்கிறார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? என்று கேட்கிறார்கள் விஷயம் தெரிந்தவர்கள். ◉

— தில்லப்பா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

வீட்டில் ஒரு 'டாக்டர்'!

கல்கி

KALKI
28.6.98

இலவச
இணைப்பு



வீட்டில் ஒரு 'டாக்டர்'!

ஒரு சமயம் நாவலாசிரியை லக்ஷ்மியுடன் ஒரு விருந்தில் கலந்து கொண்டோம். உடன் இருந்த ஒரு பிரபல எழுத்தாளருக்கு 'விருந்தின் சிரமம்' ஏற்பட்டது. 'நிறையச் சாப்பிட்டு விட்டதனாலா... என்ன செய்வது?' என்று அவர் திணறியபோது, லக்ஷ்மி சொன்னது: "ஒண்ணும் பயப்படாதிங்க... கொஞ்சம் சீரகத்தை எடுத்து வாயிலே போட்டு நல்லாக் கடிச்சு மெல்லுங்க... சரியாயிடும்" என்று சொல்லி, அந்த வீட்டிலிருந்தே கொஞ்சம் சீரகம் கேட்டு வாங்கிக் கொடுத்து மெல்லச் சொன்னார். மிகவும் சிக்கனமான, கைகண்ட மருந்து அது!

இன்னொரு பிரபல எழுத்தாளர் நா. பார்த்தசாரதி

பற்களைப் படு சிரத்தையோடு பாதுகாத்துக் கொள்கிறவர். எங்கேயாவது– அது வீடா கட்டும் வெளியே ஹோட்டல்களாகட்டும்–காப்பி, தேநீர் தம்ளர்களுடன் உடனடியாக அரை தம்ளர் தண்ணீரும் வேண்டும்.. காப்பி, தேநீர் சாப்பிட்டுவிட்டு, உடனே தண்ணீரால் வாய்க் கொப்புளித்து விடுவார். நாமெல்லாம் கொஞ்ச நேரம் காப்பியின் சுவையும் மணமும் நாக்கிலேயே சுழன்று கொண்டிருக்க வேண்டும் என்போம். தேநீரை மிகவும் விரும்புகிற நாபாவுக்கு, அந்தச் சபலமெல்லாம் கிடையாது. வாயைக் கொப்பளிப்பதால் சர்க்கரை படியாது, கிருமிகள் வளராது என்கிற திடமான நம்பிக்கை அவருக்கு!

இவையெல்லாம் சாதாரணமான, செலவில்லாத கை வைத்தியங்கள். படிப்பறி





வில்லாத நமது வீட்டுப் பாட்டிகள் முன்பெல்லாம் இதுபோல் எத்தனையோ மருத்துவ முறைகளைக் கையாண்டதுண்டு. உலகத்தையே ஒரு மாத்திரை வடிவில் அடக்கிவிட முயல்கிற நவீன மருத்துவ அறிவியல் யுகத்தில் இந்தக் கை வைத்தியங்களைப் பலர் நம்புவதுமில்லை, பின்பற்றுவதுமில்லை. அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் ஏதாவது ஒரு 'ஹெவி ஆண்டி பயாடிக்' மட்டும்தான். மாத்திரையை விழுங்கியவுடனேயே பலன் தெரியவேண்டும்.

நமது இந்த இலவச இணைப்பில், மறந்து போன கைவைத்திய முறைகள் சிலவற்றைத் தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சியடைகிறோம். முன்பெல்லாம் சிறுசிறு நூல்களாகக் கைவைத்திய முறைகள் பற்றி நிறைய வெளிவந்திருக்கின்றன. இப்போதும் கூட இயற்கை மருத்துவம், மூலிகை மருத்துவம் பற்றியெல்லாம் நல்ல நூல்கள் நிறையவே வெளிவருகின்றன. ஆனால் அவை மிகவும் ஆழமானவை.

விவரங்கள் தெரிந்து கொள்ள மட்டும் உதவும். ஆனால் இந்தச் சிறு வெளியீடு... தைரியமாகப் பின்பற்றக் கூடிய சில கை மருத்துவ முறைகளை விளக்குகிறது. சொல்லப் பட்டுள்ள மருந்துப் பொருட்களும் சுலபத்தில் கிடைக்கக் கூடியவை.

வயிற்றுப் போக்கு நிற்க:

பாதி பழுத்த நிலையிலுள்ள வில்வக் காய்களை ஓட்டோடு துண்டாக்கி உடைத்து வெயிலில் நன்றாய்க் காயவைக்க வேண்டும். பின்னர் அதை இடித்துத் தூய வெள்ளைத் துணியில் சலித்து, அந்தப் பொடியை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சீத பேதி, கடும் வயிற்றுப் போக்கு ஏற்படுகிற போது இந்தப் பொடியை ஒரு டேபிள் ஸ்பூன் அளவு எடுத்துத் தண்ணீரில் கொதிக்க வைத்துக்





கூழ் பக்குவத்தில் எடுத்து ஆறியபின் பருக, நல்ல குணம் கிடைக்கும்.


ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, மாதுளை போன்ற பழங்களை விட அதிகம் ஊட்டச் சத்துடையது சிவன் கோவில்களில் வளர்க்கப்படுகிற வில்வப் பழம். பீஹார் மாநிலத்தில் தெருவோரங்களில் வண்டிகளில் பெரிய பெரிய வில்வப் பழங்களை அடுக்கி வைத்துக் கொண்டு நம்மூர்க் கரும்புச்சாறு விற்பவர்களைப்போல் வில்வப் பழ சர்பத் விற்கிறார்கள். குளுமை தருகிற நல்ல கனி இது.

மலச்சிக்கல் அகலவும், சுறுசுறுப்பு அதிகமாகவும் கூட வில்வப் பழ சர்பத் உதவுகிறது.

வில்வப் பழத்தைச் சிறிதளவு பாலில் கலந்து கொஞ்சம் மிளகுத்தூள் சேர்த்து இரவில் உணவுக்குப் பிறகு சாப்பிட்டால் மூல நோய் குணமாகும். தாது விருத்தி ஏற்படும்.

● வயிற்றுப் போக்கு குணமாக இன்னும் ஒரு மருந்து: மாதுளைப் பழத்தின் தோலை தண்ணீரில் போட்டுத் தண்ணீர் பாதியாகச் சுண்டிப் போகும்வரை கொதிக்க விட வேண்டும். இந்த நீரைப் பருகினால் குணம் கிடைக்கும். சிலர் மாதுளம் பிஞ்சையும் உலரவைத்துப் பொடியாக்கி இதுபோல் கஷாயம் செய்து





தருவார்கள்.

வயிற்றில் பூச்சிகள் அகல:

பப்பாளிப் பழம் சாப்பிடலாம். இது உஷ்ணப் பொருள், கருக் கலைக்கும் என்று தவறாகச் சொல்லப்படுகிறது. மிகவும் அதிகமாக ஊட்டச் சத்துக்கள் நிறைந்த பழம் பப்பாளி.

- மாதுளம் பழத்தோலை நன்றாக உலர வைத்துப் பொடியாக்கித் தண்ணீரில் கரைத்துப் பருகினால் வயிற்றுப் பூச்சி, குடல் பூச்சிகள் அகலும்.
- வேப்ப இலைக் கொழுந்தை எடுத்து ஒரு உப்புக் கல் வைத்து

அம்மியில் விழுதாக அரைத்து ஒரு சிறு நெல்லிக்காய் அளவு வெறும் வயிற்றில் விழுங்க வேண்டும். (மின் சாரத்தில் இயங்குகிற மிக்ஸி வேண்டாம்). தயிரில் இந்த விழுதைக் கலந்தும் பருகலாம். பூச்சி அகலுவ தோடு பெண்ணுக்கு ஏற்படக் கூடிய வயிற்று வலியும் போகும்.



தலைவலி நீங்க:

உடனடியாக நிவாரணம் பெற வேண்டுமானால் பச்சைத் தண்ணீரில் தலை குளிக்க வேண்டும். ஆனால் பலருக்கு இப்படிச் செய்ய தைரியம் வராது.

- மருந்து என்கிற முறையில் வேப்பமரத்தின் பட்டையைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து, அந்தக் கஷாயத்தை இரண்டு டேபிள் ஸ்பூன் அளவு பருக வேண்டும்.
- யூகலிப்டஸ் இலை, நொச்சி இலை இவற்றில்

ஏதாவது ஒன்றைத் தண்ணீரில் இட்டுக் கொதிக்கும்போது மேலே வரும் ஆவியை சுவாசிக்கலாம்.

● இஞ்சியை மஞ்சள் அரைப்பது போல் தண்ணீர் விட்டு அரைத்து விழுதைக் கொதிக்க வைத்து! வலி ஏற்பட்டுள்ள பகுதியில் வெளிப் பூச்சாகப் பூசலாம். இதே போல் காவிக்கட்டி கிடைக்குமானால் அதையும் அரைத்துச் சூடாக்கிப் பூசலாம். தலைவலி பறந்து விடும்!

உடல் சூடு தணிய:

வெந்தயம் ஓர் அருமருந்து. இரவு படுக்கப் போகும் முன் ஒரு தேநீர்க் கோப்பையில் பாதியளவு காய்ச்சி ஆறிய பாலை எடுத்து அதில் ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை இட்டுக் கொஞ்சம் தயிரை ஊற்றி வைத்து விடவும். (பிரிட்ஜில் வேண்டாம்). காலையில் வெந்தயமும் ஊறித் தயிரும் உறைந்திருக்கும். வெறும் வயிற்றில் இந்த வெந்தயத் தயிரைச் சாப்பிட, உடல் வெப்பம் தணியும்.

● நீர்க் கடுப்பு ஏற்படுகிற போது சிறிதளவு ஜீனியில் கொஞ்சம் நெய் சேர்த்துச் சாப்பிடலாம். இது வயிற்றுக் கடுப்புக்கும் குணம் தருகிற கை மருந்து.

தலைப் பேன், பொடுகு அகல:

பேன் பொடுகுகளுக்கு ஜன்ம



விரோதி துளசிதான்! துளசியில் இரண்டு வகை உண்டு. காரம் கூடுதலான வகை கருந் துளசி என்னும் கிருஷ்ண துளசி. வெள்ளை நிறமான துளசியை சிவதுளசி என்பார்கள்.

கருந்துளசி இலைகளை ஒரு கையளவு பறித்துச் சுத்தப்படுத்தித் தலையணையின் மீது பரப்புங்கள். அதன் மீது ஒரு வெள்ளைத் துணியை விரித்துத் தலைவைத்துப் படுக்கலாம். சில மணிநேரங்களில் பேன்கள் இறங்கி விடும்.

- உள்ளிப் பூண்டை மிகவும் மிருதுவான குழம்பாக அரைத்து எடுத்துக் கொண்டு அதில் சிறிதளவு எலுமிச்சைச் சாற்றைக் கலந்து தலைக் கூந்தலில் தேய்த்து நீராட வேண்டும். இரண்டு மூன்று குளியல்களில் பேன்கள் இருந்த இடம் தெரியாமல் போகும். ஆனால் பூண்டின் மணம் சிலருக்கு ஒத்து வர வேண்டும். இதை மாற்றத் தேங்காய் எண்ணெயைத் தேய்த்துக் கொள்ள



வேண்டியது தான் வழி!

பேறுகாலப் பெண்களுக்கு நெல்லிக்காய்:

கருப்பைக் கோளாறுடைய பெண்கள் நெல்லிக்காய் லேகியம், சூரணம் இவற்றை உட்கொண்டு கோளாறு நீங்கப் பெறலாம். அத்துடன் உடல் ஆரோக்கியமும் வளம் பெறும்.

- சிறுநீரகக் கோளாறுகள் உட்பட எத்தனையோ நோய்களிலிருந்து குணம்பெற நெல்லிக்காய் உதவுகிறது.

காய்ச்சல் குணமாக:

'லங்கணம் பரம ஔஷதம்' என்று

ஒரு வழக்கு உண்டு. சுரம் ஏற்படுகிறபோது தண்ணீர் மட்டும் பருகி ஒருவேளை பட்டினி கிடந்தால் காய்ச்சல் தணியும். முன்பெல்லாம் புழுங்கல் அரிசியைக் குருணையாக உடைத்துத் தண்ணீரில் இட்டுக் கொதிக்க வைத்து அந்த நீரை மட்டும் பருகத் தருவார்கள். பின்னர் பார்லியைக் கொதிக்க வைத்துத் தரும் வழக்கம் ஏற்பட்டது. இதனால் சிறுநீர் நன்கு வெளியாகி, உடம்பின் மிகை வெப்பமான சுரம் தணியும்.

● மஞ்சள் பொடியைச் சூடான பாலில் போட்டுக் கலக்கிப் பருகுவதும் காய்ச்சலைத் தணிக்கும். மிளகும் சீரகமும் சேர்த்துப் புளிகுறைவான ரசம் வைத்துச் சாதத்துடன் கலந்து



சாப்பிடலாம்.

நகச் சுற்று நீங்க:

விரல் நுனிப் பகுதியில் நகத்தின் வேர்ப்புறத்தில் ஏற்படுகிற கோளாறு. பெரும்பாலும் பல்லால் நகம் கடிப்பவர்களுக்கு ஏற்படக்கூடும். இப்போதெல்லாம் சுத்தமாக இல்லாத 'நெயில் கட்டர்'களும் இதற்குத் துணை போகின்றன. நகம் வெட்டுகிறபோது ஓரங்களில் நின்று விடுகிற நகத்துணுக்கைப் பற்றி இழுக்கும் போது கொஞ்சம் சதையும் பிய்ந்து வரும். கவனிக்காமல் விட்டால் சீழ் கோர்த்துக் கொண்டு நெரியும் கட்டிவிடும்.

நகக் கண்ணில் காயம் பட்டு விட்டது என்று உணர்ந்த உடனேயே செய்ய வேண்டியது:

1. பாலின் ஏட்டைத் தனியாக எடுத்து நல்ல சுத்தமான வெள்ளைத் துணியில் தடவி, எரிச்சல் நோவு ஏற்படுள்ள பகுதியில் படும்படி வைத்து நன்றாகச் சுற்றிக் கட்டுப் போட வேண்டும்.

2. பாலேட்டில் விளக்கெண்ணெய் கலந்து குழைத்தும் பூசி கட்டிவைக்கலாம்... இந்த முன்னேற்பாடு நகச் சுற்று வராமல் தடுக்கும்.

வந்து விட்டால்:

கடுக்காயின் தோலை வினிகர்

விட்டு வெண்ணெய்போல் அரைத்து விழுது ஆக்கி, கனமாகப் பத்துப் போடுகிறமாதிரி நகச் சுற்றுப் பகுதியில் பூச வேண்டும். இந்தப் பூச்சு உலர உலர எடுத்துவிட்டு மறுபடியும் பூச வேண்டும்.

● நல்ல கொழுந்து வெற்றிலைகள் பத்துப் பதினைந்து எடுத்துத் துடைத்து அளவோடு நரம்புப் பகுதியில் சுண்ணாம்பைப் பூச வேண்டும். பிறகு இந்த வெற்றிலையை அம்மியில் வைத்து விழுதாக அரைத்து மருதாணி இடுகிற மாதிரி, கனமாக விரலைச் சுற்றிப் பூசிக் கட்டிவிட வேண்டும்.

இம்முறைகளால் சீழ்பிடித்த





பகுதி, தானே உடைந்து சீழ் வெளியேறி விடும். தொடர்ந்து இரண்டு மூன்று முறை இப்படிச் செய்தால், சீழ் வெளியேறி விரல்கள் பழைய நிலைக்கு வந்து விடும்.

களைப்புப் போக்க:

பனஞ்சீனி, பனை வெல்லம் மிகவும் நல்ல மருந்துப் பொருள். ஜெர்மன்,

பிரான்சு யுத்தத்தின்போது சர்க்கரையின் சக்தியை ஜெர்மானிய விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள்.

போர்வீரர்கள் ஒவ்வொருவரிடமும் சிறுசிறு பைகளில் சீனியை நிரப்பிக் கொடுத்து அனுப்புவார்கள். வீரர்கள் களைப்படையும் போது ஒரு கட்டளை பிறக்கும். 'நில்! சீனியைச் சாப்பிடு!' அந்த வீரர்கள் ஒரு கை சீனியை அள்ளிச் சாப்பிட்டு விட்டு நடப்பார்கள்.

இந்த ரகசியத்தைப் பிரஞ்சுக்காரர்கள் புரிந்து கொள்ள வெகு நாட்களானது.

இன்றைக்கும் அதிகம் நடந்த களைப்பு, வேலை செய்த களைப்பு ஏற்படுகிறபோது வெறும் தண்ணீரில்



சர்க்கரையை நிறையப் போட்டுக் கலக்கிக் குடித்தால் புத்துணர்வு ஏற்படும். இதே வேலையைத்தான் வர்த்தக ரீதியான 'குளுகோஸ்' தூளும் செய்கிறது.

இந்தச் சர்க்கரை, பனஞ்சீனி, பனைவெல்லம் ஆனால் இன்னும் நல்லது. இதில் உள்ள ஊட்டச்சத்து மிகவும் அதிகமானது.

● களைப்பு நீக்க மட்டுமல்லாமல், கோடை வெப்பக் கொடுமையிலிருந்து விடுபடவும் அரு மருந்தாக உள்ளது 'பதனீர்'. அரசாங்கப் பனை பொருள் விற்பனை நிலையங்களிலேயே தினமும் காலையில் வந்தவுடன் விற்றுத் தீர்ந்து போய் விடுகிற குளிர் பானம் இந்தப் பதனீர்தான்.

பற்களைப் பாதுகாக்க:

எலுமிச்சை! இதன் மருத்துவப் பயன்கள் ஏராளமானது. எலுமிச்சைச் சாறுடன் பாதாம் கொட்டையின் தோலை விழுதுபோல் அரைத்துப் பல் துலக்கி வந்தால் பற்கள் முத்து வெண்மையில் ஒளிவிடும். எலுமிச்சை நல்ல கிருமிநாசினி கூட என்பதால் கிருமிகளால் ஏற்படக் கூடிய நோய்கள், கெட்டவாடை இவையும் அகலும். ஈறுகளில் இரத்தம் கசிவதையும் எலுமிச்சைச்சாறு தடுத்து விடும். மிதமான வெப்பமுள்ள நீரில் அரை மூடி எலுமிச்சையைப் பிழிந்து வாய்கொப்பளத்து வரவேண்டும்.



விதம் விதமான ‘டாக்டர்கள் பரிந்துரைப்பவை’ என்கிற விளம்பரங்களோடு ஏராளமான பற்பசைகள் வருகின்றன. இருப்பினும் விரலால் ஏற்றியெடுத்து அழுந்தத் தேய்க்க உதவும் பற்பொடிகளும் விற்பனையாகின்றன. இதற்கு மிகவும் வசதியானது நெல், கோதுமை உமியைக் கரியாக்கிப் பொடி செய்து வைத்துக் கொள்வது. ‘நைசாக’ச் சலித்து, சுத்தமாக வைக்க வேண்டும். மென்மையான ஈறுகளைக் காயப்படுத்தாமல் பற்களைச் சுத்தம் செய்ய இந்தக் கரிப்பொடி உதவும்.

இந்த உமிக்கரியைப் பொடியாக்கும் போது சிறிதளவு பொடி உப்பு, கடுக்காய்த் தோலின் தூள், ஓமம், கிராம்பு



இவற்றைச் சேர்த்துக் கொள்வது குணமும் மணமும் ஊட்ட வல்ல சிறப்புடையது.

● பல் ஈறுகளில் வீக்கம் வலி ஏற்படுகிறபோது, உப்பில் நன்றாக ஊறிக் காய்ந்த நாரத்தங்காய் வற்றலின் ஒரு துண்டை எடுத்து வலிகண்ட பகுதியில் வைத்து அழுத்திக் கொள்ள வேண்டும். ஊறும் உமிழ் நீரைத் துப்பிவிட வேண்டும்.

● கிராம்பு என்கிற லவங்கத்தை அப்படியே கடித்துச் சொத்தையான பல்லின் மீது அழுத்திக் கொள்ள, வலி குறையும். நவீன முறைகளின்படி சொத்தையான, உடைந்த பற்களை அவ்வப்போது அகற்றி விடுவதே பல் நோவு உட்படப் பல நோய்களை அண்ட விடாமல் பாதுகாக்கிறது.

இருமல்:

வறட்டு இருமலாக வருகிறபோது

வேதனை அதிகமாக இருக்கும். சளியோடு கூடிய இருமலின் போது வாய்த் திறப்பின், கிருமிகள் தெறித்துப் பரவி மற்றவர்களுக்கும் சங்கடத்தை உண்டு பண்ணும். பொதுவாக இருமல் அல்லது தும்மல் ஏற்படுகிறபோது அண்டை அயலாரின் நலன்கருதி, முன்னால் ஒரு கைக்குட்டையை வைத்துச் சிதறல்களை அதில் படியச் செய்வது நல்லது. எப்படியாயினும் இருமலையோ, தும்மலையோ 'நாகரிகம்' கருதிக் கூட அடக்க முயல்வது கூடாது.

● அதிமதுரம் என்று நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். கடுக்காய், மிளகு இவற்றோடு சேர்த்து வறுத்துப் பொடியாக்கி வைத்துக் கொண்டு, தேன் கொஞ்சம் கலந்து சாப்பிட்டால் வறட்டு இருமல் குணமாகும்.

● சித்தரத்தை என்று ஒரு மருந்து. இதையும் பொடியாக்கிப் பனஞ்சீனியோடு சேர்த்து உண்ணலாம். வெறும் சித்தரத்தைத் துண்டு ஒன்றையே கடைவாயில் வைத்து அடக்கிக் கொண்டால் போதும். தொடர்ந்து இருமுவது நிற்கும். ஆனால் சித்தரத்தையை அடக்கிக் கொண்ட இடத்தில் அழற்சி ஏற்பட்டது போல் தோன்றக் கூடும். அப்போது ஊறிவிட்ட சித்தரத்தையை நன்றாய்க் கடித்துச் சாறை விழுங்கலாம். இருமலுக்கு நல்ல குணம் தரும்!

ஜலதோஷம்:

கிட்டத்தட்ட மருந்தே இல்லாமல் அனுபவித்தே தீர வேண்டிய நோய் இது. பிரபலமான சொல் வழக்கு ஒன்று உண்டு. "மருந்து சாப்பிட்டால் ஒரு வாரத்திலும், மருந்து இல்லாமல் ஏழு நாட்களிலும் ஜலதோஷம் சரியாகி விடும்." அதுதான் நிஜம்!

கடும் கோடைக்குப் பிறகு மழைத் தூறல் விழுகிறபோது தரை மண்ணில் உறங்கிக் கிடக்கும் நுண் கிருமிகள் மேலே எழுந்து வரும். 'கப்'பென்று பிடித்துக் கொள்ளும். அப்புறம் 'உங்கள் பாடு, ஜலதோஷத்தின் பாடு' அவ்வளவுதான்.



தெனாலி ராமன் கதையில் கூட வரும். தன் முன்னால் பத்துத் தலைகளோடு பிரசன்னமான காளிதேவியைப் பார்த்துத் தெனாலிராமன்

சிரித்தானாம். 'ஏன் சிரிக்கிறாய்?' என்று காளி தேவி மிரட்டினாளாம்.

''எனக்கு ஒரு மூக்கில் ஜலதோஷம் பிடித்தாலே திண்டாடுகிறேனே, உனக்குப் பத்து மூக்காயிற்றே... என்ன பாடு படுவாய் என்று நினைத்தேன்... சிரித்தேன்'' என்றானாம் அவன்.

தொலைக்காட்சி விளம்பரங்களில் மட்டும்தான் ஒரே மூச்சில் ஜலதோஷம் 'ஆச்சர்யமான' முறையில் மறையும். இருப்பினும் ஏதோ ஓரளவு 'ரிலீஃப்' இருப்பதாக நினைத்து மகிழலாம்.

● பரம்பரையான 'யூகலிப்டஸ்' தைலத்தை ஒருவர் பூசிக் கொண்டால், அந்த வாசனையை மோப்பம் பிடிக்க நேருகிறவருக்கும்



மூக்கில் நமைச்சல் ஏற்படும். கூடிய வரை மூக்கை நசுக்கிக் கசக்காமல் இருந்தாலே, ஜலதோஷம் ஆர்ப் பாட்டம் செய்யாமல் போய்விடும்.

● ஐந்தாறு துளசி இலைகளைப் பறித்து அதனுடன் சிறிதளவு இஞ்சித் துண்டைச் சேர்த்து, மென்று விழுங்க லாம். அதன் பிறகு கொஞ்சம் வெந்நீர் பருக வேண்டும். இரண்டு மூன்று நாட்களில் தானே குணம் தெரியும். (அதற்குள் ஜலதோஷ வேதனையும் 'பழகி'யிருக்கும்!)

● விட்டமின் – சி, நிறைய உள்ளது நெல்லிக் கனி. காலையில் இரண்டு நெல்லிக்காய்களை மென்று விழுங் கலாம். அல்லது சாறு எடுத்து இரண்டு



ஸ்பூன் சாப்பிடலாம். இரண்டு மூன்று நாட்களில் இதுவும் குணம்தரக் கூடும்.

நெல்லிக்காயின் சிறப்பு–அது எப்போதும் கிடைக்காது என்பதுதான். கிடைக்கும்போது வாங்கிச் சுளை சுளையாக உரித்து வெயிலில் நன்றாய் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டியதுதான். இந்த வற்றலை வெந்நீரில் ஊற வைத்து வடிகட்டிச் சிறிது தேன் கலந்து பருகினாலும் பலன் கிடைக்கும்.

இவையெல்லாம் சாதாரணமான மருத்துவக் குறிப்புக்கள். பெரும்பாலும் அனுபவ மருத்துவம், வீட்டு மருத்துவம் என்கிற வகைப்படும். ஏற்கெனவே எல்





லோருடைய உடம்பும் பல்வேறு தருணங்களில் ஏதாவது ஒரு ஆண்டிபயாடிக் மருந்துக்குப் பழகிப் போயிருக்கும். ஆங்கில மருத்துவத்தின் பக்கமே தலை வைத்துப் படுக்காமல் வெறும் 'சுக்கு திப்பிலி' வைத்தியத்திலேயே இன்னும் சிலர் ஆரோக்கியமாக வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் பாக்கியவான்கள்!

நோயின் தீவிரம் அதிகமாக இருப்பின் இந்த மருந்துக் குறிப்புக்கள் அதிகம் பலன் தர முடியாது. உரிய மருத்துவர்களை நாட வேண்டியது தான் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொகுப்பு: **சுப்ர. பாலன்**

எல்லை மீறினால் தொல்லை!



• டாக்டர் பரத்மூர்த்தி

எல்லா வியாதிகளுக்கும் கை வைத்தியம் உண்டுதான். ஆனால் விஷயம் கை மீறாமல் இருக்கிற வரைதான் அவற்றைப் பிரயோகித்துப் பார்க்கலாம். ஜுரம், தலை வலி, வயிற்றுவலி போன்ற பொதுவான உடல்நலக்குறைவுகளைக்கூட ஓரளவுக்குமேல் அலட்சியப்படுத்தக் கூடாது; குறிப்பிட்ட சில அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தால் உடனே டாக்டரைப் பார்த்துவிட வேண்டும். அதன் மூலம் தேவையற்ற பின் விளைவுகளைத் தவிர்க்கலாம் என்கிறார் தமிழ்நாடு ஹாஸ்பிடலில் பணி புரியும் டாக்டர் பரத் மூர்த்தி.

ஓரளவு என்றால் எந்த அளவு? விவரித்தார்:

ஜுரம்: நூறு டிகிரி– அதற்குமேல் ஜுரம் என்றால் வீட்டில் பார்க்கிற மருத்துவம் உதவாது. வீட்டில் ஒரு தெர்மாமீட்டர் வைத்திருக்க வேண்டும். ஜுரம், 100 டிகிரியைத் தாண்டுவது தெரிந்தால் டாக்டரை அணுகி விடவேண்டும். ஜுரம் தொடங்கிய முதல் நாளே 104-105 டிகிரி காண்பித்தால் சொந்த வைத்தியம் எதுவும் செய்யக் கூடாது. லேசான ஜுரம்தான்



ஏனில் க்ரோஸின், மெட்டாஸின் சாப்பிடலாம். அல்சர் பிரச்னை இல்லாதவர்கள் ஆஸ்பிரின் உட்கொள்ளலாம். ஆனால் கூடவே நிறைய தண்ணீர், ஜூஸ் அருந்த வேண்டும். நிட உணவு களைத் தவிர்த்துவிட வேண்டும்.

தலைவலி: இதற்கு பெயின் பாம்கள் போதும். ஆனால் தூங்க விடாத தலைவலி, தூக்கத்திலிருந்து எழுப்பி உட்கார வைக்கும் தலைவலிக் கெல்லாம் அது உதவாது. சிலருக்கு ஜுரம் இருக்காது. ஆனால், தலை வலியுடன் வாந்தி வரும்! மிக ஆபத்து அது. மூளைப் பகுதியைச் சுற்றி ப்ரெஷர் கூடுவதால் உருவாகிற கோளாறு இது. தலைவலியுடன் கை,

கால் வலி, கண் மறைக்கிறபடி இருள் படர்வது- இதெல்லாம் இருந்தால் அது ட்யூமரின் அறிகுறி. உடனே டாக்டரைப் பார்த்து விட வேண்டும்.

வயிற்றுவலி: Antacids மாத்திரைகளை வீட்டில் வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் அடிக்கடி வயிற்று வலி வந்தால் வேறு ஏதோ பிரச்னை என்று அர்த்தம். வயிற்று வலியுடன் வாந்தி, மோஷன் ஆகாமல் இருத்தல்- இவை இருந்தால் உடனடியாக டாக்டர் உதவி அவசியம். சமயத்தில் ஆபரேஷன் அளவுக்குக் கூடக் கொண்டு போய்விடும். வயதானவர்கள் ஒருபோதும் வயிற்று வலியை உதாசீனப் படுத்தக் கூடாது.

கடுமையான வலியுடன் டாய்லெட் போகும்போது, மலத்துடன் ரத்தம் வந்தால் அது, பெருங்குடலில் கான்ஸருக்கான அறிகுறி.

டயரியா: டயரியா வேறு. டிஸென்ட்ரி வேறு. சாதாரணமாக லூஸ் மோஷன் ஆவது டயரியா. இதற்குக் காரணமெல்லாம் இல்லை. ஆபத்தும் இல்லை. உடம்பு மட்டும் சோர்வடையும். இளநீர், எலக்ட்ரால் சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் போதும்.

டிஸென்ட்ரி என்பது அமீபா மற்றும் பாக்டீரியாக்களால் வருவது. பெரும்பாலும் உணவுக் கோளாறு, சுத்தமற்ற குடிநீர்- இவை மூலம் வரும்.



ஐந்து முறைக்கு மேல் லூஸ் மோஷன் ஆனால் உடனே டாக்டரைப் பார்த்து விடுங்கள். முக்கியமான விஷயம். உடலிலிருந்து வெளியேறும் நீரின் அளவுக்கேற்ப தண்ணீர், இளநீர், எலக்ட்ரால் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி தண்ணீர் அருந்தாவிட்டால், உடலில் நீர்ச்சத்து குறைந்து, மயக்கம் வரும். டிரிப்ஸ் ஏற்ற வேண்டி வரும்.

ஜலதோஷம்: இதற்கு ஏன் மருந்து இல்லை தெரியுமா? சுமார் 200 வித வைரஸ்களால்

வரக்கூடிய வியாதி இது. எல்லா வைரஸ் தாக்குதலுக்கும் மருந்து உண்டு. ஆனால் எந்த வைரஸ் குறிப்பிட்ட நோயாளியைத் தாக்கியிருக்கிறது என்று கண்டுபிடிக்க 200 பரிசோதனைகளா செய்து பார்க்க முடியும்? அதற்குள், இருக்கிற வைரஸ் கிருமி பலவீனமடைந்து ஜல்ப் நின்று விடும்! ஆனால் ஜலதோஷம் இருக்கிற போது கட்டிச் சளியும் கண்ணில் நீரும் வந்தால் அது ஆபத்து! அப்போது கைவைத்தியம் வேண்டாம்!

மார்பில் வலி: மார்பு வலி என்பது ஹார்ட்டிலிருந்து மட்டும் வரக்கூடியது அல்ல! இதயத்தைச் சுற்றி உள்ள எந்தப் பிரதேசமும் எப்போதும் வலிக்கலாம். சுருக் சுருக்கென்று இடது மார்புப் பக்கம் சிலருக்கு வலிக்கும். உடனே அதை ஹார்ட் அட்டாக் என்று முடிவு செய்ய வேண்டாம். முதுகில் வலித்தால் கூட மார்பில் வலிப்பது போலத்தான் இருக்கும். ஆனால் அடிக்கடி இப்படி வலித்தால் டாக்டரை அணுகுவது நலம். ஏனெனில், வலிப்பது இதயத்தில் தானா என்று கண்டுபிடிப்பது டாக்டர்களுக்கே சிரமமான காரியம். 10-15 கேள்விகள் உங்களிடம் கேட்கப்படும். நீங்கள் சொல்கிற பதிலை வைத்துத்தான் வலி எங்கே என்று டாக்டர்களாலேயே அனுமானிக்க முடியும்!

சந்திப்பு: **ஔரங்கசீப்**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS(S)M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 28.6.98

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka

